
# சுற்றுலா I

## பாடத்தொகுப்பு





பாட ஆசிரியர்

**முனைவர் நா. சேதுராமன்**

உதவிப் பேராசிரியர்

வரலாற்றுத்துறை

பெரியார் கலைக் கல்லூரி

கடலூர் – 607 001

**THIRUVALLUVAR UNIVERSITY**
**BACHELOR OF ARTS**
**B.A. HISTORY**
**DEGREE COURSE**
**CBCS PATTERN**
**(With effect from 2017-2018)**

## SEMESTER III - ALLIED – 2 - PAPER -3

## TOURISM I

### UNITI

Definition of Tourism - History of Travel and Tourism through the Ages-Basic conceptsin Tourism-Domestic and International.

### UNITII

Basic components of Tourism- Scope -Impact of Tourism on Socio, Economic, Culturaland Environment.

### UNIT III

Tourist resources in India with special reference to Tamil Nadu -Art, Architecture,Monuments, Sculptures, Fairs and Festivals.

### UNIT IV

Religious resources in India with special reference to Tamil Nadu - Places of Pilgrimage - Hindu, muslim, Buddhism, Christian and Jain.

### UNITV

Tourism Administration of India-Ministry of Tourism-State Tourism Department - Accommodation - Public, State and Private Agencies - ITDC - TTDC.

### Reference Books:

1. A.K. Bhatia, *Tourism development principles and practices*, Sterling publishers (P)Ltd., New Delhi.
2. Anand, M.M., *Tourism and hotel industry in India*, Sterling Publishers (P) Ltd., NewDelhi.
3. Acharya Ram, *Tourism and Cultural Heritage of India*, ROSA Publications, Jaipur.
4. R.K. Sinha, *Travel and Tourism Management*, Dominant Publishers, New Delhi.
5. Ramila Chawla, *Travel and Tourism Management*, Dominant Publishers, New
6. Delhi.
7. Prem Seth, *Successful Tourism Management - Fundamental of Tourism*, SterlingPublishers (P) Ltd., NewDelhi.
8. Nirmal Kumar, *Tourism and Economic Development*, APLL PublishingCorporation, New Delhi.

# பொருளடக்கம்


பக்கம்

பாடம் 1 சுற்றுலாவின் வரையறை ... 3

பாடம் 2 பயணம் மற்றும் சுற்றுலாவின் வரலாறு ... 6

பாடம் 3 உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலா ... 15

பாடம் 4 சுற்றுலாவின் அடிப்படைக்கூறுகள் ... 19

பாடம் 5 சமூகம், பொருளாதாரம், கலாசாரம் மற்றும் சுற்றுச்சூழல் மீது சுற்றுலாவின் தாக்கம் ... 25

பாடம் 6 இந்தியாவின் குறிப்பாகத் தமிழகத்தின் சுற்றுலா வளங்கள் (கலை, கட்டிடக்கலை, நினைவுச் சின்னங்கள், சிற்பங்கள், பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள்) ... 33

பாடம் 7 இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் உள்ள மதவழிபாட்டு மற்றும் புனித யாத்திரைத் தலங்கள் (இந்து, இஸ்லாம், புத்தம், கிறிஸ்துவம் மற்றும் சமணம்) ... 38

பாடம் 8 இந்தியாவில் சுற்றுலா நிர்வாகம்(இந்திய சுற்றுலா அமைச்சகம் மற்றும் மாநில சுற்றுலாத் துறை) ... 49

பாடம் 9 சுற்றுலா தங்குமிடங்கள் ... 54

பாடம் 10 அரசு மற்றும் தனியார் சுற்றுலா முகாமைகள் ... 63

பாடம் 11 இந்திய சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் ... 67

பாடம் 12 தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் ... 72

# பாடம் 1

# சுற்றுலாவின் வரையறை

உலகத்தில் இன்று அனைவராலும் அறிந்து பேசப்படும் வார்த்தையான சுற்றுலா மக்களின் விருப்பத்தேவைகளில் ஒன்றாக மாறிவிட்டது. காணக்கிடைக்காதவை, ஆர்வத்தைதுண்டக்கூடியவை, மனதிற்கு இன்பத்தை தரக்கூடியவை, இயற்கைக் காட்சிகள் போன்றவைகளைக் காண மக்கள் விரும்புகின்றனர். தான் வசிக்கும் இடங்களிலிருந்து பிற இடங்களுக்கு சென்று காணும் ஆர்வமே சுற்றுலா தோன்றுவதற்கு முக்கிய அடிப்படைக் காரணமாகும். ஒவ்வொரு மனிதனும் மன மகிழ்ச்சிக்காகவும், ஓய்வு நேரத்தை இன்பமாக மாற்றவும் சுற்றுலாவை விரும்புகிறான். அதிகமாக கிடைக்கும் ஓய்வு, வருமானத்துடன் கூடிய விடுப்பு, மக்களின் வாழ்க்கைநிலை மாற்றம், போக்குவரத்து முன்னேற்றம், விரைவான செய்தித் தொடர்பு கொள்ளும் வசதி, மக்களின் செலவழிக்கும் திறன் போன்றவை சுற்றலாவை ஒரு முக்கியமான தொழிற்துறையாகவே மாற்றியுள்ளது. சுற்றுலா துறையானது இன்று உலகளவில் அதிகமான வருமானம் தரும் தொழில்களுக்கு இணையாக தொழிற்துறையாக விளங்குகிறது.

தற்போதைய சூழ்நிலையில் இரயில், விமானம், தரைவழிப் போக்குவரத்தில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு பிறகே சுற்றலா அதிகரித்துள்ளது. ஒரு நாட்டின் சுற்றுலாத் துறை முன்னேற்றமானது அந்த நாட்டின் அரசியல் பொருளாதாரநிலையை அடிப்படையாக கொண்டே அமைகிறது. வளரும்நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் மிக முக்கியமான தொழிற்துறையாக விளங்கி வருவது சுற்றுலா துறையே ஆகும். சுற்றுலா மூலம் கிடைக்கும் வருமானம் பின்தங்கிய அந்த நாடுகளை முன்னேற்றமடைய பெரிய அளவில் உதவுகிறது. சுற்றுலா தேசிய வளர்ச்சிக்கான மிக முக்கியமான பொருளாதார நடவடிக்கை மட்டுமல்ல, உலக நாடுகளுக்கிடையே கலாச்சார, பண்பாட்டு பரிமாற்றங்கள் செய்து கொள்ள உதவும் ஒரு துறையாகவும் ஆகவும் விளங்குகிறது.

**சுற்றுலாவின் பொருள் விளக்கம்**

சுற்றுலா “TOURISM” என்ற ஆங்கில வார்த்தையின் தமிழ்சொல்லே சுற்றுலா ஆகும். பல பகுதிகளை சுற்றி வருவதற்கு பயணம் என்று பெயர். பயணம் என்பதின் ஆங்கில சொல் ‘TOUR’ ஆகும். இதிலிருந்து உருவான வார்த்தையே ‘TOURISM’ ஆகும்.

‘TOUR’ என்ற ஆங்கில வார்த்தையானது “TORNOS” என்ற இலத்தீன் சொல்லிருந்து பிறந்தது ஆகும். டோர்னஸ் என்ற லத்தீன் வார்த்தை

சக்கரத்தினைக் குறிக்கிறது. சுருங்ககூறின் டோர்னஸ் என்ற வார்த்தை சுற்றிவருவதைக் குறிக்கிறது. இவ்வாறு லத்தீன் மொழியிலிருந்து பிறந்த TOUR என்ற சொல்லானது கி.பி. 1292-ல் ஆங்கில மொழியில் இணைந்தது. எனவே பல இடங்களுக்குச் சென்று ரசித்து விட்டு மீண்டும் தனது இருப்பிடதிற்கே வந்து சேர்வதைத்தான் இந்தTOUR என்ற வார்த்தை குறிக்கிறது.

மேலும் TOUR என்ற வார்த்தையானது TORAH என்ற ஹீப்ரு வார்த்தையிலிருந்தும் பெறப்பட்டதாக சொல்லப்படுகிறது. TORAH என்றால் யூத சட்டத்தை படித்து ஆராய்வதைக் குறிக்கிறது. சுற்றுலா என்பதும் பயணி ஒருவர் தான் செல்லும் இடங்களைப் பற்றி அறிந்து கொள்வதும் ஆகும்.

**சுற்றுலா வரையறை**

சுற்றுலா என்பதற்கான விளக்கம் பல அறிஞர்களாலும் நிறுவனங்களாலும் கொடுக்கப்பட்டுள்ளது. அவைகள் :

- ஹெர்மான் வி. ஷெல்லார்ட் என்ற ஆஸ்திரிய நாட்டு பொருளாதார நிபுணர் 1910-ம் ஆண்டு அளித்த விளக்கமே சுற்றுலா பற்றிய மிக முந்தைய விளக்கமாகக் கருதப்படுகிறது.

"பல்வேறு நடவடிக்கைகளின் கூட்டுத் தொகையே சுற்றுலா ஆகும். இது முக்கியமாக பொருளாதார நடவடிக்கை சம்பந்தப்பட்டது. ஒரு நாடு, நகரம் அல்லது நாட்டின் ஒரு பகுதியில் வெளிப்பகுதியை சேர்ந்த ஒருவர் நுழைந்து, அங்கு தங்கி செயல்படுதல் சம்பந்தப்பட்ட நடவடிக்கையே சுற்றுலா ஆகும்".

- சுவிட்சர்லாந்து நாட்டுப் பேராசிரியர்களான ஹன்ஷிகர், கிராப்ஃ (Hunziker and Krapf) ஆகியோர் கூற்றுப்படி:

"பயணிகளின் பல்வேறு செயல்பாடுகளின் ஒட்டுமொத்தமே சுற்றுலா ஆகும். மற்ற இடத்திற்கு சென்று நிலையாகத் தங்கி வாழவேண்டும் என்ற எண்ணத்தில் அல்லாமல் அந்நியர்களால் மேற்கொள்ளப்படும் பயணம் மற்றும் தங்குதல் ஆகியவற்றின் மொத்த செயல்பாடுகளே சுற்றுலா ஆகும்".

- இங்கிலாந்தின் சுற்றுலாக்கழகமானது 1976-ல் சுற்றுலா என்பதற்கான விளக்கமானதினை கீழ்கண்டவற்றினை கூறுகின்றது

"சுற்றுலா என்பது ஒருவர் தான் வாழ்ந்து வரும் அல்லது வேலை பார்த்து வரும் இடத்திலிருந்து வெளியிடத்திற்கு சிறிது காலம் சென்று தங்கி அங்குள்ள பல பகுதிகளுக்கு இன்பப்பயணம் மேற்கொண்டு பார்த்து வருவதே சுற்றுலாவாகும்".

- அப்துல் வஹாப் என்பவர் கொடுத்துள்ள வரையறை இன்னும் தெளிவாகவும் சுற்றுலாவின் தன்மையைப் பற்றி அறிந்து கொள்வதாகவும் அமைந்துள்ளது.

"சுற்றுலா எனப்படுவது ஒரு குறிப்பிட்ட புவி இயல் எல்லையைத் தாண்டியோ, நாட்டிற்குள்ளேயோ இருக்கின்ற மக்களுக்கிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தக்கூடிய பயனுள்ள நடவடிக்கையாகும்.

அது ஊதிய நோக்கம் கருதாது, பல்வேறு வகையான விருப்பங்களை நிறைவு செய்வதற்கு மேற்கொள்ளப்படுகின்ற தற்காலிகமான வட்டாரம், நாடு, கண்டம் போன்றவற்றின் இடையே ஏற்படுகின்ற இடப்பெயர்ச்சியே ஆகும்."

- ஜோஸ் இக்னாசியோ டி அரில்லாகா என்பவர் புதுவிதமான வரையறையினை சுற்றுலாவிற்கு அளித்துள்ளார்.

"விளையாட்டுப் போட்டிகளைக் காணச்செல்லுதல், ஊர்களைச் சுற்றிப் பார்த்தல், சைக்கிள்களில் பயணம் செய்தல், உல்லாசப் படகுகளில் பயணம் செய்தல், முகாமிடல், மனமகிழ்ச்சிக்காகப் பிற இடங்களுக்குச் செல்லுதல் ஆகியவைகளின் ஒருங்கிணைப்பாகக் கருதப்படுவதே சுற்றுலா ஆகும்".

- பூர்காட், மெட்லிக் ஆகியோர் தந்துள்ள விளக்கம் பின்வருமாறு:

"சுற்றுலா என்பது ஒரு பயணியின் குறுகிய காலப் பயணமாகும்" தங்கள் இருப்பிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பயணம் செய்வதும் அந்த இடங்களில் தற்காலிகமாகத் தங்குவதும் ஆகும்.

- இங்கிலாந்தில் 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற பன்னாட்டு சுற்றுலா மாநாட்டில் அளித்துள்ள விளக்கம் வருமாறு:

சுற்றுலா என்பது ஒரு குறிப்பிட்ட மக்களால் தாங்கள் வசித்துவரும் சூழலுக்கு அப்பால் சென்று செயல்படும் நடவடிக்கைகளேயாகும்"

மேற்கண்ட பலவகைப்பட்ட வறையறை மற்றும் விளக்கங்களை ஆராயும் போது சுற்றுலாவானது பயணத்துடன் தொடர்புடையது ஆகும். ஒருநபர் அல்லது குழு தான் இருக்கும் இடத்தில் இருந்து மனதிற்கு இன்பம் பெறும் நோக்கத்துடன் பிற இடங்களுக்கு பயணம் செய்வது ஆகும். பயணம் செய்யும் இடங்களில் தற்காலிகமாகத் தங்குவதும் ஆகும். அத்துடன் அந்த பயணியின் தங்குதலானது பணம் சம்பாதிப்பது சார்ந்த எந்த செயலுடனும் சம்பந்தப்பட்டிருக்கக்கூடாது.

# பாடம் 2

# பயணம் மற்றும் சுற்றுலாவின் வரலாறு

**சுற்றுலாப் பயணி**
**(Tourist)**

சுற்றுலாப்பயணி என்ற வார்த்தைக்கு பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பொதுவாக சுற்றுலாப்பயணி என்ற சொல்லிற்கு மனமகிழ்ச்சிக்காக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்பவர்' என்று பொருள் ஆகும். "தான் வாழும் இடத்தை விட்டு இன்பத்திற்காகவோ பிற காரணங்களுக்காகவோ செல்லும் பொழுது இன்பத்தையும் கலந்தே பயணம் செய்பவர்களைச் சுற்றுலாப் பயணிகள் என்று கூறலாம்.

**சுற்றுலாப்பயணி என்பதற்கு கொடுக்கப்பட்ட விளக்கம் பின்வருமாறு:**

**யுனிவர்சல் அகராதியில்**

- "சுற்றுலாப்பயணி என்பவர் ஆர்வம், மகிழ்ச்சி காரணமாகவும் சுற்றுலா செல்வதால் ஏற்படும் மகிழ்ச்சியை அனுபவிப்பதற்காகவும் சுற்றுலா மேற்கொள்பவர் ஆவார்.

- தாம் சென்ற இடங்களைப் பற்றி மற்றவர்களிடம் தற்பெருமையாகச் செல்பவரும், அதிலிருந்து இன்பத்தினை பெறுபவரும் சுற்றுலாப் பயணி எனப்படுவார்".

**பன்னாட்டுக் கழகத்தின் பொருளாதாரக் குழு**

- ஒருவர் 24 மணி நேரத்திற்கு அதிகமாக தான் இருக்கும் நாட்டை விட்டு வேறு இடத்திலோ, வேறு நாட்டிலோ பயணம் செய்தால் அவர் சுற்றுலா பயணி என்று அழைக்கப்படுவார்'

- சுற்றுலாப் பயணி அல்லாதவர் யார் (Tourist and Non-Tourist) என்பதற்கும் விளக்கம் கொடுத்துள்ள இக்குழு பன்னாட்டுக் மாநாடு, கருத்தரங்கு, பயிலரங்கு, விஞ்ஞானம், மதம், விளையாட்டு போன்றவைகளில் உறுப்பினராக கலந்து கொள்பவர்கள்.

**லிக்கோரிஷ் (Lickorish) என்பவர் கூறுப்படி**

- 24 மணி நேரத்திற்கு அதிகமாகவும் 12 மாதத்திற்குக் குறைவாகவும் பயணம் சுற்றுலாப்பயணி என்று அழைக்கப்படுவார்.

**நார்வல் என்ற பொருளாதர நிபுணர் கூறுப்படி**

- நிரந்தரமாகத் தங்கும் நோக்கம் இல்லாமலும், வேலை செய்யும் நோக்கம் இல்லாமலும் மற்றொரு நாட்டிற்குச் பயணம் செல்பவர்தான் சுற்றுலா பயணி என்று அழைக்கப்படுவார்.

**சுற்றுலா பயணி என்பதற்கு 1971-ம் ஆண்டு முதல் இந்தியா வகுத்துள்ள பொருள் விளக்கம் வருமாறு:**

- ஒரு அண்டை நாட்டின் பாஸ்போர்ட்டுடன் நிரந்தரமாக தங்காமலும், வேலை நோக்கம் இல்லாமலும் 24 மணி நேரத்திற்கு அதிகமாக தங்க வருபவர்களே சுற்றுலா பயணி ஆவார்.

சுருங்ககூறின் 24 மணி நேரத்திற்கு மேலாக ஒரு நாட்டில் பொழுதுபோக்கு , ஓய்வு, மனமகிழ்ச்சி ஆகியவற்றிற்காகத் வந்து தங்குபவர்களே உண்மையான சுற்றுலா பயணிகள்.

**சுற்றுலாப் பயணியின் வகைகள்**

கீழ்கண்டவாறு சுற்றுலாப் பயணியினை வகைப்படுத்தலாம்.

**1.மனமகிழ்வு சுற்றுலாப் பயணிகள் (Excursionist)**

- 24 மணி நேரத்திற்கும் குறைவாகப் பயணம் மேற்க்கொள்பவர்களே இன்பச் சுற்றுலா பயணிகள் எனப்படுவர்.

**2. பொழுதுபோக்கு பயணிகள் (Recreationist)**

- ஓய்வு நேரத்தைத் தனது அறிவைக்கொண்டும், திறமைகளைக் கொண்டும் பயனுள்ள முறையில் பொழுதுபோக்க நினைப்பவர்கள் பொழுது போக்குப் பயணிகள் என்று கூறலாம்.

**எ.கா.**: ஓய்வு எடுத்தல், விளையாடுதல், நல்ல உணவு வகைகளை உண்ணுதல், தோட்ட வேலை செய்தல், விருந்துகளில் பங்கெடுத்தல், வாகனங்கள் ஓட்டுதல், படகு விடுதல், மீன்பிடித்தல் போன்றவை பொழுது போக்குகளாகும்.

**3. விடுமுறையை பயன்படுத்தும் பயணிகள் (Vacationers)**

- விடுமுறை தினங்களில் நாம் இருக்கும் இடத்திலிருந்து மற்றோரு இடங்களுக்குச் சென்று ஓய்வு எடுத்துக் கொள்பவர்களையும், நாள்தோறும் செய்யும் வேலைகளிலிருந்து விடுபட விரும்புபவர்களையும் விடுமுறையைச் செலவிடுபவர் என்று கூறலாம்.

- சுற்றுலாப் பயணியையும் விடுமுறையைச் செலவு செய்யச் செல்லும் பயணியையும் வேறுபடுத்துவது சற்று கடினமாகும்.

- விடுமுறையைச் செலவு செய்பவர் தன் நாட்டிலும் செலவு செய்யலாம் அல்லது வெளிநாட்டிற்கும் செல்லலாம்.

**4.கடந்து செல்லும் பயணியர் (Transient Tourist)**

- மாற்று வாகனங்களில் பயணம் செய்வதற்காக ஓரிடத்தில் தன் பயணத்தை நிறுத்திவிட்டு பல இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருபவரைக் கடந்து செல்பவர் என்று கூறலாம்.

- மனமகிழ்ச்சி அல்லது ஒரு நோக்கத்துடன் பொருளீட்டும் குறிக்கோளின்றி நிலையாகத் தங்காமல் ரூபாய் செலவு செய்து 24 மணி நேரத்திற்கும் அதிகமாக ஒரு இடத்திலிருந்து மற்றோரு இடத்திற்குச் செல்பவரை சுற்றுலா பயணி எனலாம்.

மேற்கண்ட மனமகிழ்வுச்சுற்றுலா, பயணிகள் விடுமுறையைச் செலவிடுபவர், பொழுதுபோக்கு பயணிகள், கடந்து செல்லும் பயணியர் ஆகியோர் இன்பநோக்கு பயணிகள் எனப்படுவர்.

வெளிநாட்டு வியபாரிகள், கல்வியாளர்கள் ஆராய்ச்சி அறிஞர்கள், தொழிற்சார்ந்தநிபுணர்கள் நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரை காணச் செல்பவர்களை இன்ப நோக்கில்லாத பயணிகள் என்று கூறலாம். இவ்வாறு சுற்றுலாப் பயணிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**சுற்றுலாவின் வரலாறு**

ஒவ்வொரு மனிதனும் மகிழ்ச்சிக்காக அல்லது இன்பப்பொழுது போக்கிற்காக தனது விருப்பத்திற்கேற்ப பல பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்கிறான். அப்பொழுது அதிசயமான சிறப்புமிக்ககட்டடங்க்களையும் , உள்ளத்தை கொள்ளை கொள்ளும் இயற்கை அமைப்புகளையும், வழிபாட்டுதலங்களையும் அதன் தொடர்பான புனித ஸ்தலங்களையும், குளிர்மிகுந்த மலைவாழிடங்களையும், ஆடம்பரமிக்க நகரங்களையும் பார்ப்பதற்கு அவன் மனம் விரும்புகின்றது. எனவே மனிதன் பணச்செலவையும் பாராமல் சுற்றுலா சென்று பரவசமடைகிறான். இதனால் தான் சுற்றுலா வேகமாக வளர்ந்து வருகிறது. இன்று உலகளவில் இரண்டாவது பெரிய தொழிற்துறையாக கருதும் நிலைக்கு சுற்றுலா வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது.

**பண்டைக் காலத்தில் சுற்றுலா**

- வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்தே மனிதன் ஓரிடத்திலிருந்து மற்றோரு இடத்திற்குச் சென்று வந்து இருக்கின்றான். ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஆதாமும் ஏவாளும் தங்கும் இடம் தேடி அலைந்தனர். அவர்களையே வரலாற்றில் முதல் பயணிகளாக நாம் கருதலாம்.

- ஆதி மனிதர்கள் உணவு மற்றும் இருப்பிடம் தேடி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர ஆரம்பித்தார்கள். பயணம் செல்வது என்பது மனிதர்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

- மனிதர்கள் தங்களையும் அறியாமல், எந்தக் நோக்கங்களும் இல்லாமல் பல இடங்களுக்கு அலைந்து திரிந்தாரகள்.

- பண்டைய காலகட்டத்தில் வெளியிடங்களுக்குப் பயணம் மேற்கொள்வது மிகவும் கஷ்டமான இருந்தது. பயணம் செய்வதற்கு அப்போது எந்தவிதமான கட்டுப்பாடுகள் கிடையாது. ஆனால் அதேபோல் உயிருக்கும் பொருள்களுக்கும் பாதுகாப்பும் கிடையாது.

- மாறுபாட்ட காலகட்டத்தினாலும் உணவுத்தட்டுப்பாட்டினாலும் தான் ஆரியர்கள் மத்திய ஆசியாவை விட்டு வேறு இடங்களுக்குச் நேரிட்டது.

- இதுவே பின் நாட்களில் வெளியிடங்களுக்குச் செல்ல புதிய பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டதின் காரணத்தினால் நெடுப்பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- பினிஷியர்கள்தான் (Phoenicians) முதன் முதலில் தற்கால முறையில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டதுடன் வாணிகமும் செய்து வந்தனர்.

- வாணிபத்தில் பணத்தை முதன் முதலாக பயன்படுத்தியவர்கள் பினிஷியர்களே ஆவர்.

- பண்டைக்காலத்தில் இந்தியாவிற்கும், சீனாவிற்கும் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டதின் அடிப்படைக் காரணம் வியாபாரமும் வாணிபமுமேயாகும்.

**கிரேக்கர்களும் பண்டைக்காலப் பயணங்களும்**

- பண்டைக்காலத்தில் கிரேக்கர்கள் பயணம் செல்வதில் அதிக ஆர்வத்தை கொண்டவர்கள் என ஹோமர் தான் எழுதிய ஒடிசி (Odyssey) என்ற காவியத்தில் சுட்டிக் காட்டுகிறார்.

- இக்காவியத்தின் கதாநாயகனான உலிசஸ் என்பவர் துணிகரமான பயண அனுபவங்கள் கிரேக்கர்களின் நெஞ்சில் பயண ஆர்வத்தைத் தூண்டியது. இந்த நூலில் அவர் பல கிரேக்க சுற்றுலாப் பயணிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

- வரலாற்றுத் தந்தையான ஹெரடோட்டஸ் ஆசியாமைனர், எகிப்து, கருங்கடல் பகுதிகளுக்குத் தான் எழுதும் நூலுக்கான வரலாற்றுச் சான்றுகளைச் சேகரிப்பதற்காக ஏறத்தாழ இரண்டாயிரம் கிலோ மீட்டர் பயணம் மேற்கொண்டுள்ளார்.

- தாலிஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் பித்தகோரஸ் போன்ற பண்டையகால வரலாற்று ஆசிரியர்கள் கிரேக்க அறிஞர்கள் எகிப்துக்குப் பயணம் சென்றதாக அறிகிறோம்.

- அரிஸ்டாட்டில் வணிகர்களுக்காகப் பள்ளி ஒன்று ஆரம்பிப்பதற்கு முன்பாக ஆசியா மைனர் பயணப் சென்றார்.

- செனோபன் (Xenophon) என்பவர் பாரசீகத்திலிருந்து பத்தாயிரம் வீரர்களுடன் சிரியா ஆசியா வழியாக கிரேக்க நாட்டிற்குத் வந்த அனுபவங்களை தனது அனபாலிஸ்' என்ற நூலில் கூறியுள்ளார்.

**இந்தியாவில் பண்டைக்காலப் பயணம்**

- பண்டைக்காலத்திலிருந்தே இந்தியா சுற்றுலாவிற்கு சிறந்த நாடாகக் கருதப்பட்டது. இந்தியாவைச் சுற்றிப்பார்க்கவும், வாணிகம் செய்யவும் பிற நாட்டினர் இந்தியாவிற்கு வந்தனர்.

- இந்தியா ஒரு செல்வம் மிகுந்த நாடாகக்கருதப்பட்டதால் அலெக்சாந்தர் போன்ற மாவீரர்கள் இந்தியா மீது படையெடுத்து வந்தனர். அராபியர்களும் ஐரோப்பியர்களும் இந்தியாவில் வணிகச் சந்தைகளை உண்டாக்க வந்தனர்.

- புத்தர் தனது பயணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தவர் அவர் ஞானம் பெற்ற பிறகு பல இடங்களுக்கும் நேரடியாகச் சென்று தனது கொள்கைகளை மக்களுக்கு எடுத்துரைத்தார்.

- அசோகர் பயணிகளின் நலன்களுக்காக புத்தவிகாரங்களைக் அமைத்தார். குகைக் கோவில்களை ஏற்படுத்தினார். பண்டைக்கால இந்தியர்கள் கால்நடையாகவும், மாட்டுவண்டிகள் மூலமாகவும் பயணம் செய்தனர்.

- இந்தியாவிற்கு வெளிநாட்டிலிருந்து வந்த பயணிகளில் குறிப்பிடத்தக்கவர் கி.பி. முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்தவமதக் கொள்கைகளைப் பரப்புவதற்காக வந்த ஏசுகிறிஸ்துவின் சீடரான புனிததாமஸ் என்பவராவர்.

- கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வந்த சீனயாத்திரிகர் யுவான் சுவாங் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

**ரோமானியர்களும் பயணங்களும் (Romans and Pleasure Travel)**

- பண்டைக்காலப் பயணங்களில் முதன்மையானவர்களாக ரோமானியர்களை குறிப்பிட வேண்டும் மற்றும் உலகிலேயே மகிழ்ச்சிக்கென்று பயணம் மேற்கொண்டவர்களில் முதன்மையானவர்கள் ரோமானியர்களேயாவர்.

- ரோமில் சாலைகளும், பாலங்களும் அரசியல் சூழ்நிலையும் நிலவியதால் பயணம் வளர்ச்சியடைந்தது. இவர்கள் பாப்பிரஸ் தாள்களில் (Papyrus scrolls) எழுதப்பட்ட பயணக் குறிப்புகளை வெளியிட்டார்கள்.

- ரோமானியர்கள் குதிரைகள் மூலம் ஒரே நாளில் நூற்றுக்கணக்கான மைல் தூரம் பயணம் செய்தார்கள். முக்கியமாக மத்திய தரைக்கடல் பகுதிகளில் உள்ள கோவில்களைக் காணவும் குறிப்பாக எகிப்திலுள்ள பிரமிடுகளைப் பார்க்கவும் சென்றார்கள்.

- மூலிகை நிறைந்த நீரில் குளிப்பதற்காகவும், குடிப்பதற்காகவும் அருவிகளை நாடிச் சென்றனர். நோயாளிகள் நோயைக் குணப்படுத்த ஆற்றங்கரைகளுக்கும் தாதுக்கள் உள்ள நீர்த்தடங்களுக்கும் சென்று வந்தனர்.

- ரோமானியர்களுக்கு 'ஸ்பாஸ்' என்று சொல்லப்படும் இடங்கள் மிகவும் விரும்பக்கூடிய இடமாக காணப்பட்டது.

- ரோமானியப் பேரரசரான ஜூலியஸ் சீசர் தனது படையெடுப்புப் பயணங்களை ஆவணங்களில் குறித்து வைத்துள்ளார்.

**இடைக்காலத்தில் சுற்றுலா**

- கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் ரோமானியப் பேரரசு வீழ்ச்சியடைந்ததிலிருந்து மறுமலர்ச்சிக்காலம் வரையுள்ள காலம் ஐரோப்பாவில் இடைக்காலம் என்று அழைக்கப்படுகிறது.

- இடைக்காலம் சுற்றுலாவிற்கு உகந்த காலமாக அமையவில்லை. அனைத்து ஐரோப்பிய நாடுகளும் திருச்சபை அதிகாரத்திற்கு உட்பட்டே இயங்கி வந்தன.

- பண்டைக் காலங்களில் புகழ்பெற்று இருந்த வாணிகமும், உல்லாசப் பயணங்களும் திருச்சபையின் அதிகாரத்திற்கு உட்பட்டே இயங்கியதினால் சுற்றுலாவில் முன்னேற்றம் அடையவில்லை.

- இடைக்காலத்தில் ஒரே ஒரு காரணத்திற்காக மட்டுமே பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. புனித இடங்களுக்குச் சென்று வரவும், புகழ்மிக்க திருச்சபைகளைக் கணவும் மட்டுமே பயணத்தை ஊக்குவித்தன. அதாவது புனித இடங்களுக்குச் செல்லும் பயணமே அதிகமாக இருந்தது.

**இடைக்கால பயணிகள் (Medieval Travellers)**

1. **பெஞ்சமின் டுடேலா:**

- இடைக்காலப் பயணிகள் முக்கியமானவரான பெஞ்சமின் டுடேலா (Benjamin Tudela) என்ற யூத மாணவர் ஆவார். இவர் கி.பி. 1160-ல் சரகோசா (Saragossa ) என்ற இடத்திலிருந்து புறப்பட்டார்.

- அவர் 13 ஆண்டுகாலம் ஐரோப்பா, பெர்சியா, இந்தியா போன்ற நாடுகளுக்குச் பயணம் மேற்க்கொண்டார் யூத மக்களைப் பற்றிய விபரங்களை விரிவாக எழுதியுள்ளார்.

2. **இபன் படுட்டா : (Ibn Batutah)**

- 1325ஆம் ஆண்டு சொந்த ஊரை விட்டுப் புறப்பட்ட அவர் சுமார் 30 ஆண்டுகாலம் பயணம் செய்தார்.

- மொத்தம் 17,000 மைல்கள் பயணம் செய்தார். ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா வழியாக கி.பி.1333-ல் இந்தியாவிலுள்ள சிந்து பகுதிக்கு வந்தார்.

- இந்தோனேஷியா, சீனா, மாலத்தீவு, இலங்கை ஆகிய நாடுகளுக்கும் பயணம் செய்தார். இபன்படுட்டா இந்தியாவில் நீண்ட காலம் தங்கியிருந்தார்.

- கி.பி. 1342-ல் முகமது பின் துக்ளக் சீனாவுக்கு அனுப்பிய தூதுக்குழுவுடன் அவரும் பயணம் சென்றார். கி.பி. 1377-ல் பெஜ் என்ற இடத்தில் இறந்தார்.

3. **மார்க்கோபோலோ (Marcopolo)**

- மத்திய காலத்தில் மிகவும் புகழ்பெற்ற பயணி மார்க்கோபோலா ஆவார். தந்தையும் மகனும் 1271-ல் பயணம் புறப்பட்டனர். இருவரும் முதலில் பெர்சியா, ஆப்கானிஸ்தானம் சென்றனர்.

- பின்பு உலகின் கூறையாக அறியப்படும் பாமிர் பீடபூமி வழியாக பயணத்தை தொடர்ந்தனர். பின்னர் சீனா சென்று அங்கு 20 ஆண்டுகள் தங்கினார்.

- தனது நாட்டிற்குத் திரும்பும் வழியில் சுமத்திரா, ஜாவா, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கு சென்றார்.

- இவர் தனது நூலான 'பயணக் குறிப்புகள்' என்பது பிற்காலப் பயணங்களுக்கு வழிவகுத்துக் கொடுத்தது.

**மறுமலர்ச்சிக் காலம்**

- 1453-ம் வருடம் கான்ஸ்டாண்டிநோபிளைத் துருக்கியர்கள் கைப்பற்றி கொண்டது நவீனகாலத்தின் ஆரம்பமாகக் கருதப்படுகிறது. இதனால் புதிய இடங்களும் நாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

- இத்தாலியில் மறுமலர்ச்சி இயக்கம் தோன்றி பிறநாடுகளில் பரவியது. இதன் காரணமாக கல்வியில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. இத்தாலி கல்வி, கலையில் வளர்ச்சியடைந்தது.

- உலக நாகரிகத்தின் மைய இடமாக விளங்கியது எனவே இத்தாலிக்கு உலகம் முழுவதிலிருந்தும் பயணிகள் வந்தனர்.

- உயர்கல்வி கற்பதற்காக இத்தாலியிலிருந்து பிற நாடுகளுக்கு பயணம் செய்தனர். இவ்வாறு மறுமலர்ச்சிக்காலத்தில் பயணங்கள் மீண்டும் புத்துயிர் பெற்று வளர்ச்சியடைய ஆரம்பித்தன.

**புதிய நாடுகள் மற்றும் கடல்வழிகள் கண்டுபிடிப்பு**

- கான்ஸ்டான்டி நோபிள் துருக்கியரால் கைப்பற்றப்பட்ட பின்பு கீழைநாடுகளுக்குப் புதிய கடல்விதிகள் கண்டுபிடிக்கப்பட்டது. புதிய நாடுகளைக் கண்டுபிடிக்க போர்ச்சுக்கீசிய இளவரசர் ஹென்றி போன்றவர்கள் ஊக்கமளித்தனர்.

- 1488-ல் பர்த்தலோமியோ டயஸ் என்ற போர்ச்சுக்கீஸியர் ஆப்பிரிக்காவின் தென்கோடி முனைக்குச் சென்று திரும்பினார்.

- அவர் ஆப்பிரிக்காவின் மேற்குக்கரையோரம் சென்று நன்னம்பிக்கை முனையையடைந்தார். பின் இந்து மகாசமுத்திரத்தின் வழியாக சென்று 1498-மே 27-ல் இந்தியாவின் மேற்கு கடற்கரையிலுள்ள கள்ளிக்கோட்டை என்ற துறைமுகத்தை அடைந்தார்.

- கிறிஸ்டோபர் கொலம்பஸ் 1492 ஆகஸ்ட் 3-ம் தேதி பாலோஸ் என்ற ஸ்பானியத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டார். மத்திய அமெரிக்காவிலுள்ள பகாமாஸ் தீவை அடைந்தார்.

- பெர்டினாண்டு மெக்கலன் என்ற போர்த்துக்கீஸிய மாலுமி உலகைச் சுற்றிவந்த முதல் மாலுமி ஆவார்.

- இவர் தனது குழுவினருடன் 1519-ல் ஐந்து மரக்கப்பல்களுடன் புறப்பட்டார். இவர் பசிபிக் பெருகடல் வழியாக பிலிப்பைன்ஸ் தீவுக்கூட்டத்தை அடைந்தார்.

- மெகல்லன் தவிர, மேலும் ஹெர்னாண்டோ கார்டஸ், டாரஸ், ஏபல்டாஸ்மென், கேப்டன் ஜேம்ஸ்கூக் போன்றோர்களால் புதிய கடல் வழிப்பயணங்கள் முக்கியத்துவம் அடைந்தது.

**தொழிற்புரட்சியும் சுற்றுலா வளர்ச்சியும்**

- பதினெட்டாம் நூற்றாண்டில் தொழிற்புரட்சி தொழிற்துறையில் மட்டுமின்றி மனித வாழ்விலும் பல்வேறு அம்சங்களையும் மாற்றத்தை ஏற்படுத்தின.

- முதலாவதாக இங்கிலாந்திலும், அதன்பின்னர் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலும் தொழில்நுட்பத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி சுற்றுலா துறையை புரட்சிகரமாக மாற்றியது.

- இதன் காரணமாக போக்குவரத்தில் பெரும் முன்னேற்றம் கண்டது பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய ரயில்வே வண்டிகள் சுற்றுலாவில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தின.

# பாடம் 3

# உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலா

சுற்றுலா என்பது தற்போது எண்ணெய் தொழிலுக்கு அடுத்தபடியாக மிக முக்கியமான தொழிலாகக் கருதப்படுகிறது. ஒரு நாட்டிற்கு அதிகமான வருமானம் தேடித்தருகின்ற தொழிலாகக் அமர்ந்திருக்கின்றது. இன்றையை சூழ்நிலையில் சுற்றுலா மூலம் ஒரு நாடு அதிக அளவு அந்நிய செலாவணி ஈட்டமுடிகிறது. எண்ணற்ற மக்களுக்கு நேர்முக மற்றும் மறைமுக வேலைகளை அளிக்கிறது. சுற்றுலா சமூகத்தில் இருக்கும் மற்ற தொழில்துறைகளுடன் சம்பந்தப்பட்டது. சுற்றுலாவின் தன்மை, நோக்கம், பயன்பாடு, தங்கும் நேரம், இடம், தூரம் ஆகியவற்றின் அடிப்படையில் உள்நாட்டு சுற்றுலா மற்றும் வெளிநாட்டு சுற்றுலா என வகைப்படுத்தப்படுகிறது.

**1. உள்நாட்டு சுற்றுலா (Internal or Domestic Tourism)**

- உள்நாட்டு சுற்றுலா என்பது ஒரு நாட்டிற்கு உட்பட்ட பகுதிக்குள் அந்த நாட்டின் எல்லைப்புறத்திற்கு உட்பட்டு நடப்பதாகும். இது மிகவும் எளிதான சுற்றுலா ஆகும்.
- உள்நாட்டு பயணம் நாணயமாற்று, மொழி, பாஸ்போர்ட், விசா, மருத்துவச் சான்றிதழ் போன்ற பிரச்சனைகள் ஏற்படுவதில்லை.
- சுற்றுலா செல்வோரின் தாய் மொழியே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் அவருக்கு அந்த நாட்டின் நாணயமே அனைத்து இடங்களுக்கும் பொதுவனதாக இருக்கும்.
- உள்நாட்டு சுற்றுலா பயணிகள் பொதுவாக பொழுதுபோக்கு. விடுமுறை, உடல் நலம், கல்வி, மதம், விளையாட்டு, வாணிபம், மனமகிழ்வு ஆகியவற்றின் அடிப்படையில் பயணம் மேற்கொள்ளுகின்றனர்.
- ஆரம்ப காலங்களில் உள்நாட்டு சுற்றுலா என்பது மதசார்புடைய இடங்களுக்குச் செல்வதாகவே அமைந்திருந்தது. மதத்திற்கு அடுத்தபடியாக மன மகிழ்ச்சிக்காகச் செல்லுதலும் முக்கிய இடத்தை வகித்தது.
- இந்தியாவில் உள்நாட்டு சுற்றுலா என்பது இங்கு காணப்படும் சுற்றுலா ஸ்தலங்களை வைத்துப் பார்க்கின்றபோது ஒரு தூங்கும் பூதமாகவே' (Sleeping giant) காட்சி அளிக்கிறது.

- இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு அரசாங்கம் சுற்றுலா வளர்ச்சிக்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதனால் தற்சமயம் வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது.

**உள்நாட்டு சுற்றுலாவின் தன்மை:**

- வெனிசுலா நாட்டில் 1973 அக்டோபர் மாதம் காரகஸ் (Caracas) என்ற நகரில் கூடிய பன்னாட்டு சுற்றுலா அமைப்பானது (International Union of Official Tourist Organisation) சுற்றுலா என்பதற்கான தெளிவான விளக்கம் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று பரிந்துரைத்தது. இதில்1974-75-ம் ஆண்டில் உள்நாட்டு சுற்றுலா பற்றிய விளக்கம் வெளியிடப்பட்டது.

- தான் வாழும் பகுதியினை விட்டு தன் நாட்டிற்குள்ளேயே அல்லது வேறு இடத்திற்கு சென்று எந்தவிதமான பணவருவாயும் இல்லாமல் தான் தங்குமிடங் களில் 24 மணி நேரம் அல்லது ஒரு இரவு தங்கியிருப்பவர் உள்நாட்டுப் பயணி" எனப்படுகிறார்.

- உள்நாட்டு சுற்றுலாவிற்கான தூரமானது இந்தியாவில் வரையறுக்கப்படவில்லை. அமெரிக்காவில் 50 மைல் தூரமும், ஆஸ்திரேலியாவில் 25 மைல் தூரமும் சென்றாலே அது உள்நாட்டுச் சுற்றுலா என்று கூறப்படுகிறது.

- பொதுவாக உள்நாட்டு சுற்றுலாவானது 25 மைல் தூரத்திலிருந்து 100 மைல் தூரம் வரை சென்றாலே சுற்றுலா என அழைக்கப்படுகிறது.

- மக்களுக்காக இயற்கை வழங்கிய அழகான இடங்களைக் கண்டு இன்பம் கொள்ள ஒரு வாய்ப்பாக அமைகின்றது.

- உள்நாட்டு சுற்றுலாவிற்குப் பல தடைகள் காணப்படுகிறது. அன்னிய செலாவணி எதையும் ஈட்டித்தராத காரணத்தினால் உள் நாட்டு சுற்றுலாவிற்கு மதிப்பு இல்லை.

- உள்நாட்டு சுற்றுலா என்பது பொதுவாக பொழுதுபோக்கு அம்சமாகவே கருதப்படுகிறது.

**2. வெளிநாட்டு சுற்றுலா (Foreign Tourism)**

- பயணி தனது தாய்நாட்டின் எல்லைக்கு வெளியில் சென்று வெளிநாட்டிற்குப் பயணம் செய்வது வெளிநாட்டுச் சுற்றுலா எனப்படும். அதற்கு பாஸ்போர்ட், விசா, அந்நியச் செலாவணி போன்ற பல ஆவணங்கள் தேவைப்படுகிறது.

- வெளிநாட்டு சுற்றுலா என்பது ஓய்வு, சுகாதாரம், கல்வி, மதம், வாணிபம் மாநாடுகளில் பங்கு கொள்ளுதல் போன்ற நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுகிறது.

- பன்னாட்டு சுற்றுலா என்பது மேற்கு ஐரோப்பிய நாடுகளான ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகளில் அதிகமாகக் காணப்படுகிறது. ஜெர்மானியர்கள் தான் உலகிலேயே அதிகமாகச் சுற்றுலாப் பயணங்களில் ஈடுபடுகின்றனர்.

3. **தனிநபர் சுற்றுலா** **(Individual Tourism)**

- மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் சுற்றுலா வகைப்படுத்தப்படுகிறது. ஒருவர் மட்டும் தனியாகச் சுற்றுப் பயணம் செய்வதைத் தனிநபர் சுற்றுலா என்று கூறலாம்.

- அவர் தனது சுற்றுப் பயணத்திற்கான வாகனம், தங்குமிடம் போன்றவற்றை அவரே ஏற்பாடு செய்து கொள்வார்.

4. **குழுச் சுற்றுலா** **(Group Tourism):**

- சுற்றுலா பயணிகள் ஒரு குழுவாகச் சுற்றுலா சென்றால் அதற்கு குழுச் சுற்றுலா என்று அழைக்கப்படுகிறது. இந்த குழுச்சுற்றுலா தற்காலத்தில் மிகவும் விரிவடைந்து வருகிறது.

- குழுச்சுற்றுலா மற்றவர்களுடன் தன் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும்படியாக இருப்பதால் அதனை அனைவரும் விரும்புகின்றனர்.

- குழுவாகச் செல்வதால் குறைந்த செலவில் பல இடங்களுக்கு வசதியாகச் சென்றுவர முடிகிறது.

- இந்தியாவில் குழுச்சுற்றுலா செல்ல மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அரசாங்கம் ரயில்வேயில் கட்டணச்சலுகை அளிக்கின்றது.

- தனியார் கம்பனிகள் தொழிலாளர்கள் சுற்றுலா செல்வதற்கு சம்பளத்துடன் விடுமுறையும், பணஉதவியும் அளித்து வருகின்றன.

5. **சமூகச் சுற்றுலா** **(Social Tourism)**

- சுற்றுலாவின் செலவீனத்தைத் தாங்கிக் கொள்ள இயலாதவர்களால் மேற்கொள்ளப்படுவதுதான் சமூகச் சுற்றுலாவாகும்.

- உலகின் சில நாடுகளில் அந்த நாட்டு அரசாங்கமே தங்கள் குடிமக்களின் சுற்றுலாவிற்காக முக்கிய பணி ஆற்றி வருகிறது.

- மக்கள் சுற்றுலா செல்வதற்காக விடுமுறை அளிக்க முன்வந்துள்ளது. ஒரு நாட்டின் அரசாங்கமே முன்வந்து மக்கள் சுற்றுலா செல்வதற்கான சலுகைகளையும் வசதிகளையும் அளிப்பதே சமுதாய சுற்றுலா' ஆகும்.

- Dr. W. ஹன்ஷிகர் (Dr.W.Hunziker) என்பவர் சமூகச் சுற்றுலா மாநாட்டில் சமூகச் சுற்றுலா என்பது குறைந்த வருமானம் உடையவர்கள் முழுவதும் மற்றவர்களின் ஆதரவுடனும் உதவியுடனும் செல்வதாகும் என்கிறார்.

- சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்பட்டதுதான் சமூகச் சுற்றுலாவின் ஆரம்பம் என்று கூறலாம். சம்பளத்துடன் கூடிய விடுமுறை என்பது இரண்டு உலகப் போர்களுக் கிடையே தோன்றிய ஒன்றாகும்.

- 1938-ல் இங்கிலாந்தில் இயற்றப்பட்ட சம்பளச் சட்டம் (Pay Act) கிட்டத்தட்ட ஒரு கோடி மக்களுக்குச் சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்கியது. இந்த விடுமுறையானது மக்களுக்கு ஓய்வையும், பயணங்கள் மேற்கொள்வதற்கு எளிமையான வழிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

**6. பண்பாட்டு சுற்றுலா (Cultural Tourism)**

- மற்ற நாடுகளின் மக்கள் அவர்களின் தத்துவங்கள், வரலாறுகள் கலைகள், பிறநாட்டு மக்களின் கல்வித்தரம் விஞ்ஞான முன்னேற்றம் ஆகியவற்றைக் காண்பதற்காக மேற்கொள்ளப்படுவதே பண்பாட்டு சுற்றுலா ஆகும்.

- உணவு, குடிநீர், உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் கையினால் செய்யப்பட்ட கலாச்சாரக் கலைப் பொருட்கள் அனைத்துமே அந்த நாட்டின் கலாச்சாரத்தை வெளிப்படுத்துகிறது.

- கலாச்சாரத் தொடர்புகளையும், பன்னாட்டு பழக்கவழக்கங்களை ஏற்படுத்துவதற்கு உதவும் முக்கிய சாதனமாகவும் விளங்குகிறது.

# பாடம் 4

# சுற்றுலாவின் அடிப்படைக்கூறுகள்

சுற்றுலா என்பது சுற்றுலா பயணிகள் மட்டுமே அடங்கியதல்ல. அது தனியாக இயங்குவது இல்லை. சுற்றுலா பல அடிப்படை அங்கங்களை கொண்டுள்ளது. சுற்றுலா பல கூறுகளை கொண்டிருந்தாலும் அவைகளில் மிகவும் முக்கியமானதும் அடிப்படை கூறுகளாக போக்குவரத்து, சுற்றுலாமையம், தங்கும் வசதி ஆகிய மூன்று கூறுகள் விளங்குகின்றது.

1. போக்குவரத்து
   (TRANSPORT)

- சுற்றுலாவிற்கு போக்குவரத்து வசதி இருந்தால்தான் சுற்றுலா பயணி தான் விரும்பும் சுற்றுலா மையத்தைச் சென்றடைய முடியும்.
- மோட்டார்கார்கள், ரயில், கப்பல், ஆகாய விமானம் போன்றவை சுற்றுலா போக்குவரத்துக்குப் பயன்படும் வாகனங்களாகும்.
- சுற்றுலா மையங்களுக்கு எவையேனும் ஒரு வாகனப் போக்குவரத்து வசதி செய்து தரப்பட வேண்டும்.
- சுற்றுலா பயணி தனது சுற்றுலா செலவிருக்கும் மொத்த செலவில் 40% போக்குவரத்திற்கு செலவிடுகின்றார்.
- இதுவே போக்குவரத்து வசதி சுற்றுலாவில் முக்கியத்துவம் பெற காரணமாகின்றது.
- ஒரு நாட்டிலிருந்து வேறு நாட்டிற்கு சுற்றுலா சென்றுவர வான்வழிப் போக்குவரத்து பயன்படுகிறது.
- சுற்றுலா மையங்களுக்கிடையே பயணம் செய்வதற்கு ரயில் சாலை மற்றும் நீர் வழியாக செல்வது அதிக சந்தோஷத்தை அளிக்கிறது.
- இரயில் போக்குவரத்து மூலம் செல்லும் சுற்றுலாவே மிகச்சிறப்பானதாக இருக்கும் என்று சுற்றுலா செல்வோர் கூறுவதை நம்மால் காணமுடியும்.
- 1989-ல் பிரான்ஸ் நாடு மணிக்கு 300 கிலோமீட்டர் வேகம் செல்லும் இரயிலை அறிமுகப்படுத்தியது.
- ஜெர்மனியில் 1901-லிருந்து எல்லா ரயில்களுமே சராசரி 250 கி.மீ. வேகத்தில் செல்கின்றன.

- ஸ்பெயின் 1992-ல் மணிக்கு 450 கி.மீ. வேகம் செல்லும் ரயிலை அறிமுகப்படுத்தியது.

- இந்தியாவில் சமீப காலம் வரை ராஜதானி மற்றும் தாஜ் அதிவேக ரயில்கள் மணிக்கு 110 கி.மீ. வேகத்தில் செல்கின்றன.

- வெளிநாட்டுப் பயணிகளுக்கு இந்திய ரயில்வே நிர்வாகம் ஜெய்ப்பூருக்கும் டெல்லிக்கும் இடையே விட்டுள்ள 'Palace on wheels' என்ற சிறப்புரயில் பயணிகளை மிகவும் கவர்வதாக உள்ளது.

- மேலும் கல்கத்தா - கயா- வாரனாசி- கோரக்பூர் பகுதிகளுக்கிடையே விடப்பட்டுள்ளன. 'Hotel on wheels' என்ற ரயில் புத்த சுற்றுலா பயணிகளை மிகவும் கவர்ந்துள்ளது.

- குஜரத்தில் 'Orient express' என்ற ரயில் சுற்றுலா பயணிகளை வெகுவாகக் கவர்ந்துள்ளது

**சாலைவழிப் போக்குவரத்து (Road ways)**

- சுற்றுலாப் பயணிகளுக்கான போக்குவரத்தில் சாலை வழிப் போக்குவரத்தே சிறப்பிடம் வகிக்கிறது.

- சுற்றுலா பணிகளை இரயில்வே மற்றும் விமான நிலையங்களுக்கு கொண்டு போய் விடுவதற்கும், அங்கிருந்து கூட்டி வருவதற்கும் சாலை வழியே பிரதானமாக போக்குவரத்துக்குப் பயன்படுகிறது.

- சுற்றுலா வளர்ச்சிக்கு சாலை வழிப் போக்கு வரத்தே முக்கியமான இடம் வகிக்கிறது என்பதில் ஐயமில்லை.

- சாலைப் போக்குவரத்தை பொருத்தவரையில் 80 சதவீத உள்நாட்டுப் பயணிகளும் 50 சதவீத வெளிநாட்டுப் பயணிகளிலும் சாலைவழி போக்குவரத்தையே அதிகமாக விரும்புவதாகத் தெரிய வந்துள்ளது.

- இதன் காரணம் பேருந்துகள் அதிக அளவிலும் கிடைப்பதும், அதன் கட்டணம் குறைவாக இருப்பதுமேயாகும்.

- சொகுசுப் பேருந்துகள், குளிரூட்டப்பட்ட கார்கள் மற்றும் வேன்கள் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.

- இந்திய சுற்றலா வளர்ச்சி நிறுவனம் பல சொகுசுப் பேருந்துகளை இயக்கி வருகின்றது. தமிழ் நாட்டிலும், கர்நாடகத்திலும் இவ்வித பேருந்துகள் சுற்றுலா பயணிகளை வெகுவாகக் கவர்ந்துள்ளன.

**நீர்வழிப் போக்குவரத்து (Water ways)**

- சுற்றுலாவைப் பொறுத்த அளவில் நீர்வழிப் போக்குவரத்தானது இன்னும் வளர்ச்சியடையாத நிலையிலேயே இருந்து வருகிறது.

- இந்தியாவில் இந்தியாவிற்கும் வளைகுடா நாடுகளுக்குமிடையே மற்றும் பம்பாய்க்கும் கோவாவிற்குமிடையே கடல்வழிப் போக்குவரத்து அமைக்கப்பட்டுள்ளது.

## 2. தங்கும் இடங்கள் (ACCOMMODATION)

சுற்றுலாவின் இரண்டாவது அடிப்படைக்கூறு தங்கும் இடம் ஆகும். சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியான தங்கும் வசதி செய்து கொடுப்பதின் அடிப்படையில் தான் சுற்றுலாவின் வளர்ச்சியே அமைந்துள்ளது. உணவு உடை, ஓய்வெடுக்க தக்க வசதிகள் நிறைந்த தங்கும் விடுதிகளும் உணவகங்களும் இருந்தால் சுற்றுலா சுகமாக இருக்கும். தங்குமிடங்களில்தான் சுற்றுலாப்பயணிகள் பயணத்தை முடித்துக் கொண்டு ஒரு விருந்தாளியாக மாறிவிடுகிறார்கள். விருந்தாளிகளின் திருப்தியில் தான் சுற்றுலாவின் வளர்ச்சியே அமைந்துள்ளது.

இரவில் நன்றாக உறங்குவது மிகவும் அவசியமாகிறது. உலகின் பல பாகங்களிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு தேவையான சொகுசான தங்குமிடங்கள் அல்லது விடுதிகள் சுற்றுலாமையத்தில் இருக்க வேண்டும். பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க விடுதிகளின் எண்ணிக்கைகளையும் வசதிகளையும் விரிவு படுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

**தங்குமிடத்தை இருவகைப்படுத்தலாம்.**

1. விடுதிகள் (Hotels)
2. துணைத் தங்குமிடங்கள்

சுற்றுலா வளர்ச்சிக்கு தங்கும் இடங்கள் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. சுற்றுலா வளர்ச்சியின் முதுகெலும்பு இருப்பிட வசதியேயாகும்.

### 1. விடுதிகளின்

- ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிற்குப் பயணம் செய்யும் சுற்றுலாப் பயணி தனது இருப்பிடத்திற்கு உடனடியாகத் திரும்ப முடியாது.

- பண்டைக்காலங்களில் பயணிகளும் வழிப்போக்கர்களும் தங்குவதற்கு சத்திரங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

- உணவும் தங்குமிடமும் இலவசமாகப் பயணம் செய்பவர்கள் பெற்றனர். ரோமானிய நாட்டில் இதனைப்போன்ற சத்திரங்கள் பல இருந்தன.

- இந்தியாவிலும் பண்டைய காலம் தொட்டே பயணிகளும், வழிப்போக்கர்களும் தங்குவதற்கென்று தர்மசத்திரங்கள், விகாரைகள், சாராய்கள், தர்மசாலைகள் போன்றவைகள் இருந்ததாக அறிகிறோம்.

**இந்தியாவில் நட்சத்திர விடுதிகள் (Star Hotels in India) :**

- இந்திய அரசின் சுற்றுலாத்துறையினரால் நியமிக்கப்பட்டுள்ள நட்சத்திர ஆய்வுக்குழு (Star classification committee) ஒவ்வொரு மாநிலத்திலும் செயல்பட்டுவருகிறது.

- நட்சத்திரத் தகுதி பெற விரும்பும் ஹோட்டல்கள் இந்த ஆய்வுக்குழுவிடம் விண்ணப்பிக்க வேண்டும். இந்த குழு அந்த ஹோட்டல்களைப் ஆய்வு செய்து வசதி அடிப்படையில் ஒன்று முதல் ஐந்து நட்சத்திர விடுதி என்ற தகுதியை வழங்கும்.

- இந்தியாவில் அசோக்குரூப், (Ashok group) ஒபிராய் குரூப்,(Operoi group) தாஜ்குரூப்,(Taj group), வெல்கம் குரூப்,(Welcome group) கிளார்க்ஸ் குரூப்,(Clarks group) டிரவட்டல் குரூப், (Travotel group) ஆகியவை முன்னணி இடம் வகிக்கின்றன.

**துணைத் தங்குமிடங்கள் (SUPPLEMENTARY ACCOMMODATION)**

- துணைத்தங்குமிடங்களும் சுற்றுலாவின் ஒரு உறுப்பாகவே கருதப்படுகிறது. இவைகளும், விடுதிகளைப் போன்ற ஒரு அமைப்புதான்.

- இதில் சுற்றுலாப் பயணிகளுக்கு பண ஆதாயம் அதிகமாக இருப்பதாலும் வாடகை குறைவாக இருப்பதாலும் இதனைப் போன்ற அமைப்புகள் அயல்நாடுகளில் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன.

- வசதிகளைப் பொறுத்தவரை விடுதிகளைவிடச் சற்று குறைவாகத்தான் இருக்கும். ஆனால் கட்டுப்பாடுகள் குறைவு, சுதந்திரம் அதிகம்.

- விளையாட்டுகள், கேளிக்கைகள், பொழுதுபோக்குகள், அதிக அளவில் பயணிகளுக்கு இவை வழங்குகின்றன. இதில் தங்குவோர்களிடம் நல்ல பழக்கத்தையும், அறிமுகத்தையும், தோழமை உணர்வையும், நெருக்கத்தையும் ஏற்படுத்துகின்றன.

**துணைத் தங்கும் இடங்களை கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.**

1. யாத்ரி நிவாஸ் (Yatri Nivas)
2. தர்மசாலைகள் (Dharmasalas)

- யாத்திரிகர்கள் அதிகமாகச் செல்லும் சமய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் யாத்ரிநிவாஸ் அமைக்கப்பட்டுள்ளது. நமது நாட்டில் அனேக புனித ஸ்தலங்களில் இந்த வகை விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

- மிகவும் வசதி படைத்த முதலாளிகள் இரக்க சிந்தனையுடையவர்கள் ஆகியோர் வழங்கும் தர்மத்தை அடிப்படையாகக் கொண்டே இவ்வகை தர்மசாலைகள் அமைக்கப்படுகின்றன.

### 3. சுற்றுலா மையத்தின் கவர்ச்சி
**(LOCALITY (OR) TOURIST ATTRACTIONS)**

சுற்றுலாவின் அடுத்த முக்கியமான அடிப்படைக்கூறு சுற்றுலா மையமாகும். போக்குவரத்திற்கு நல்ல வசதி செய்யப்பட்டிருந்தாலும், தங்குவதற்கும் நல்ல வசதி செய்யப்பட்டிருந்தாலும் மட்டும் போதாது. சுற்றுலா முழுமையடைய வேண்டுமானால், சுற்றுலா முக்கியத்துவம் பெறவேண்டுமானால் சுற்றுலா மையமானது சிறப்பிடம் வகிக்கவேண்டும். ஒன்று பயணிகளைக் கவரும் வரலாற்றுச் சின்னம் அங்கு இருக்கவேண்டும் அல்லது கவர்ச்சி மிக்க இயற்கை எழில் கொஞ்சும் இடமாக இருக்க வேண்டும் அல்லது வழிபடக்கூடிய புனிதத் தன்மை கொண்டதாக இருக்கவேண்டும். அபோதுதான் சுற்றுலா மையம் சிறப்பிடம் வகிக்கமுடியும்.

#### 1. கவின்மிகு இயற்கைக் காட்சிகள் (Scenic attractions)

சுற்றுலாவின் கவின்மிகு இயற்கை காட்சிகள் முக்கிய இடம் வகிக்கின்றன. உயர்ந்த மலைகள், அழகான நீர்வீழ்ச்சிகள், ஓடி வரும் ஆறுகள், அழகு கொழிக்கும் காடுகள், பெரிய ஏரிகள், மனங்கமழும் பூங்காக்கள், பள்ளத் தாக்குகள், பனி மண்டலங்கள், கடற்கரைகள் ஆகியவை பயணிகளைக் கவரக் கூடியவை.

#### 2. மகிழ்ச்சியூட்டும் தட்பவெப்பநிலை (Amenable weather)

சூரிய வெப்பம், தட்பவெப்பம், பனி, மழை போன்றவை சுற்றுலாவில் முக்கியப்பங்கு வகிக்கின்றன. நல்ல தட்ப வெப்பநிலைதான் பயணிகளைக் கவர்கிறது. கடற்கரைப் பகுதிகள் லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கிறது.

#### 3. வரலாற்று மற்றும் பண்பாட்டு காரணிகள் (Historical and cultural factors)

பழமை மிக்க வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களும், பண்பாட்டு படைப்புகள் கொண்ட இடங்களும் சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவர்கின்றன. இடிந்து போன கோட்டை கொத்தளங்களும், பாழடைந்த கோவில்களும், பழைய அரண்மனைகளும், கோவில்களும், சிற்பங்களும், சிதைந்து போன நகரங்களும் மங்கிய பழமை மிக்க ஓவியங்களும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவர்ந்திழுக்கின்றன.

#### 4. எளிதாகச் சென்றடையும் வசதி (Accessibility)

சுற்றுலா மையங்கள் பயணிகள் எளிதாகச் பயணம் செய்யக்கூடிய இடத்தில் அமைந்திருக்க வேண்டும். எளிதில் சென்றடைய முடியாத இடத்தில் இருக்கும் இடங்களுக்குச் சுற்றுலாப் பயணிகள் செல்வது கடினம் எனவே இவையும்

கவருவதற்க்கான் காரணமாக திகழ்கின்றது இவையாவும் சுற்றுலாவின் அடிப்படைகூறாக அமைந்துள்ளது.

# பாடம் 5

# சமூகம், பொருளாதாரம், கலாசாரம் மற்றும் சுற்றுச்சூழல் மீது சுற்றுலாவின் தாக்கம்

**சுற்றுலாவின் சமுதாய முக்கியத்துவம்**
**(Social Significance of Tourism)**

ஒரு நாட்டின் கண்ணுக்குத் புலப்படாத ஏற்றுமதிப்பொருள் தான் சுற்றுலாவாகும். சுற்றுலா மூலம் ஒரு நாடு பல்வேறு வழிகளில் பயன்பெறுகிறது. சுற்றுலா செல்வதின் மூலம் நாட்டின் தேசிய வருவாயின் அளவு அதிகரிக்கிறது. இதனால் நாடு பொருளாதார வளர்ச்சியடைந்து பல துறைகளில் முன்னேறுகிறது. நாடு மட்டுமல்லாது தனிநபரும் வேலைவாய்ப்பு பெற்று பயன் அடைகிறான். சுற்றுலா பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த துறையாக இருப்பதுடன் சமுதாயத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்துகிறது. சமுதாய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகிறது. சமுதாய அமைப்பு முறையிலும், வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

1. **தேசிய ஒருமைப்பாடு வளர்கிறது (Promts of National Integretion)**

- சுற்றுலாவின் மூலம் தேசிய ஒற்றுமை வளர்கிறது. ஜாதி வேறுபாடுகள், மத அடிப்படைவாதம், மொழி வேற்றுமைகள் என்ற சமுதாயக் கேடுகள் காணப்படும் இந்தியா போன்ற நாடுகளில் சுற்றுலா வேற்றுமையில் ஒற்றுமையைப் பேணுகிறது.
- சுற்றுலா செல்லும் பயணி பிற மாநிலங்களில் வாழும் மக்களுடன் இனக்கமாக பேசி மகிழமுடிகிறது.
- தென்மாநிலத்தவர் வட மாநிலங்களுக்கும், வட மாநில மக்கள் தென் மாநிலங்களுக்கும் செல்லும் போது தேசிய ஒருமைப் பாட்டுணர்ச்சி ஏற்படுகிறது. கலாச்சார பகிர்வு நடைபெறுகின்றது.

2. **மனிதனுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது (Gives happiness to man)**

சுற்றுலா மனிதனுக்கு மகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் அளிக்கிறது. வேலை செய்து சலித்துபோன தொழிலாளிக்கு சுற்றுலா இன்பம் தருகிறது.

3. **மனிதநேயம் வளர்ச்சியடைகிறது (Develops humanism)**

- மனித நேயம் உணர்வினை வலுவாக்க சுற்றுலா துணைபுரிகிறது. பிற நாடு மாநில மக்களுடன் நெருங்கிப் பழகும் போது அவர்களைப் புரிந்து கொண்டு அன்பு செலுத்த முடிகிறது.

- பிற மாநில மக்களுடன் இணக்கமான நல்லுறவு கொள்ள வாய்ப்பை வழங்குகின்றது. இதனால் பிராந்திய வெறி தளர்வடைந்து தேசிய உணர்வு வளர்கிறது.

- நாட்டுபற்றைத் தாண்டி இதன் மூலம் உலகக் குடிமகன்' (Citizen of the world) என்ற தாராளப் பண்பு வளர்கிறது.

4. **வாழ்க்கைத்தரம் உயர்கிறது (Standard of living improves)**

- ஒரு நாட்டில் வெளிநாட்டு சுற்றுலா அந்நிய செலாவணியை பெருக்கி தருகிறது. உள்நாட்டுச் சுற்றுலா வருவாய் மாற்றத்தினை ஏற்படுத்துகிறது.

- நாட்டு மக்களுக்கு அதிக வேலை வாய்ப்பினை உருவாக்குகின்றது. இதனால் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு அதிக வருவாய் கிடைக்கிறது. அதிக வருமானம் கிடைப்பதால் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்கிறது.

**எ.கா**: மதுரையை எடுத்துக் கொண்டால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையால் ஆயிரக்கணக்கான மக்களுக்கு வருமானம் கிடைக்கிறது. சுற்றுலாப் பயணிகள் இல்லையென்றால் அவர்களுக்கு வருமானமும் இல்லை என்ற நிலை உள்ளது.

5. **தனி மனித அறிவு பெருகுகிறது (Development of peoples knowledge)**

- சுற்றுலாவினால் தனிமனித அறிவு வளர்க்கின்றது. பிறநாடுகளுக்கும், தனது நாட்டின் பிற பகுதிகளுக்கும் செல்வதால் சுற்றுலாப் பயணியின் பொது அறிவு வளர்ச்சியடைகிறது.

- அண்டை நாடுகளின் வரலாறு, பண்பாடு மற்றும் பொருளாதார நிலை பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

- மனிதன் நவீன அறிவியல் முன்னேற்றத்தையும், தொழில்முறைகள், கருவிகள் பயண்பாடு அறிந்து கொள்கிறான்.

- தனிமனித அறிவினை பழங்காலத்தில் பல அறிஞர்கள் பல இடங்களுக்குப் பயணம் சென்று வந்ததால் தான் தங்கள் அறிவை விருத்தி செய்து கொள்ள முடிந்தது.

6. **உலக அமைதி மற்றும் பன்னாட்டு ஒற்றுமை உணர்வு (international understanding)**

- சுற்றுலா பல்வேறு வழிகளில் பன்னாட்டு ஒற்றுமை உணர்வை உருவாக்குகின்றது. நமது நாட்டுக்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளை சிரித்த முகத்துடன் உபசரித்து, நல்ல வசதிகளை

அளித்து, அவர்களைச் சரியாக புரிந்துகொண்டு நட்புணர்வுடன் அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கும் போது நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது.

- தனிப்பட்ட நபர்களுக்கிடையே ஏற்படும் இந்த நெருங்கிய உறவுகள் நாளடைவில் அவர்களின் நாட்டின் பால் நட்புணர்வுகள் ஏற்படுகிறது. இதனால் நேசநாடுகளாக மாற்றம் பெற்று உலக அளவில் பகைமை விரோதம் ஆகியவை ஒழிக்கப்பட்டு சர்வதேச அளவில் நிரந்தர அமைதி ஏற்பட வழிவகை செய்கிறது.

7. **பண்பாட்டு பரிமாற்றம் (Exchange of cultural value)**

- சுற்றுலாப் பயணிகள் நாகரிகம் பண்பாடு ஆகியவற்றை பிற மக்களிடம் பரப்புகிறார்கள். இதனால் இரண்டு மாறுபட்ட பண்பாடு கொண்டவர்கள் ஒன்று சேர்கிறார்கள்.

- மற்றவர்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அறிய மனிதன் முற்பட்டதனால்தான் சுற்றுலாவே தோன்றியது.

- சுற்றுலாப் பயணிகளிடம் பழமையான நாகரிகம், பண்பாடு, பண்பாட்டுச் சின்னங்கள் போன்றவற்றை அறிய வேண்டும் என்ற ஆர்வம் இருப்பதை பண்டைய காலம் தொட்டு இருப்பதை நாம் அறிகின்றோம்.

8. **கலை மற்றும் கிராமியக்கலை பேணிகாக்கப்படுகிறது (Protects Folk Arts)**

- சுற்றுலா மூலம் கலை மற்றும் கிராமியக் கலைகளைப் பேணிக்காக்கப்படுகிறது. சுற்றுலாத்துறையானது நம் நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், கலைகள், கிராமியக் கலைகள் ஆகியவற்றைப் பேணிக்காக்கும் வகையில் கண்காட்சிகள், திருவிழா போன்றவைகளை நாடு முழுவதும் நடத்தி வருகிறது.

- இது போன்ற கலைநிகழ்வுகள் இந்தியப் பண்பாட்டிற்கே உரித்தான நடனக் கலைகள், நாட்டியக்கலைகள், கிராமியக்கலைகள் இடம் பெறுகின்றது. இதனால் சுற்றுலாப் பயணிகள் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றனர்.

- இதனால் இந்தக்கலைகள் புத்துயிர் பெறுகின்றது மட்டுமல்லாது அழியாமல் பாதுகாக்கப்படுகின்றன. எனவே சுற்றுலா கலை மற்றும் கிராமியக் கலைகளைப் பேணிப்பாதுகாக்கிறது.

9. **நினைவுச் சின்னங்கள் (Protects historical Movement)**

- பொதுவாகச் சுற்றுலாப் பயணிகள் ஒரு நாட்டின் நாகரிகம், பண்பாடு, கலை ஆகியவற்றை வெளிப்படுத்தும் பழங்காலச் சின்னங்களைப் பார்க்க வேண்டும்

- நினைவுச்சின்னங்களைப் பார்க்கும்போது அதனை உற்றுநோக்கி அதில் கலந்துவிடுகிறார்கள். அவற்றை காணும் அவர்களுக்கு நிம்மதியும், திருப்தியும், புதிய உற்சாகமும் ஏற்பட்டு நல்ல அனுபவங்களைப் பெற்றுத் திரும்பிச் செல்கின்றனர்.

- ஒவ்வொரு அரசும் தங்கள் நாட்டில் உள்ள பழங்காலக் கலை மற்றும் நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டியது தேவையான ஒன்றாகக் கருதப்படுகிறது.

- இவ்வாறு சுற்றுலாவினால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன.

## சுற்றுலாவின் பொருளாதர முக்கியத்துவம்
**(Economic Significance of Tourism)**

சுற்றுலா இன்று ஒரு பொருளாதாரம் வளர்க்கும் முக்கியத்துறையாக வளர்ந்துள்ளது உல்லாசத்திற்கும் இன்பத்திற்கும் சுற்றுலா என்ற நிலை மாறி இன்று வருமானத்திற்காக சுற்றுலாவை ஊக்குவிக்கும் காலம் வந்துவிட்டது. இதனால்தான் ஒவ்வொரு மாநில மற்றும் மத்திய அரசுகளும் சுற்றுலாவைக் கவனிக்க தனியாக அமைச்சகம் ஒன்றையும் அதன் தொடர்பான நிறுவனங்களையும் உருவாக்கி அதன் வளர்ச்சிக்கும் பலவிதமான திட்டங்களைத் வகுத்துவருகிறது.

ஒரு நாட்டில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், பிராந்திய வளர்ச்சியைப் பெருக்குவதற்கும், அரசின் வருவாயைப் பெருக்குவதற்கும் ஒரு கருவியாக சுற்றுலா உள்ளது.

1. **சுற்றுலாவும் வாணிகச் சமநிலையும் (Tourism and Balance of Trade)**

- ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட கால அளவில் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களின் மொத்த மதிப்பும், பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களின் மொத்த மதிப்பும் சம அளவில் இருந்தால் அதனை நாம் பன்னாட்டு வாணிகச் சமநிலை என்கிறோம்.

- அதேசமயம் ஏற்றுமதிப் பொருட்களின் மொத்த மதிப்பு இறக்குமதிப் பொருட்களின் மதிப்பைக் காட்டிலும் அதிகமாக இருந்தால் அதனை நாம் சாதகமான வாணிகச் சமநிலை (Favourable Balance of Trade) என்கிறோம்.

- இதற்கு மாறாக ஏற்றுமதிப் பொருட் களின் மதிப்பைக் காட்டிலும் இறக்குமதிப் பொருட்களின் மொத்த மதிப்பு கூடுதலாக இருப்பின் அதனை பாதகமான வாணிகச் சமநிலை என்கிறோம்.

- வளர்ச்சியடைந்த நாடுகள் சாதகமான வாணிகச் சமநிலையையும், வளர்ந்து வரும் நாடுகள் பாதகமான வாணிகச் சமநிலையைக் கொண்டுள்ளன. பாதகமான வாணிகச்சமநிலையை விரைவில் சரிசெய்யவிடின் நாட்டின் பொருளாதரநிலை பாதிக்கப்படும்.

**2. சுற்றுலாவும் அன்னியச் செலாவணியும்**
**(Tourism and foreign Exchange)**

- ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் இடையில் நிலவும் அனைத்து தொடர்புகள் பற்றிய பதிவேடுதான் அயல்நாட்டு செலுத்து சமநிலை' (Balance of Payment) ஆகும்.

- ஒரு நாட்டின் வாணிகச் சமநிலையுடன் கண்ணுக்குப் புலனாகாத பொருள்களின் வரவுகள் அனைத்தையும் கூட்டி பற்றுகளைக் கழித்துக் கொண்டால் செலுத்துதல் சமநிலை கிடைக்கிறது.

- அயல் நாட்டுப் பயணிகள் நம் நாட்டில் செலவிடும் பணம் புலனாகாத ஏற்றுமதியாகும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காகவும் உணவுக்காகவும் போக்குவரத்திற்காகவும், பொருட்களை வாங்கவும் செலவு செய்யும் தொகையானது அந்த நாட்டிற்கு அன்னியச் செலாவணியாகக் கிடைக்கிறது.

- இந்த அன்னியச் செலாவணி மூலம் பாதகமான வாணிகச் சமநிலையையும், பாதகமான செலுத்து சமநிலையையும் சமாளிக்க முடிகிறது.

- இந்த வகையில் சுற்றுலா மூலம் கிடைக்கும் வருவாய் ஒரு நாட்டிற்கு வரப்பிரசாதமாகவே உள்ளது. குறிப்பாக பாதகமான செலுத்து சமநிலையைக் கொண்டிருக்கும் பின்தங்கிய நாட்டின் சுமையைக் குறைப்பதில் சுற்றுலா முக்கியமானதோர் இடம் வகிக்கிறது.

- சுற்றுலாவின் மூலம் அந்நிய செலாவணியை ஈட்டுவதில் இந்தியா இரண்டாவது இடம் வகிக்கிறது.

- இந்த துறையில் நமது அரசு குறைந்த பட்சத் தொகையை மூலதனமாக வைத்து அதிக அளவு லாபம் அடைகிறது.

**3. சுற்றுலாவும் தேசிய வருமானமும் (Tourism and National Income)**

- சுற்றுலா மூலம் ஒவ்வொரு நாடும் பல வழிகளில் வருமானம் பெறுகின்றன. பொருட்களை உற்பத்தி செய்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விற்பதைக் காட்டிலும் அதிகமான வருமானத்தைச் சுற்றுலாத்துறை தருகிறது.

சுற்றுலா ஆய்வறிஞர்களான **லிகோரிஷ், கெர்ஷா** ஆகியோர் சுற்றுலா பற்றி கீழ்க்கண்டவாறு கூறுகிறார்கள்.

- "சுற்றுலா முதலீடு ஏதும் தேவைப்படாத மிக எளிதான தொழில் ஒரு சமுதாயம் ஆண்டு முழுக்க ஒவ்வொரு நாளும் இரண்டு டஜன் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்க முடியுமானால் அது பொருளியல் வளர்ச்சியில் ஆண்டுக்கு ஒரு லட்சம் டாலர்கள் ஊதியப்பட்டியல்களைக் கொண்ட ஒரு புதிய தொழிற்சாலையைப் பெற்றுள்ளதற்கு ஒப்பாகும்" என்று கூறுகின்றனர்.

- அரசாங்கம் சுற்றுலாத் துறையிலிருந்து நேர்முக வரி மற்றும் மறைமுக வரி மூலம் வருவாயைப் ஈட்டுகின்றது. சுற்றுலாத்துறை வளர்ச்சிப் பணிகள் மூலம் கிடைக்கும் வருவாய் நேர்முக வரி ஆகும். மறைமுகவரி என்பது பயணிகளுக்குச் சேவை செய்தோ, உபசரித்தோ கிடைக்கும் வருவாய் ஆகும்.

### 4. பொருளாதார ஏற்றத்தாழ்வு குறைகிறது (Redures economic inequality)

- சுற்றுலா நாடுகளுக்கிடையே நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வை ஓரளவு குறைக்கிறது. பெரும்பாலும் பணக்கார நாடுகளைச் சேர்ந்த பயணிகள் பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நாடுகளுக்குப் பயணம் செய்கிறபோது அவர்களது பணம் பின்தங்கிய நாடுகளின் பொருளாதாரத்தை உயர்த்தப் பயன்படுகிறது.

- சுற்றுலாவை வளர்ச்சியடையச் செய்வதன் மூலம் ஒரு நாடு பெருந்தொகையை நேரிடைவரி மூலமும் மறைமுகவரி மூலமும் பெறுகிறது.ஒரு நாடு எந்த அளவிற்கு அயல் நாட்டுப் பயணிகளைக் கவர்ந்திழுக்கிறதோ அந்த அளவிற்கு அந்த நாடு அந்நிய செலாவணியைப் பெறுகிறது.

- அந்த வெளிநாட்டுப் பயணிகள் எத்தனை நாள் இருக்கின்றார்கள் எவ்வளவு பொருட்கள் வாங்குகின்றனரோ அந்த அளவிற்கு நாட்டின் வருவாய் அதிகரிக்கின்றது.இதன் மூலம் அந்நிய செலாவணியை அதிகம் பெற்று தேசிய பொருளாதரத்தை உயர்த்த முடியும்.

### 5. வேலை வாய்ப்பு அதிகரிக்கிறது
**(Employment opportunity)**

- சுற்றுலா என்பது சேவையை மையமாக வைத்து செயல்படும் தொழிற்கூடம் எனக்கூறலாம். இதுவும் முழுக்க முழுக்க தொழிலாளர்களைக் கொண்டு செயல்படும் துறை ஆகும்.

- சுற்றுலாவில் பலதரப்பட்ட மக்கள் தங்கள் தகுதிக்கேற்ப பலவகையான வேலைவாய்ப்புகளைப் பெறுகிறார்கள். வேலையற்ற பட்டதாரிகள் சுற்றுலாவின் பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளார்கள்.

- இவ்வாறு பல லட்சம் மக்களுக்கு மக்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கும் சுற்றுலாத்துறை வேலை வாய்ப்பை வழங்கும் தொழிலாக உள்ளது.

- இந்தியாவில் 1999-2000-ம் வருட புள்ளிவிவரப்படி 15.5 மில்லியன் மக்கள் இந்தியாவில் சுற்றுலாத்துறை மூலம் நேரடி வேலை வாய்ப்பு வசதி பெற்றார்கள்.

- உலக பயண மற்றும் சுற்றுலா கழகத்தின் (UNTTC) அறிக்கையின் படி 2010-ல் இந்தியாவில் 12.9 மில்லியன் மக்கள் நேரடி வேலை வாய்ப்பு பெற்றுள்ளார்கள்..

6. **கைத்தொழில் வளர்ச்சி (Growth of handi-crafts)**

- கைத்தொழில் வளர்ச்சியில் சுற்றுலா உக்கிய இடம் வகிகின்றது. உள்ளூர் கைவினைப் பொருட்கள் முன்னேற்றத்திற்கு பெரிதும் துணை புரிகிறது.

- ஒரு இடத்திற்கு புதிதாக சுற்றுலா வரும் பயணி அங்கிருக்கும் தனக்கு பிடித்த அரிய கலைப்பொருட்களையும், பொம்மைகள், போன்றவற்றை நினைவுப் பொருட்களாக வாங்கிச் செல்கின்றனர்.

- இந்தியாவில் சுற்றுலாத் துறையினால் கைவினைப் பொருட்கள் அதிக அளவில் விற்பனையாகின்றன என்பதில் சந்தேகமே இல்லை.

- தஞ்சை தலையாட்டி பொம்மைகள், தஞ்சை கலைத் தட்டுகள், கன்னியாகுமரியில் சங்கு, கிளிஞ்சல் பொருட்கள், சந்தன மாலைகள், மூங்கில் கூடைகள், பனை ஓலைத் தொப்பிகள் ஆகியவைகள் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் விரும்பி வாங்கப்படுகின்றன.

7. **சுற்றுலாத் துறையின் பன்முக விளைவு (Multiple effects)**

- ஒரு நாட்டிற்கு வரும் சுற்றுலா பயணிகளின் வருகையால் பல்வேறு துறைகள் வளர்ச்சியடைந்து வருமானம் கிடைக்கிறது.

- அடிப்படை வசதிகளான சாலைப்போக்குவரத்து ரயில் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, மின்சாரவசதி, தண்ணீர் வசதி, தரமான உணவு வசதி, கட்டிடப்பணிகள், அருங்காட்சியகங்கள், கேளிக்கை விடுதிகள், தேசியப் பூங்காக்கள் போன்றவை குறைந்த மூலதனத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காகத் தொடங்கப்பட்டு பல தரப்பட்ட துறைகளுக்கு இது அதிக லாபத்தைத் தருகிறது.

- இவ்வாறு சுற்றுலா ஒரு நாட்டின் தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கு உரிய பங்கைச் செலுத்துகிறது என்பதை அறியலாம்.

**சுற்றுலாவும் சுற்றுச் சூழலும் (Tourism and Environment)**

- சுற்றுலா என்பது மந்திற்கு இன்பம் தருவதாக இருக்கின்றது. சுற்றுலா பற்றி நினைக்கும் போதே நம் கண் முன்னர் நீர்வீழ்ச்சிகள், உயர்ந்த கோபுரங்கள், நீண்ட கடற்கரைகள், அடர்ந்த காடுகள், மரங்கள், பூக்கள் ஆகியவை தோன்றுகின்றன.

- இந்தியாவில் உள்ள பல சுற்றுலா தலங்கள் சரித்திர முக்கியத்துவமும் பாரம்பரியக் பண்டாட்டு கலாச்சாரமும் மிக்கவை.

- மகாபலிபுரச்சிற்பங்கள் மற்றும் தாஜ்மகாலின் அழகும் அற்புதமான சிற்பக்கலையும் நம் கண்ணைக் கவர்கின்றன.

- ஆனால் தாஜ்மகால் போன்ற பல பாரம்பரியக் கலையழகு மிக்க கட்டிடங்கள் தன் மெருகை இழந்து நிற்பது உலகறிந்த உண்மையாகும்.

- அந்த சுற்றுலா தலம் மங்கிப் போவதற்குக் காரணம் சுற்றுலாத் தொழிலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமே ஆகும்.

- சுற்றுலா வளர்ச்சியினால் சுற்றுலாத் தலங்களின் சுற்றுச்சூழல் மட்டுமின்றி சுற்றுலாத் தலங்களும் நேரடியாகப் பாதிக்கப்படுகின்றன.

- இதையே சுற்றுலாவே சுற்றுலாவை அழிக்கிறது' (Tourism destroys Tourism) என்று பொருளாதர ஒத்துழைப்பு மற்றும் முன்னேற்ற நிறுவனம் கூறுகின்றது.

- இயற்கையை மட்டுமே மூலதனமாக வைத்து ஏறக்குறைய எல்லா சுற்றுலாத்தலங்களும் உள்ளன. இத்துறை நீடித்து வளர வேண்டுமானால் அவற்றின் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

- சுற்றுலாவினால் மிருகங்கள் இறந்துவிடும் அதிகரிக்கின்றது மிருகக்காட்சி சாலைகளுக்கு வரும் பயணிகள் நெகிழி பைகள் போன்ற கழிவுப்பொருட்களை கண்டபடி வீசி எறிகின்றனர். அதனைச் சாப்பிடும் மான் போன்ற விலங்குகள் இறந்து விடுகின்றன.

- காடுகளில் சில சுற்றுலாப் பயணிகள் தீமூட்டி கேளிக்கைகளில் ஈடுபடும் போது அந்தத் தீ மரங்களின் மீது பற்றிக் கொண்டு அப்பகுதியிலுள்ள காடுகளையே அழித்து விடுகிறது. இது போன்ற விஷயங்களில் தடை விதிக்க வேண்டும் சுற்றுசூழல் நல்ல முறையில் இருந்தால் தான் சுற்றுலா முன்னேற்றம் அடையும்

# பாடம் 6

# இந்தியாவின் குறிப்பாகத் தமிழகத்தின் சுற்றுலாவளங்கள் (கலை, கட்டிடக்கலை, நினைவுச் சின்னங்கள், சிற்பங்கள், பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள்)

**இந்தியாவின் புகழ்பெற்ற சில பண்பாட்டு சுற்றுலா மையங்கள்**

**1. அஜந்தா Ajantha**

- அஜந்தா மகாராஷ்டிரா மாநிலத்தில் அவுரங்காபாத்திலிருந்து வடக்கே 106கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு உலகப்புகழ்பெற்ற குகைகளும் ஓவியங்களும் உள்ளன.

- இந்த குகைகள் புத்தசமய சைத்தியங்களாகவும், விகாரைகளாகவும் பயன்பட்டன. இங்குள்ள முப்பது குகைகளுள் 1,2,16,17 மற்றும் 19-ம் எண்ணுள்ள குகைகள் சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவரும் தன்மை கொண்டுள்ளன.

**2. எல்லோரா Ellora**

- உலகப் புகழ்பெற்ற குகைகளும் ஓவியங்களும் உள்ள இடம் எல்லோராவாகும் அவுரங்காபாத்திலிருந்து 90 கி.மீ. தொலைவிலும், அஜந்தாவிலிருந்து தென்மேற்கே 90 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது எல்லோரா.

- இங்குள்ள 34 குடைவரைகள் மிகவும் புகழ்பெற்றவை. கி.பி. 580-க்கும் இடைப்பட்ட காலத்தில் உருவானவை. இந்த குடைவரைகள் புத்த, பிராமணிய, சமண சமயத்தைச் சார்ந்தவை. பேரழகு மிகுந்தவை.

**3. எலிபான்டா**

- எலிபான்டா குகைகள் மகாராஷ்டிடர மாநிலத்தில் உள்ளது. பம்பாய் துறைமுகத்திலிருந்து 9 கி.மீ. தொலைவில் உள்ள தீவுதான் எலிபெண்டா தீவு.

- இக்குகைக் கோவில்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இங்குள்ள சிவபெருமான் உருவம் மூன்று முகங்களைக் உடையவை. இவை

உருவாக்குதல், அழித்தல், காத்தல் என்ற மூன்று தொழிலைக் செய்யும் கடவுளாக அமையப்பெற்றது..

**4. கஜுராகோ**

- கஜுராகோ என்ற கலைச்செழுமை வாய்ந்த சுற்றுலா ஸ்தலம் மத்திய பிரதேச மாநிலம் பன்னா என்ற இடத்திலிருந்து 30 மைல் தொலைவில் அமைந்துள்ளது.

- கஜுராகோவில் சந்தேல மன்னர்கள் கூட்டிய 22 புதுமைமிக்க கோவில்கள் உள்ளன. அவை கி.பி.9-ம் நூற்றாண்டிற்கும் 13ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவை. இடைக்கால இந்தியாவில் கோவில் கட்டடக் கலையின் சிறப்பையும் வடிக்கப்பட்டுள்ள கவர்ச்சிமிகு சிற்பங்களையும் இங்கே காணலாம்.

**4. டெல்லி**

- இந்தியாவின் தலைசிறந்த நகரங்களுள் டெல்லியும் ஒன்று. இங்குள்ள பழைய டெல்லி ஒரு கலைப் பெட்டகமாகத் திகழ்கிறது இங்குள்ள கலைச்சின்னங்களும், கட்டிடங்களும் இந்திய பண்பாட்டை பிரதிபலிக்கின்றன.

- குப்தர்கள் காலத்தில் இரும்புத்தூண், சுல்தானியர் ஆட்சிக்காலத்தைச் சேர்ந்த குதுப்மினார், ஷெர்ஷா கட்டிய கோட்டை, முகலாய அரசர்களது கல்லறை மாடங்கள் அனைத்தும் கலைக் கருவூலங்களாகும்.

- ஹுமாயூனின் கல்லறை, ஷாஜஹான் காலத்திய டெல்லி செங்கோட்டை, திவானிகாஸ், ஜீம்மாமசூதி, அவுரங்கசீப்பின் முத்துமசூதி ஆகியவை கவின்மிகு கலைப்படைப்புகளாகும். இவை காண்பவர் கண்ணைக் கவரும் தன்மை கொண்டவை.

**5. ஆக்ரா**

- உத்திரபிரதேச மாநிலத்திலுள்ள ஆக்ரா யமுனை நதிக்கரையில் அமையபெற்றது இது ஒரு கலைக்கோட்டையாகவே திகழ்கிறது.

- உலகப்புகழ் பெற்ற உலக அதிசயமான தாஜ்மஹால் இங்குள்ளது மற்றும் ஷாஜஹானால் கட்டிய கட்டிடங்களுள் பன்னாட்டு புகழ்மிக்கதும், காதலின் சின்னமாகத் திகழ்ந்து ஒளி வீசுவதும் தாஜ்மஹால் இன்றும் செழுமையாக காணப்படுகின்றது.

## 8. கோவா

- இந்திய போர்ச்சுக்கீசிய கலாச்சாரத்தின் காலக்கண்ணாடியாக விளங்குவது கோவாகும் இது கீழ்த்திசையின் ரோம் எனவும், கீழ்த்திசை முத்து எனவும், கீழ்த்திசை அரசி எனவும், தங்ககோவா எனவும் போற்றிப் புகழப்படுகிறது.

.

## 9. மைசூர்

- மைசூர் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரமாகும் இதனை பல அரச வம்சத்தினர் ஆண்டு வந்துள்ளனர். எனவே இங்கு பல அரண்மனைகளும், பூங்காக்களும், கோவில்களும், சிற்பங்களும், நினைவுச்சின்னங்களும் இங்கு மட்டும் மொத்தம் இங்கே பதினேழு அரண்மனைகள் உள்ளன.

## 10. மகாபலிபுரம்

- சிற்பங்களின் அற்புதக் கலைப்படைப்பைக் கண்டுகளிக்க பயணிகள் செல்லவேண்டிய இடம்தான் மகாபலிபுரம்.

- இது சென்னையிலிருந்து தெற்கே 60 கி.மீ. தூரத்தில் வங்காள விரிகுடாக் கடற்கரையில் அமைந்துள்ளத இது உலகப்புகழ்பெற்ற பல்லவர் காலச் சிற்பங்களின் கலைகூடமாகும்,

- சித்திரங்கள், குடைவரைக் கோவில்கள், ராஜசிம்மன் உருவாக்கிய கடற்கரைக் கோவில் முழுவதும் கற்களால் ஆக்கப்பட்ட கற்கட்டுக் கோயில், கடல் அலைகள் முத்தமிட்டுக் கொண்டிருக்கும் இக்கலைப்பெட்டகம் தனிப்புகழ் வாய்ந்தது.

- பஞ்சபாண்டவர் ரதங்கள், ஐந்து தேர்கள் ஒவ்வொன்றும் கலைக் கருவூலங்களாக ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்பம்சம் கொண்டுள்ளது.

## 11. உதகமண்டலம் (ஊட்டி )

- உதகமண்டலம் எனப்படுகிற ஊட்டி மலைகளின் அரசி' என்று நேரு அவர்களால் போற்றப்பட்டது.

- எல்லாக் காலங்களிலும் சென்று தங்கி மகிழ்ந்து வரக்கூடிய இந்தியாவின் ஒரே மலை வாழிடம் உதகமண்டலம் என்பது பெருமைக்குரியதாகும்.

- நீலகிரி மலையின் நடுவில் 2286 மீட்டர் உயரத்தில் ஊட்டி அமைந்துள்ளது. மேகங்களை முத்தமிடும் மலைச்சிகரங்களும், பசுமை போர்த்திய மேடுபள்ளங்களும்,

- உருண்டோடும் சிற்றாறுகளும் நிரம்பிக் காணப்படும் உதகமண்டலம் இயற்கை எழில் கொஞ்சும் உல்லாசப் பிரதேசம். இங்கே ஆண்டு முழுவதும் இதமான தட்பவெப்பநிலையே நிலவுகிறது.

**முக்கிய நகரங்களில் திருவிழாக்கள்**

1) **மும்பை: பங்கங்கா திருவிழா,**

- மும்பையில் நடைபெறும் திருவிழாக்களில் பங்கங்கா திருவிழா' (Banganga Festival) முக்கியமான ஒன்று. இது ஒரு கலாச்சார திருவிழாவாகும்.

- இது 1922ஆம் ஆண்டு முதன் முதலாக நடத்தப்பட்டது. இந்து புராணக் கதையின்படி, ராமபிரான் இலங்கைக்குச் செல்லும்போது பம்பாய் தீவில் தங்கினார். அப்போது அங்கே குடிப்பதற்கு தண்ணீர் இல்லாததால் தனது வில்லை எடுத்து தரையில் ஒரு அம்பு எய்தார். உடனே புனித கங்கையிலிருந்து தண்ணீர் வந்து நிறைந்தது. அதுவே பங்கங்கா ஏரியாகும்.

- எலிபென்டா திருவிழா' (Elephenta Festival) முதன் முதலாக 1989-ம் ஆண்டு மகாராஷ்டிரா சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. இது பம்பாய் நகர மக்களால் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் திருவிழா ஆகும்.

- இந்தியா கேட்வேயிலிருந்து மிகச்சிறிய எலிபென்டா தீவுக்கு படகு மூலம் செல்லலாம். அங்கு விதவிதமான வண்ண உடைகளில் கோலி நடனக்காரர்கள் (Koli Dancers) வரவேற்பாளர்கள்.

- இந்த தீவில் உள்ள கி. பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாறைக் கோவில்களும் பயணிகளை அதிகமாகக் கவர்கின்றன. இந்த எலிபென்டா திருவிழா பயணிகளுக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

2) **புனே: விநாயகர் திருவிழா**

- வரலாற்றுச் சிறப்புமிக்க விநாயகர் திருவிழா' (Ganesh Festival)புனேவிற்கு சுற்றுலாப் பயணிகளை அதிகம் ஈர்க்கிறது.

- இது முதன்முதலாக 1892-ல் பாலகங்காதர திலகரால் மக்களிடம் அரசியல் விழிப்புணர்வு ஏற்படுவதற்காக ஆரம்பிக்கப்பட்டது.

- விநாயகர் உருவச்சிலை அமைத்து 11 நாட்கள் நடைபெறும். இறுதி நாளன்று இந்த விநாயகர் சிலைகள் கடலில் கரைக்கப்படும். இச்சமயத்தில் மகாராஷ்டிர சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பல பொழுதுபோக்கு அம்சங்களையும் சேர்த்து நடத்துகிறது.

3) **கோவா: ஆகோதிருவிழா**

- கோவா மிகப்பெரிய சுற்றுலா மையமாக விளங்குகின்றது இங்கு ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை அறுவடை திருநாள் நடைபெறுகிறது.

- டெலிகாவோ (Telegao) என்ற இடத்தில் நடைபெறும் ஆகோ' (Aaho) என்ற திருவிழா மிகவும் விசித்திரமானது. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் போர்ச்சுக்கீசியர்களுடன் இந்த டெலிகாவோ கிராம மக்கள் செய்து கொண்ட உடன்படிக்கையை நினைவு கூறும் விதமாக இந்த திருவிழா அமைந்துள்ளது.

- இது தவிர இங்கு நடைபெறும் தசரா, தீபாவளி, கிறிஸ்துமஸ் ஆகிய விழாக்களைக்காணவும் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள்.

4) **பெங்களூர்: தசரா திருவிழா.**

- ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் முதல் அக்டோபர் மாதங்களில் மைசூரில் நடைபெறும் தசரா (Dussehra) விழாவினைக் காண இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

- மைசூர் நகர வீதிகளில் அலங்கரிக்கப்பட்ட யானைகளின் மீது சாமுண்டீஸ்வரி பெண் கடவுளின் உருவச் சிலைகள் வலம் வரும் காட்சி காண்பவரைப் பரவசப்படுத்தும் விதமாக அமைந்துள்ளன.

5) **மதுரை**

- ஜல்லிக்கட்டு, ரேக்ளா பந்தயம், தெப்பத்திருவிழா, சித்திரைத் திருவிழா. மதுரை முக்கியமான சுற்றுலா நகரமாகும்.

- மதுரை மாவட்டத்தில் அலங்கா நல்லூர் என்ற ஊரில் நடைபெறும் ஜல்லிக்கட்டு விழாவைக்காண பல வெளி நாட்டுப் பயணிகள் வருகின்றனர்.

- ஜனவரி 16-ம் தேதி நடைபெறும் இவ்விழாவில் அடங்காத காளைகளை இளைஞர்கள் அடக்குவது வீரம் பொருந்திய விழா ஆகும்.

- மதுரை மேலூர் சாலையில் ஜனவரி 17-ம் தேதி நடை பெறும் ரேக்ளா ரேசும் சுற்றுலாப்பயணிகளை பெரிதும் ஈர்க்கிறது. இவ்வாறு இந்தியாவின் பல பகுதிகளில் நடைபெறும் திருவிழாக்கள் சுற்றுலாவிற்கு பெரும்பங்கு ஆற்றுகின்றது.

# பாடம் 7

# இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் உள்ள மதவழிபாட்டுமற்றும் புனித யாத்திரைத் தலங்கள் (இந்து, இஸ்லாம், புத்தம், கிறிஸ்துவம்  மற்றும் சமணம்)

இந்தியா பல மதங்களின் கொண்ட நாடு இங்கு பல்வேறு மதங்கள் சடங்குகள் பழக்கவழக்கங்கள் பின்பற்றப்படுகின்றது இதில் ஒன்றுதான் புனித யாத்திரையாக செல்லும் வழக்கமாகவும் பின்பற்றபடுகின்றது. இதில் தங்களின் மதங்களின் தலைமையிடமாக கருதப்படும் இடம் அல்லது அம்மதங்களின் புனித இடமாக கருதப்படும் இடங்ககளுக்கு சென்றுவருவது வழக்கமாக கொண்டுள்ளார்கள் இது இந்தியாவில் காலம் காலமாக பின்பற்றி வருகின்றார்கள் இதனால் அவ்வாறான இடங்கள் காலம் கடந்தும் சுற்றுலாதலமாக காட்சியளிக்கின்றது

**இந்து புனித யாத்திரை தலங்கள்**

புகழ்பெற்ற கோயில்களுக்கு செல்வது இந்து மக்களின் செயலாகும். இந்தியாவில் எண்ணற்ற இந்து சமய புனித தலங்கள் உள்ளன. இமயமலை, கேதார்நாத், கங்கோத்ரி, வாரணாசி, யமுனோத்திரி, அலகாபாத், அரித்துவார்-ரிசிகேசு, மதுரா, உத்தரப் பிரதேசம்-பிருந்தாவனம், அயோத்தி போன்றவை வட இந்திய தலங்களாகும்.

தென் இந்தியாவில் கும்பகோணம், பழனி, சமயபுரம், சபரிமலை, திருப்பதி, பஞ்சபூதத் தலங்கள் போன்றவை குறிப்பிடத்தக்கன.

**ஹிரிஷிகேஷ்**

- ஹிரிஷிகேஷ் என்றும் உச்சரிக்கப்படும் ரிஷிகேஷ் இந்திய மாநிலமான உத்தர்கண்டில் உள்ள டெஹ்ராடூன் மாவட்டத்தில் அமைந்துள்ள நகரமாகும்.
- இது இந்துக்களின் புனிதமான நகரம் என்பதுடன் பிரபலமான யாத்திரை மையமாகவும் இருக்கிறது.
- இது இமாலய மலைத்தொடர்களுக்கான நுழைவாயிலாகவும் இருக்கிறது,

- மற்றொரு புனித நகரமான ஹரித்துவாருக்கு ஏறத்தாழ 25 கிலோமீட்டர்கள் தொலைவில் அமைந்துள்ளது.
- பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, மற்றும் யமுனோத்ரி ஆகியவற்றை உள்ளிட்ட சார் தாம் யாத்திரை செல்வதற்கான துவக்கப் புள்ளியாக ரிஷிகேஷ் இருக்கிறது.

**பத்ரிநாத் கோயில்**

- இந்தியாவின் உத்தராகண்ட் மாநிலத்தில், சமோலி மாவட்டதில் உள்ள மலை வாழிடமான பத்ரிநாத்தில் உள்ள ஒரு கோவில். இது பத்ரிநாராயணன் கோவில் என்றும் அறியப்படுகிறது.
- இக்கோயில் அலக்நந்தா ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இது ஒரு திருமால் கோவில். இந்தியாவில் உள்ள முக்கியமான இந்துக்கோவில்களுள் இதுவும் ஒன்று.
- வைணவர்களால் போற்றப்படும் 108 திவ்வியதேசங்களுள் ஒன்றாகும். இமயமலையின் மிதமிஞ்சிய குளிரின் காரணமாக இது ஆண்டுக்கு ஆறு மாதங்கள் (ஏப்ரல் கடைசியில் இருந்து நவம்பர் தொடக்கம் வரை) மட்டுமே திறக்கப்பட்டிருக்கும்.
- இத்தலம் உலகப்பாரம்பரிய களமாக அறிவிக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- ஜகத் மந்திர் எனப்படும் துவாரகைக் கண்ணன் கோவில் மிகப்பெரிய அரண்மனை போன்று அமைந்துள்ளது.
- இங்கு அவனது பட்டத்தரசிகளுக்கும் அண்ணன் பலராமனுக்கும் குரு துர்வாசருக்கும் தனித்தனியே சன்னதிகள் உண்டு. கண்ணனுக்கு உணவும் உடையும் ஓயாமல் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள்.
- ஒரு நாளைக்கு 17 முறை உணவு கொடுத்து மணிக்கொருதரம் உடைமாற்றுகிறார்கள்.
- காலையில் இங்கு நடைபெறும் திருப்பள்ளியெழுச்சியை உடாபன் என்றழைக்கிறார்கள்.

**இராமேசுவரம் இராமநாதசுவாமி திருக்கோயில்**

- தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் பாண்டிய நாட்டுத் தலங்களில் ஒன்றாகும். சம்பந்தர், அப்பர் ஆகியோரின் பாடல் பெற்ற இத்தலம்.
- தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்தில், ராமேஸ்வரத்தில் அமைந்துள்ளது. இந்தியாவில் உள்ள 12 ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.
- இத்தலத்தில் இராவணனைக் கொன்ற பாவம் தீர இராமன் வழிபட்டார். இக்கோயிலின் மூலவர் பெயர் ராமநாதசுவாமி, அம்மன் பெயர் பர்வத வர்த்தினி.
- காசி, இராமேசுவரம் யாத்திரை செல்பவர்கள் முதலில் ராமேசுவரத்தில் அக்னி தீர்த்தத்தில் நீராடி, மணல் மற்றும் தீர்த்தம் எடுத்துக்கொண்டு காசி சென்று, கங்கை தீர்த்தத்தில் மணலை போட்டுவிட்டு, காசி விசுவநாதருக்கு அக்னி தீர்த்ததை அபிசேகம் செய்து, காசியிலிருந்து கங்கை தீர்த்தம் எடுத்து வந்து, ராமநாதருக்கு அபிசேகம் செய்ய வேண்டும்.

**காசி**

- காசி என்றும் பெனாரஸ் என்றும் அழைக்கப்படும் வாரணாசி இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலத்தில் மாநகராட்சி மன்றத்துடன் கூடிய நகரமாகும்.
- கங்கைக் கரையில் அமைந்த இந்நகர், இந்து சமயத்தினரின் ஆன்மிகத் தலைநகராகவும், அனைத்து இந்துக் கலைகளின் காப்பகமாகவும் விளங்குகிறது.
- முக்தி தரும் ஏழு நகரங்களில் வாரணாசியும் ஒன்று. இந்நகரம் கிமு 1800 ஆண்டுகளுக்கு மேல், மக்கள் தொடர்ந்து வாழும் பண்டைய நகரங்களில் ஒன்றாகும்

**ஜெகன்நாதர் கோயில்**

- ஜெகந்நாதர் கோயில், (Jagannath Temple) இந்தியாவின், கிழக்கு கடற்கரையில், ஒடிசா மாநிலத்தில், புரி அல்லது பூரி கடற்கரை நகரத்தில் அமைந்த வைணவத் திருக்கோயில் ஆகும்.
- இக்கோயில் ஜெகன்நாதர், பலபத்திரர் மற்றும் சுபத்திரைக்கு அர்பணிக்கப்பட்ட கோயிலாகும்.
- முகம் மற்றும் கைகள் மட்டுமே காணும் வகையில் அமைந்த இக்கோயிலின் மூலவர்களான ஜெகன்நாதர், பலபத்திரர் மற்றும்

சுபத்திரையின் திருமேனிகள் மரத்தால் ஆனவை. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை இம்மூலத் திருமேனிகள் உரிய சடங்குகளுடன், புதிய மரத்தால் செதுக்கி அமைக்கப்படும்.

- இக்கோயிலின் மூலவர்களான ஜெகந்நாதர், பலபத்திரர், சுபத்திரை தனித் தனியாக மூன்று தேர்களில் ஏறி ஊரை ஊர்வலம் வரும் நிகழ்வான ரத யாத்திரை திருவிழா ஆண்டிற்கு ஒரு முறை, ஆடி பௌர்ணமி அன்று துவங்கி ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுகிறது.

**சபரிமலை**

- சபரிமலை என்பது கேரளாவிலுள்ள மேற்கு மலைத்தொடர்களில் பத்தனம்தித்தா மாவட்டத்தில் உள்ள ஒரு புண்ணியத் தலமாகும்.

- மஹிஷி என்ற பெயர்கொண்ட அசுரபலம் கொண்ட அரக்கியை கொன்ற பிறகு சுவாமி ஐயப்பன் தியானம் செய்த இடமே சபரிமலை என வழங்கப்படுகிறது.

- பதினெட்டு மலைகளுக்கு இடையே சபரிமலை அய்யப்பன் கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோவில் ஒரு மலையின் உச்சியில் உள்ளது.

- மேலும் சராசரியான கடல் மட்டத்துடன் ஒப்பிடும் போது, 914 மீட்டர் உயரத்தில் காணப்படுகிறது. மேலும் மலைகள் மற்றும் காடுகளால் சூழ்ந்துள்ளது.

**பழனி முருகன் கோவில்**

- தமிழ்க்கடவுள் என்று அழைக்கப்படும் முருகனின் ஆறுபடை வீடுகளில் பழனியும் ஒன்று.

- தென்னிந்தியாவின் மிகவும் பிரசிதிபெற்ற இக்கோவில் அதிகமாக தமிழர்களால் கொண்டப்படுகின்றது.

- இங்கு பல்வேறு யாத்திரைகள் இந்துக்கள் மேற்கொள்கின்றார். இதன் பங்குனி உத்திரம் தைபூசம் என்ற இரண்டிற்கும் லட்சக்கணக்கான பத்தர்கள் பாதையாத்திரை மேற்க்கொண்டு முருகனை வழிபாடு செய்கின்றார்கள்.

- இந்துகளுக்கு மட்டும் அல்லது அனைவரும் வணங்கும் இடமாக இது அமைந்துள்ளது

**இஸ்லாமிய புனித யாத்திரை தலங்கள்**

**ஜும்மா மசூதி, டெல்லி**

டெல்லியில் உள்ள ஜம்மா மசூதி, இந்தியாவில் உள்ள மிகப்பெரிய மசூதிகளில் ஒன்று. செங்கோட்டைக்கு அருகில் இருக்கும் இம்மசூதி, ஷாஜகானின் கடைசி படைப்புகளில் ஒன்றானதாக நம்பப்படுகிறது. மஸ்ஜித்-ஐ-ஜகான்-நுமா என்று அழைக்கப்படும் இம்மசூதி, 5000 தொழிலாளிகளைக் கொண்டு, சிவப்பு மணற்கற்களாலும், மார்பிள்களாலும், கட்டப்பட்டது. மசூதியின் முற்றத்தில், ஒரே சமயத்தில், 25000 பேர் தொழுகை செய்யலாம். மசூதிக்கு, மூன்று நுழைவாயில்களும், இரண்டு தூபிகளும், நான்கு கோபுரங்களும் உள்ளன. ஐந்தடுக்கு கொண்ட தூபிகளில், நுண்ணிய வேலைப்பாடு செதுக்கல்களும், Calligraphy என்று சொல்லப்படுகின்ற கையெழுத்துக் கலையும் கொண்டது. மசூதியின் தரை, பிரார்த்தனை விரிப்பை போன்ற கருப்பு வெள்ளை மார்பிள்களால் வடிவமைக்கபட்டிருக்கின்றன.

**தர்கா ஷரீஃப், அஜ்மீர்**

இது ஒரு சூஃபி ஸ்தலம். சூஃபி துறவியான மொய்னுதீன் சிஷ்டியின் ஸ்தலம். இந்தியாவில் பக்தர்களை அதிகம் ஈர்க்கும் மசூதிகளில் இதுவும் ஒன்று. எவரேனும் தூய நம்பிக்கையோடு இந்த தர்காவிற்கு சென்று பிரார்த்தனை செய்தால், அவர்களின் ஆன்மா விடுதலை பெறும் என்று நம்பப்படுகிறது.அக்கால மொகலாய கட்டுமானத்தை ஒத்த கட்டுமானம் என்று இத்தர்காவில் தெளிவாகத் தெரிகிறது. பல லட்ச பக்தர்கள், சூஃபி துறவியைப் பற்றி தெரிந்து கொள்வதற்கும், அவரின் ஆசியைப் பெருவதற்கும், இம்மசூதிக்கு வருகின்றனர். ஜெய்ப்பூரிலிருந்து மூன்று மணி நேரப்பயணம் இம்மசூதி.

**பாரா இமாம்பாரா, லக்னோ**

இஸ்லாமிய வழிப்பாட்டு ஸ்தலங்களில் ஒன்றான இது, ரமலான் மற்றும் முகரம் சமயங்களில் அதிகம் பேர் வருகின்றனர். இந்த நினைவுச்சின்னம், நிவாரண திட்டத்தின் ஒரு பகுதியாக கட்டப்பட்டது. அக்கால, ஆவாத் பேரரசர், நவாப் அசாஃப்-உத்-தௌல்லா, ஆவாத்தின் தலைநகர், லக்னோவில் ஒரு பிரார்த்தனை மண்டபத்தை அமைக்க, சிறந்த கட்டிட கலைஞர்களைப் பணித்தார். இதன் மூலம், பணக்கார மற்றும் ஏழ்மை நிலையில் இருக்கும் வேலையில்லா திண்டாட்டத்தை களைய விரும்பினார். அக்காலத்தின் சிறந்த கட்டுமானத்தில் ஒன்றான இந்த பிரார்த்தனை மண்டபத்தை கட்டி முடிக்க 11 ஆண்டுகள் ஆனது;

திறமைமிகு எந்தவொரு தொழிலாளியும் வேலையில்லாமல் இருக்ககூடாது என்று 20,000 தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டனர் இந்த கட்டுமானத்திற்கு.

**தாஜ்-உல் மஸ்ஜித், போபால்**

இந்தியாவின் மிகப்பெரிய மசூதி. தாஜ்-உல் மஸ்ஜித் என்ற வார்த்தைக்கு மசூதிகளின் மகுடம் என்று பொருள். இளஞ்சிவப்பு வண்ணத்தில், இருபக்கமும், 18 அடுக்குகள் கொண்ட உயர் தூபிகளும், மார்பிள் குவிமாடமும் கொண்ட மசூதி. மசூதியின் தரை, டெல்லி, ஜம்மா மசூதியின் தரையை நினைவுபடுத்தும் வகையில் இருக்கும். முக்கிய மண்டபத்தில், அழகாக கட்டப்பட்ட தூண்கள் உள்ளது.

**ஹஸ்ரத்பல் மஸ்ஜித், ஸ்ரீ நகர்**

இஸ்லாமியர்களின் முக்கிய மத இடங்களில் இதுவும் ஒன்று. மிரட்சி தரும் வெண்ணிற மார்பிளின் கட்டுமானத்தில் ஒரு ஏரிக்கு அருகில் இருக்கிறது. முகமது நபியின் முடி இங்கு இருப்பதாக நம்பப்படுகிறது. முக்கியமான பண்டிகை தருணங்களில், மக்களின் பார்வைக்கு இது வைக்கப்படுகிறது.

**நாகூர் தர்கா**

நாகூர் தர்கா என அழைக்கப்படும் சையத் சாகுல் ஹமீது தர்கா அல்லது நாகூர் ஆண்டவர் தர்கா நகூர் நகரில் உள்ள சூஃபி துறவி சாகுல் ஹமீது (1490-1579 கிபி) அவர்களின் அடக்கத்தலம் அமைந்துள்ள தர்கா ஆகும். இது தென்னிந்திய மாநிலமான தமிழ்நாட்டின் கடலோர நகரமான நாகூரில் அமைந்துள்ளது. இத்தர்காவின் வெளிப்புற கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும். உள்கதவுகள் திறக்கும் நேரம் அதிகாலை 4:30 மணி முதல் காலை 07:00 மணி வரை மற்றும் மாலை 6:25 மணி முதல் இரவு 9:30 மணி வரை. வெள்ளிக்கிழமை மட்டும் கூடுதலாக 12 முதல் 2:30 மணி வரை திறந்திருக்கும். ஷாஹுல் ஹமீத் நாகூரில் பல அற்புதங்களைச் செய்ததாக நம்பப்படுகிறது, நாகூர் தர்கா இப்போது இருப்பதைப் போல, ஷாஹுல் ஹமீதின் தீவிர பக்தர்களால் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது, இந்துக்களின் பெரும் பங்களிப்புடன் கட்டப்பட்ட ஐந்து மினார்கள் தர்காவில் உள்ளன, தஞ்சாவூர் இந்து மராத்தா ஆட்சியாளர் பிரதாப் சிங் (பொ.ச. 1739-1763), மிக உயரமான மினாரைக் கட்டுகிறார். தர்கா ஒரு முக்கிய புனித யாத்திரை மையமாகும், இது இஸ்லாம் மற்றும் இந்து மதம் ஆகிய

இரண்டிலிருந்தும் யாத்ரீகர்களை ஈர்க்கிறது, இது இரு மதங்களுக்கிடையில் அமைதியான சகவாழ்வைக் குறிக்கிறது.

நாகூர் தர்காவில் கொண்டாடப்படும் மிக முக்கியமான நிகழ்வு கந்துரி திருவிழா, ஷாஹுல் ஹமீதின் ஆண்டு விழாவின் பதினான்கு நாள் நினைவு நாள். நாகூர் தர்காவில் உள்ள பொதுவான வழிபாட்டு நடைமுறைகளில் பிரசாதங்களை வழங்குவதும், இந்து மத பாரம்பரியத்தின் வழக்கமான நாதஸ்வரம் போன்ற இசைக் கருவிகளை வாசிப்பதும் அடங்கும் . ஷி்ஃபா தர்காவினுள் உள்ள குளம் புனிதமாக கருதப்படுகிறது; யாத்ரீகர்கள் அதில் புனித நீராடுகிறார்கள்.

**ஏர்வாடி தர்கா**

எர்வாடி தர்கா குதுபுஸ் சுல்தான் சையத் இப்ராஹிம் பதுஷாவின் ஒரு புனித இஸ்லாமிய புனித கல்லறையாகும், மேலும் சயீத் இப்ராஹிம் உலியல்லா அல்லது சீயத் அலி எனும் பெயரிடப்பட்டுள்ளது. இது இந்தியாவில் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள எர்வாடி கிராமத்தில் அமைந்துள்ளது. சைய்யத் அலிக்கு அர்ப்பணிக்கப்பட்ட முக்கிய தர்கா. இங்கு மூன்று தர்காக்கள் உள்ளன, ஷாஹித் தாயின் பாத்திமாவின் ஒன்றில், இரண்டாவதாக அவரது மனைவி சீயத் அலி பாத்திமா மற்றும் அவரது மகன் அபு தாஹிர் மூன்றாவது நபராக உள்ளார். தர்காக்களை கட்டியெழுப்பும் நிலம் ராமநாதபுரம் மகாராஜாவிடமிருந்து கிடைத்தது, ஆற்காடு நவாப் 1207-ம் ஆண்டு முக்கிய தர்காவைக் கட்டியெழுப்பினார்,

இந்த தர்கா மனநோயாளர்களின் மனச்சோர்வைக் குணப்படுத்துவதற்கு நன்கு அறியப்பட்டிருக்கிறது, ஒவ்வொரு நாளும் ஆயிரட்திற்கும் மேற்பட்ட மக்கள் இந்த தர்காவிற்கு விஜயம் செய்கின்றனர். நோய்வாய்ப்பட்ட மக்களுகளை குணமாக்க பிரார்த்தனைகளைத் தவிர ஒரு நாளைக்கு இரண்டு முறை தர்காவில் இருந்து புனித நீர் மட்டுமே அளிக்கப்படுகிறது.

**பௌத்த புனித யாத்திரை தலங்கள்**

**மகாபோதி கோயில்,**

- புத்த கயா, கௌதம புத்தர் ஞானம் பெற்ற இடத்தில் அமைந்துள்ள ஒரு புத்த கோயில் ஆகும்.

- புத்த காயா, இந்தியாவிலுள்ள பீகார் மாநிலத்தின் கயா மாவட்டத்தில், மாநிலத் தலைநகரமான பாட்னாவிலிருந்து 96 கிமீ தொலைவில் அமைந்துள்ளது.
- கோயிலுக்கு அருகே அதன் மேற்குப் புறத்தில், புனித போதி மரம் உள்ளது. பாலி நூல்கள் இவ்விடத்தை போதி மண்டா என்றும், அங்குள்ள விகாரையை போதிமண்டா விகாரை என்றும் குறிப்பிடுகின்றன.
- இது உலகெங்கிலும் உள்ள புத்த சமயத்தவர்களுக்கான புனித யாத்திரைக்கான இடமாகவும் விளங்குகிறது. 2002 ஆம் ஆண்டில் இது யுனெஸ்கோ உலக பாரம்பரியக் களம் எனவும் அறிவிக்கப்பட்டது

**புத்தகயை**

- புத்த கயா அல்லது உள்ளூர் உச்சரிப்பின்படி போத்கயா இந்திய மாநிலமான பீகாரின் கயா மாவட்டத்தில் உள்ள ஒரு நகரம்.
- கௌதம புத்தர் இங்குள்ள அரசமரத்தடியில் (போதி மரம்) ஞானம் பெற்ற இடம் என்பதால், உலகம் முழுவதுமுள்ள பௌத்தர்களுக்கு புத்தகயா புனிதத் தலமாகத் திகழ்கிறது.
- முற்காலத்தில் போதிமண்டா எனப்பட்ட இவ்விடத்தில் பிக்குகள் தங்கும் பெரிய விகாரம் ஒன்று இருந்தது. புத்த காயாவில் உள்ள முதன்மையான துறவிமடம் போதிமண்டா விகாரையாகும்.
- இது இப்போது மகாபோதி கோயில் என அழைக்கப்படுகிறது. கௌதம புத்தரின் வாழ்க்கையோடு தொடர்புடைய நான்கு யாத்திரைத் தலங்களில் புத்த கயாவே முதன்மையானதாகப் புத்த மதத்தினர் கருதுகின்றனர்.
- மற்றவைகள் குசிநகர், லும்பினி, சாரநாத், கபிலவஸ்து, புத்த கயா, சாரநாத் மற்றும் சாஞ்சி ஆகும்.

**பாக் குகைகள்**

- புலிக் குகைகள்(Bagh Caves), மத்திய இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலத்தில், விந்திய மலைத்தொடரின் அடிவாரத்தில் தார் மாவட்டத்தின் பாக் என்ற ஊரில் அமைந்த ஒன்பது குடைவரை நினைவுச் சின்னங்கள் ஆகும்.
- குடைவரைக் கட்டிடக் கலையில் அமைந்த இக்குகைகளில் பண்டைய இந்தியாவின் புகழ்பெற்ற சுவர் ஓவியங்கள் கொண்டுள்ளது.

- தற்போது ஐந்து குகைகள் மட்டும் உள்ளது. மணற்கல் பாறைகளில் செதுக்கப்பட்ட இக்குகைச் சுவர்களில் அஜந்தா குகை ஓவியங்கள் போன்ற பௌத்த சமயம் குறித்தான ஓவியங்கள் வரையப்பட்டுள்ளது.

**குசிநகர்**

- இந்தியாவின் உத்திரப் பிரதேசம் மாநிலத்தில், குசிநகர் உள்ளது. கௌதம புத்தர் தனது எண்பதாவது அகவையில் பரிநிர்வாணம் அடைந்த நகரம்.
- கோரக்பூரிலிருந்து கிழக்கே 53 கி மீ தொலைவில் அமைந்துள்ளது. குசிநகரம் அனைத்துலக பௌத்தர்களின் புனித தலமாக விளங்குகிறது.

**சாரநாத்**

- இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில் வாரணாசிக்கு 10 கிமீ வட-கிழக்கே அமைந்துள்ள ஒரு வரலாற்றுப் புகழ் மிக்க நகரம் ஆகும்.
- இவ்வூரில் அமைந்துள்ள மான் பூங்காவிலேயே கௌதம புத்தர் தனது முதல் போதனையான தர்மம் என்பதைப் போதித்தார்.
- இங்கிருந்து ஒரு கிமீ தொலைவில் உள்ள சிங்பூர் என்ற இடத்திலேயே சைன மதத்தின் 11வது தீர்த்தங்கரர் என அழைக்கப்படும் சிரேயனசனாதரர் பிறந்த இடமாகும். இங்குள்ள அவரது கோவில் ஓர் ஆன்மிக சுற்றுலாத் தலமாக விளங்குகிறது.

**சமணப் புனிதத் தலங்கள்**

இந்தியாவில் இராஜஸ்தான், குஜராத், உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகா, மகாராட்டிரா, மத்தியப் பிரதேசம், ஒடிசா போன்ற மாநிலங்களில் சமணக் கோயில்களும், குடைவரைகளும், படுகைகள் போன்ற நினைவுச் சின்னங்களும் உள்ளது.

**தரங்கா**

- இந்திய மாநிலமான வடக்கு குசராத்தின் மெக்சனா மாவட்டத்தில் அமைந்துள்ள ஊராகும். இவ்வூரின் மலையில் அமைந்த 14 சுவேதாம்பர மற்றும் 5 திகம்பர சமணக் கோயில்கள், சோலாங்கி மன்னர் குமாரபாலனால் கி பி 1121இல் கட்டப்பட்டதாகும்.
- சமணத் தீர்த்தங்கரர் அஜிதநாதரின் 2.75 மீட்டர் உயரம் கொண்ட பளிங்குச் சிலையை மையமாகக் கொண்டு 24 தீர்த்தங்கரர்களின் சன்னதியுடன் கூடிய கோயில்கள் கட்டப்பட்டுள்ளது.

**கிர்நார் மலை**

- கிர்நார் அல்லது ரைவத மலை (Girnar or Revatak Pravata) , இந்திய மாநிலமான குஜராத்தின் ஜூனாகாத் மாவட்டத்தின் தலைமையிடமான ஜூனாகத் நகரத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.
- பௌத்தர்களும், இந்துக்களும் மற்றும் சமணர்களும் கிர்நார் மலையைப் புனித தலமாக கருதுகின்றனர்.
- கிட்டதிட்ட 3661 அடி உயரம் கொண்ட கிர்நார் மலை 8,000 படிகளுடன் கூடியது
- அசோகரின் 14 கல்வெட்டுகளில், மூன்று கல்வெட்டுகள் ஜூனாகத்திலும் ஒரு கல்வெட்டு கிர்நார் மலையிலும் காணப்படுகிறது

**ராணக்பூர் சமணர் கோயில்கள்,**

- இந்தியாவின் இராஜஸ்தான் மாநிலத்தின் ஆரவல்லி மலைத்தொடரில், பாலி மாவட்டத்தில் உள்ள ராணக்பூர் கிராமத்தில், சமணத் தீர்த்தங்கரர்களில் முதல்வரான ஆதிநாதர் எனும் ரிசபநாதர் மற்றும் 7வது தீர்த்தங்கரரான சுபர்சுவநாதருக்கு அர்ப்பணிக்கப்பட்ட அழகிய சிற்பங்களைக் கொண்ட கோயில்களாகும்.
- இக்கோயில் உதய்பூர் நகரத்திலிருந்து 95 கிமீ தொலைவிலும்; ஜெய்ப்பூரிலிருந்து 370 கிமீ தொலைவிலும் உள்ளது.
- இக்கோயில் மேவார் மன்னரான ராண கும்பாவின் உதவியுடன் ரணக்பூரின் சமண வணிகரான தர்னாஷா என்பவர் கிபி 15ம் நூற்றாண்டில் கட்டினார். ]இது மூன்று கோயில்களின் தொகுப்பாகும்.
- சமணர்களின் ஐந்து முக்கிய யாத்திரைத் தலங்களில் ராணக்ப்பூர் சமணர் கோயில்களும் ஒன்றாகும்

இந்தியாவில் பல்வேறு மதங்கள் நம்பிக்கைகள் என் வேறுபட்டு இருப்பின் ஒற்றுமையில் இருப்பதால் தான் இது நம்புவதற்கரிய நாடாக விளங்குகின்றது

**கிருஸ்துவ புனித தலங்கள்**

- 2011 கணக்கெடுப்பின்படி இந்தியாவில் கிறிஸ்தவம் மூன்றாவது பெரிய சமயமாக, கிட்டத்தட்ட 27.8 மில்லியன் அங்கத்தவர்களுடன் இந்திய மக்கள் தொகையில் 2.3 சதவீதமாகவுள்ளது.

- கிறிஸ்தவத்தை இந்தியாவிற்கு தோமா (திருத்தூதர்) அறிமுகப்படுத்தினார் என்றும், தமிழகத்தின் முசிறித் துறைமுகத்தை கி.பி 52ல் வந்தடைந்தார் எனவும் நம்பப்படுகின்றது.
- ஆயினும் பொதுவான புலமையாளர்களின் கணக்குப்படி கிறிஸ்தவம் நிச்சயமாக கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்கு முன்பே அறிமுகப்படுத்தப்பட்டது எனக் கருதப்படுகிறது.

தென்னிந்தியத் திருச்சபை தமிழகத்தில் 8 பேராயங்களாக (dioceses) அமைந்து இயங்கிவருகிறது. ஒவ்வொரு பேராயமும் ஒரு பேராயரின் (bishop) தலைமையின் கீழ் உள்ளது. பேராயங்கள் கீழ்வருவன:

1. கன்னியாகுமரி பேராயம்
2. திருநெல்வேலி பேராயம்
3. மதுரை-இராமநாதபுரம் பேராயம்
4. தூத்துக்குடி-நாசரேத்து பேராயம்
5. திருச்சி-தஞ்சாவூர் பேராயம்
6. வேலூர் பேராயம்
7. கோயம்புத்தூர் பேராயம்
8. சென்னை பேராயம்

தென்னிந்தியத் திருச்சபையும் பல கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள், சேவை நிறுவனங்கள் போன்றவற்றை நடத்தி, மக்களுக்குப் பணிசெய்துவருகிறது.

சென்னை சாந்தோம் பெருங்கோவில். இயேசுவின் சீடரான புனித தோமாவின் கல்லறைமீது கட்டப்பட்ட கோவில்.

**வேளாங்கண்ணி**

- புனித ஆரோக்கிய அன்னை திருத்தலம்' நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி தமிழ்நாடு, இந்தியாவில் உள்ள கத்தோலிக்க திருத்தலமாகும்.
- இவ்வாலயம் தூய ஆரோக்கிய அன்னையின் பெயரால் கட்டப்பட்டதாகும். 16ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த மூன்று புதுமைகளினால் இங்கே ஆரோக்கிய அன்னையின் பக்தி பரவலாயிற்று.
- அம்மூன்று புதுமைகள்: இடைய சிறுவனுக்கு காட்சி தந்தது, தயிர் விற்ற முடவனுக்கு கால் நலமடைந்தது, போர்த்துகீசிய மாலுமிக்கு கடும் புயலில் கரை வந்தடைய உதவியது
- வருடம் தோறும் இங்கு கிருஸ்த்துவர்கள் புனிதயாத்திரை செய்து பயணம் மேற்கொள்கின்றார்கள்.

# பாடம் 8

# இந்தியாவில் சுற்றுலா நிர்வாகம் (இந்திய சுற்றுலா அமைச்சகம் மற்றும் மாநில சுற்றுலாத் துறை)

வெளிநாட்டுப் பயணிகளைக் கவர்ந்திழுப்பதில் இந்தியாவில் உள்ள தொல்பொருட்கள், கலாச்சார சாதனைகள் போன்றவையே, பெரும்பாலும் பங்கு வகிக்கின்றன. 1968-69 மற்றும் 1972-73 ஆகிய ஆண்டுகளில் நடத்திய சுற்றுலாத்துறை ஆய்வு புள்ளிவிவரப்படி 42 சதவீதப் பயணிகள் தெரிந்துகொள்ளும் ஆர்வம் (Curiosity) காரணமாகவும் 34 சதவீதத்தினர் இந்திய நாட்டின் கலைகளையும் நாகரீகத்தையும் கண்டுகளிப்பதற்காகவுமே இந்தியா வந்துள்ளார்கள் என்று கூறப்படுகின்றது. ஐ.நா. சபையின் நிறுவனங்களில் ஒன்றான யுனஸ்கோவிடமிருந்து உதவி பெற்று புகழ்பெற்ற தொல்பொருள் இடங்களைச் சீர்திருத்திப் பாதுகாத்தது. பண்பாட்டு சுற்றுலாவை மேலும் விரிவாக்க 1969-ல் யுனஸ்கோ உறுப்பினர் டாக்டர் E.R. ஆல்சின் என்பவரின் உதவியை நாடியது இந்தியா. அவர் 1970-ம் ஆண்டு இந்தியாவில் உள்ள பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை விளக்கி ஓர் அறிக்கை தயார் செய்து இந்திய அரசிடம் சமர்ப்பித்தார். இது ஆல்சின் பரிந்துரைகள் என அழைக்கப்படுகின்றது.

**ஆல்சின் பரிந்துரைகள் பின்வருமாறு.**

- இந்தியாவின் கட்டிடக்கலை, ஓவியக்கலை, பழம்பொருள்கள் போன்றவை வெளிநாட்டுப் பயணிகளைக் கவர்ந்துள்ளன.

- புத்தமத, இஸ்லாமிய, இந்து மத நினைவுச் சின்னங்கள் ஐரோப்பியர்களால் இந்தியாவில் உருவாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் இந்தியாவில் அதிகம் உள்ளன. அவை பண்பாட்டுச் சுற்றுலாவை மேம்படுத்த உதவும்.

- சமயத்தில் ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவர்கள் இந்தியாவிலுள்ள சமய நினைவுச் சின்னங்களுக்கு அதிக மதிப்பளிக்கின்றனர்.

- இந்தியாவிலுள்ள புனித இடங்களும், வழிபாட்டு ஸ்தலங்களும், அவற்றுள் காணப்படும் கலைப் படைப்புகளும் பல வெளிநாட்டுப் பயணிகளைக் கவர்ந்துள்ளன.

- உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் இந்தியர்களும் இங்கு சுற்றுலாப்பயணிகளாக அடிக்கடி வந்து தங்கள் நாட்டு பாரம்பரியக் கலாச்சார சின்னங்களைப் பார்த்து மகிழ்ந்து செல்கின்றனர்.

- சீனா, ஜப்பான், தாய்லாந்து, இலங்கை போன்ற நாடுகளில் உள்ள புத்த சமயப் பயணிகள் அதிக எண்ணிக்கையில் இந்தியா வந்தடைகின்றார்கள்.

- இந்தியாவின் இயற்கை கொஞ்சும் எழில்வளம் கொண்ட நாடு. இது 48.3 சதவீத உலகப் பயணிகளைக் கவர்ந்துள்ளது. இங்கு காணப்படும் அழகிய இயற்கைக் காட்சிகள், மஞ்சு சூழ்மலைகள், நீண்ட கடற்கரைகள், குதித்தோடும் ஆறுகள், ஓங்கி வளர்ந்த மரங்கள் நிறை காடுகள், கடலெனப் பரந்து கிடக்கும்

- ஏரிகள், பனி மண்டலங்கள், பாலைவனங்கள், அபூர்வ விலங்குகள், இயற்கைத் தாவரங்கள் ஆகியவை பயணிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு மகிழ்விக்கின்றன.

- இந்தியாவின் மரபு வழிப்பட்ட கலைப்பொருட்களும் கைவினைப் பொருட்களும் பயணிகளைக் கவர்கின்றன. இந்தியக் கலைகளை அறிந்து. கொள்வதற்கும், கலைஞர்களின் வாழ்க்கையைப் புரிந்து கொள்வதற்கும் வெளிநாட்டுப் பயணிகள் இந்தியா வருகின்றனர்.

- தங்களது பயண நினைவுப் பொருளாக சுற்றுலாப் பயணிகள் கைவினைப் பொருட்களை வாங்கிச் செல்கின்றனர்.

- இசையும் நடனமும் பண்பாட்டுச் சுற்றுலாவுக்குள் அடங்கும். இந்திய இசை, நடனம், நாடகம், சுவையான உணவுக்கலையும் பண்பாட்டுச் சுற்றுலாவுக்குள் அடங்கும். ஒவ்வொரு இடத்திற்கும் ஏற்ற உணவு இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது.

- இந்திய சுற்றுலா சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் கவனிப்பதற்காக 1958-ம் ஆண்டு மார்ச் 1-ம் தேதி தனியாக ஒரு அமைச்சகம் உருவாக்கப்பட்டது.

- ஆரம்பத்தில் இந்த துறை போக்குவரத்து மற்றும் செய்தித் தொடர்பு அமைச்சகத்துடன் இணைந்தே செயல்பட்டது. இவ்வாறு தனியாக ஒரு துறை அமைக்கப்பட வேண்டும் என்ற தேவை நிவர்த்தி செய்யப்பட்டது.

- ஆரம்பத்தில் அது ஒரு நிர்வாக இயக்குநரை தலைவராகக் கொண்டு இயங்கியது வந்தது. மேலும் துணை இயக்குநர், மற்றும் நான்கு பிற இயக்குநர்களும் இருந்தனர்.

- நான்கு இயக்குநர்களும் சுற்றுலாவின் நிர்வாகத் துறை, பிரசுரிமைத் துறை, பயணத் தொடர்புத்துறை, திட்ட மேம்பாட்டுத்துறை ஆகிய பணிகளைக் கவனித்துக் கொண்டார்கள்.

- 1967 மார்ச் 14-ம் தேதி இந்திய குடியரசுத் தலைவரின் பிரகடனத்தின் படி சுற்றுலா மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் என்ற அமைச்சகம் ஒரு கேபினட் அமைச்சரின் தலைமையில் உருவாக்கப்பட்டது.

**இந்திய சுற்றுலாத் துறை அமைச்சகம்**

சுற்றுலாத் துறை அமைச்சகம் (Ministry of Tourism) இந்திய அமைச்சகங்களில் ஒன்றாகும். இந்திய சுற்றுலா வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு இன்றியமையாத விதிமுறைகள், ஒழுங்குமுறைகள் மற்றும் சட்டதிட்டங்கள் வடிவமைப்பது இந்த அமைச்சின் பொறுப்பு. இந்திய சுற்றுலாத் துறை, 2011ஆம் ஆண்டு, இலண்டனில் நடைபெற்ற உலக சுற்றுலாக் கண்காட்சியில் இரண்டு விருதுகள் வென்றதன் மூலம் உலகளவில் புகழ்பெற்றது. அவ்விரு விருதுகள், உலகின் முன்னணி பயண இலக்கு, உலகின் முன்னணி சுற்றுலா வாரியம் (Incredible India) முதலிய பிரிவுகளுக்காக வழங்கப்பட்டது.

**சுற்றுலாத் துறையின் பணிகள்**

இந்தியா சுற்றுலாத் துறையில் சுற்றுலா மேம்பாடு மற்றும் அமைப்பு முறைகள் கீழ்க்கண்ட பல பிரிவுகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன

- திட்டமிடுதல்
- விளம்பரம் செய்தல்
- கூட்டங்கள் நடத்துதல்
- வாகனவசதி செய்தல்
- வரவேற்று உபசரித்தல்
- தங்கும் வசதி செய்து தரல்
- வனவிலங்கு சுற்றுலா மையங்களாக்குதல்
- சந்தைப்படுத்துதல்
- நிர்வாகப்பிரிவு

போன்ற ஏழு பிரிவுகளை உடையது.

இதுபோன்று பல்வேறு மாநிலங்களிலும் பல்வேறு கழகம் அமைச்சகம் மூலமும் செயல்பட்டு வருகின்றது.

**மாநில அரசின் ஒத்துழைப்பு**

திட்டமிடுதல் என்பது கொடுக்க கூடிய பொருள்களையும், மூலங்களையும் மதிப்பீடு செய்து அவற்றின்மீது ஏற்படும் தேவையை அறிதலாகும். சுற்றுலாத் துறையில் பல்வேறு நிறுவனங்கள் ஈடுபடுவதால், அவற்றை ஒருங்கிணைத்துச் செயல்படுத்த வேண்டும். ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டிலுள்ள தேசிய

சுற்றுலாக் கழகத்தின் வழியாகச் சுற்றுலாவை மேம்படுத்துகின்றது. தங்கள் நாட்டின் புவியியல் நிலைக்கேற்பவும், தங்கள் நாட்டின் வரவு செலவுத் திட்டத்திற்கேற்பவும், தங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கேற்பவும் திட்டமிட வேண்டும். பிரான்சு நாடு லாங்கோடிக்-ரவுசிலியன் திட்டத்தில் அம்முறையைக் கையாண்டு வெற்றி பெற்றுள்ளது. ஓரிடத்தை மேம்படுத்த அம்மாநில அரசின் ஒத்துழைப்பு, முதலீடு, புதியன புனையும் திறன் போன்றவை தேவை. வளர்ந்து வரும் நாடுகளில் மாநில அரசின் ஒத்துழைப்பே சுற்றுலா வெற்றி பெறுவதற்கு முக்கியக் காரணியாக அமையும்.

**தமிழ் நாட்டில் சுற்றுலா வளர்ச்சி**

இந்திய சுற்றுலாத்துறையில் மூன்றாவது இடம் வகிக்கும் மாநிலம் தமிழ்நாடு ஆகும். இங்கே சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் அம்சங்கள் அனைத்தும் காணப்படுகிறது. குளுமையான மலைவாசஸ்தலங்கள், நீர் வீழ்ச்சிகள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பழங்கால கோவில்கள், குகைகள் போன்ற பல சுற்றுலா இடங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. மேலும் பக்கத்து நாடான இலங்கைக்குச் செல்லும் வெளிநாட்டுப் பயணிகள் பலர் தமிழகத்தில் சில நாட்கள் தங்கிவிட்டுச் செல்கின்றனர்.

எனவே தமிழ்நாட்டில் சுற்றுலா ஒரு சிறப்பிடம் பெற்றுள்ளது. தமிழக அரசும் சுற்றுலாவை மேம்படுத்த இந்த துறைக்கு 'தொழில் மதிப்பை' வழங்கி உள்ளது. அதாவது தொழிற்துறைக்குக் கொடுக்கப்படும் அனைத்துச் சலுகைகளும் சுற்றுலாத்துறைக்கும் வழங்கி உள்ளது.

தமிழக அரசு சுற்றுலா வளர்ச்சிக்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழகத்தில் உள்ள சுற்றுலா இடங்களைப்பற்றி இன்டர்நெட் மூலம் வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்யப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் செய்துள்ளது. அறநிலையத்துறையின் 15 ஆலயங்களைப் பற்றியும் இன்டர்நெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராமேஸ்வரம் மண்டபம் அருகே கடலில் 22 தீவுகள் மன்னார்வளைகுடாவில் உள்ளன. கடல்பசு, டால்பின், கடல்குதிரை, பவளப்பாறைகள் மற்றும் அரிய கடல்வாழ் உயிரினங்கள் வாழ்கின்றன. ராமேஸ்வரத்திற்கு வரும் வெளிநாட்டு, வெளிமாநில சுற்றுலாப்பயணிகள் இவற்றைக் காணவிரும்புகின்றனர். இதில் மண்டபத்திலிருந்து 8 கி.மீ தூரத்திலுள்ள 'குருசடை பவளப்பாறைத்' தீவை சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கும் வகையில் 27 லட்சம் ரூபாய் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த 'குருசடைதீவு' 150 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இத்தீவைப் பார்ப்பதற்கு வசதியாக நான்கு நவீனபடகுகள் வாங்கப்பட்டுள்ளது. இந்தப்படகின் கீழ்பகுதி முழுவதும் கண்ணாடிப் பேரிழைகளால் ஆனது. இதன் மூலம் படகில்

சவாரி செய்தபடியே கடல்வாழ் உயிரினங்களை கண்டுகளிக்கலாம். மேலும் இங்குள்ள பவளப்பாறைகளை கடலில் மூழ்கிக் காண்பதற்கும் பாதுகாப்பு கவசங்கள் வழங்கப்படும். இவ்வாறு சுற்றுலா மையங்கள் பயணிகளை கவரும் விதமாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

வெளிநாட்டுப் பயணிகளும் உள்நாட்டுப் பயணிகளும் அதிக எண்ணிக்கையில் வரும் கன்னியாகுமரியில், சுற்றுலா வசதிகளை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. 'உலக சுற்றுலா ஸ்தலமாக' அறிவிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரியில் மத்திய அரசு அறிவித்தபடி 'இந்திய வருகை ஆண்டு' கடைப்பிடிக்கப்படுகிறது. இதன்படி 'உல்லாச படகு சேவை' துவக்கப்படுகிறது. கன்னியாகுமரி, பூம்புகார் படகுத்துறையில் இருந்து புறப்பட்டு சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகம், விவேகானந்தர் பாறை, திருவள்ளுவர் சிலை, முக்கடல் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் ஆகிய இடங்களுக்குச் சென்று திரும்பும் இந்த 3 கி.மீ தூரம் நிமிடத்தில் முடிவடையும். இதன் மூலம் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இது தவிர தமிழக சுற்றுலாத்துறையும் தெற்கு ரயில்வேயும் சேர்ந்து ஒரு புதிய சுற்றுலாத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி கொடைக்காணலை சுற்றிப் பார்க்கும் வகையில் ரயில்நிலையம் அருகே ஒரு பேருந்தும், ஊட்டியைக் காணவரும் பயணிகளுக்கு மேட்டுப்பாளையம் ரயில் நிலையம் அருகே ஒரு பேருந்தும், அருகே ஒரு பேருந்தும், ஏற்காடு மலையைக் காணவரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சேலம் ரயில் நிலையத்தில் ஒரு சுற்றுலா பேருந்தும் நிறுத்தப்படும். இந்த ரயில் நிலையங்களுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இந்த பஸ்கள் மூலம் அந்தந்த இடங்களை இரண்டு நாட்களுக்கு சுற்றிப்பார்க்க முடியும்.

# பாடம் 9

# சுற்றுலா தங்குமிடங்கள்

**தங்கும் இடங்கள்**
**(Accommodation)**

சுற்றுலாவின் இரண்டாவது அடிப்படைக்கூறு தங்கும் இடம் ஆகும். சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியான தங்கும் வசதி செய்து கொடுப்பதின் அடிப்படையில் தான் சுற்றுலாவின் வளர்ச்சியே அமைந்துள்ளது. உணவு உடை, ஓய்வெடுக்க தக்க வசதிகள் நிறைந்த தங்கும் விடுதிகளும் உணவகங்களும் இருத்தால் சுற்றுலா சுகமாக இருக்கும். தங்குமிடங்களில்தான் சுற்றுலாப்பயணிகள் பயணத்தை முடித்துக் கொண்டு ஒரு விருந்தாளியாக மாறிவிடுகிறார்கள். விருந்தாளிகளின் திருப்தியில் தான் சுற்றுலாவின் வளர்ச்சியே அமைந்துள்ளது.

இரவில் நன்றாக உறங்குவது மிகவும் அவசியமாகிறது. உலகின் பல பாகங்களிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு தேவையான சொகுசான தங்குமிடங்கள் அல்லது விடுதிகள் சுற்றுலாமையத்தில் இருக்க வேண்டும். பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க விடுதிகளின் எண்ணிக்கைகளையும் வசதிகளையும் விரிவு படுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

**தங்குமிடத்தை இருவகைப்படுத்தலாம்.**

1. விடுதிகள் (Hotels)
2. கூடுதல் தங்குமிடங்கள்

சுற்றுலா வளர்ச்சிக்கு தங்கும் இடங்கள் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. சுற்றுலா வளர்ச்சியின் முதுகெலும்பு இருப்பிட வசதியேயாகும்.

1. விடுதிகளின்

- ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிற்குப் பயணம் செய்யும் சுற்றுலாப் பயணி தனது இருப்பிடத்திற்கு உடனடியாகத் திரும்ப முடியாது.
- பண்டைக்காலங்களில் பயணிகளும் வழிப்போக்கர்களும் தங்குவதற்கு சத்திரங்கள் அமைக்கப்பட்டிருந்தன.
- உணவும் தங்குமிடமும் இலவசமாகப் பயணம் செய்பவர்கள் பெற்றனர். ரோமானிய நாட்டில் இதனைப்போன்ற சத்திரங்கள் பல இருந்தன.

- இந்தியாவிலும் பண்டைய காலம் தொட்டே பயணிகளும், வழிப்போக்கர்களும் தங்குவதற்கென்று தர்மசத்திரங்கள், விகாரைகள், சாராய்கள், தர்மசாலைகள் போன்றவைகள் இருந்ததாக அறிகிறோம்.

**தங்கும் விடுதிகளின் வகைகள் (Types of Hotel Accommodation)**

**நட்சத்திர விடுதிகள் (Star Hotels)**

- நவீன உலகின் மேல் நாட்டுப் பாணியில் உருவான ஆடம்பரமிக்க ஆரவாரமான விடுதிகள் நட்சத்திர விடுதிகள் இவை பன்னாட்டு விடுதிகள் (International Hotels) என்றும் அழைக்கப்படுகிறது.

- நட்சத்திர விடுதிகள் நாட்டின் தலைநகரங்களிலும் புகழ்பெற்ற சுற்றுலா மையங்களிலும் கட்டப்பட்டுள்ளன இவைகளில் பல ரகங்கள் உள்ளன.

- ஒன்று முதல் ஐந்து நட்சத்திரம் வரை வசதிக்கு ஏற்ற வகையில் இவற்றின் தரத்துடன் உள்ளது. இவைகளில் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களே அனைத்து வசதிகளையும் கொண்டவையாகும்.

- இந்த நட்சத்திர விடுதிகள் அயல்நாட்டுப் பயணிகளைக் கவர்ந்திழுக்கவும் நம் நாட்டிற்கு வருவாயைத் தேடியும் தருகின்றன. எனவே நட்சத்திர விடுதிகள் சுற்றுலா வளர்ச்சியின் உயிர் மூச்சாக திகழ்கிறது.

**ஐந்து நட்சத்திர ஆடம்பர விடுதிகளில் இருக்க வேண்டிய வசதிகள்**

1. **முகப்புத் தோற்றம்**

- பார்க்க கவர்ச்சியாகவும் கட்டிட அமைப்பு பிரமாண்டமாகவும் வசதிமிக்கதாகவும் இருக்கவேண்டும்.

- பெரிய அறைகள், தனி அறைகள் ஆகியவை குளிரூட்டபட்ட வசதி நிரம்பியதாக இருத்தல் வேண்டும்.
- இருவர் தங்கும் அறை 60 சதுர மீட்டரும், ஒருவர் தங்கும் அறை 55 சதுரமீட்டரும் இருக்கவேண்டும்.

- ஜன்னல் மற்றும் கதவு திரைச் சீலைகள் உயர்ந்த ரகத் துணிகளாக இருத்தல் வேண்டும். விடுதிகளில் குறைந்தது 25 படுக்கையறைகள் இருக்கவேண்டும்.

- தானியங்கி வசதி கொண்ட குளியல் அறை, அவற்றில் இருபத்தி நான்கு மணிநேரமும் தண்ணீரும், வெந்நீரும் வரவேண்டும்.

2. **விடுதியின் வெளிபுறச்சூழல்**

- கார்கள் ஸ்கூட்டர்கள் நிறுத்த தனியிடம் அமைக்கப்பட்டு இருக்க வேண்டும். ஹோட்டல் குறைந்தது இரண்டு மாடிக்கட்டிடமாக இருக்கவேண்டும்.
- நாள் முழுக்க இயங்கும் லிப்ட் (lift) வசதி இருக்க வேண்டும். இது தவிர நல்ல வடிவமைப்புக் கொண்ட நீச்சல் குளம் இருக்க வேண்டும்.

### 3. விடுதி அறைகள்

- அறைகளை சிறந்த கலைஞர்களைக் கொண்டு அழகுபடுத்தப்பட்டிருக்க வேண்டும். அறைகளில் போன், வானொலி, தொலைக்காட்சி வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.
- 24மணி நேரமும் வேலையாட்களின் சேவை கிடைக்க வேண்டும். பல மொழிகள் பேசத்தெரிந்த பெண் வரவேற்பாளர் வரவேற்பறையில் அமர்ந்திருக்க வேண்டும்.

### 4. பிற அம்சங்கள்

ஹோட்டல் வளாகத்தில் வங்கி, உணவகம், மது அருந்தகம் பெரிய அரங்குகள், பூங்கா, புத்தகக்கடை, மருந்துக்கடை, அழகு நிலையங்கள், உடற்பயிற்சி நிலையம், சலூன், செய்தித்தொடர்பு அலுவலகம், வெளிநாட்டுப் பணம் மாற்றுமிடம், நடன வசதியுடன் கூடிய உணவகம், பயிற்சியும் அனுபவமும் மிக்க கல்வியற்ற பணியாளர் போன்ற வசதிகள் இருத்தல் வேண்டும்.

**இந்தியாவில் நட்சத்திர விடுதிகள் (Star Hotels in India) :**

- இந்திய அரசின் சுற்றுலாத்துறையினரால் நியமிக்கப்பட்டுள்ள நட்சத்திர ஆய்வுக்குழு (Star classification committee) ஒவ்வொரு மாநிலத்திலும் செயல்பட்டுவருகிறது.
- நட்சத்திரத் தகுதி பெற விரும்பும் ஹோட்டல்கள் இந்த ஆய்வுக்குழுவிடம் விண்ணப்பிக்க வேண்டும். இந்த குழு அந்த ஹோட்டல்களைப் ஆய்வு செய்து வசதி அடிப்படையில் ஒன்று முதல் ஐந்து நட்சத்திர விடுதி என்ற தகுதியை வழங்கும்.

**இந்தியாவின் முன்னணி நட்சத்திர விடுதிகள்:**

- அசோக்குரூப், (Ashok group) ஒபிராய் குரூப்,(Operoi group) தாஜ்குரூப்,(Taj group), வெல்கம் குரூப்,(Welcome group) கிளார்க்ஸ் குரூப்,(Clarks group) டிரவட்டல் குரூப், (Travotel group) ஆகியவை முன்ன ணி இடம் வகிக்கின்றன.
- அசோக் குரூப் ஹோட்டல்கள் இந்தியா சுற்றுலாத் துறை வளர்ச்சிக் கழகத்தால் (ITDC) நடத்தப்பட்டு வருகிறது.

- இந்தியா முழுவதும் முக்கியமான நகர்களில் ஹோட்டல்கள் கட்டியுள்ளது. உலகில் 35 இடங்களில் சுமார் 40 ஹோட்டல்களை கட்டியுள்ளது. அவைகளில் மொத்தம் 4,500 அறைகள் உள்ளன.

- ஒபிராய் குரூப் ஹோட்டல்கள் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ளது. உலகின் மிகச் சிறந்த 300 விடுதிகளில் இந்த ஒபிராய் ஓட்டலும் ஒன்று.

- இந்த ஹோட்டல் M.S. ஒபிராய் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 9 ஒன்பது நாடுகளில் 30 ஹோட்டல்கள் செயல்பட்டு வருகின்றன. முக்கியமாக நேபாளம், இலங்கை, ஆஸ்திரேலியா, சவுதி அரேபியா, எகிப்து, ஈராக், இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் ஒபிராய் நட்சத்திர விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

- இந்திய ஹோட்டல் கம்பெனி என்ற நிறுவனத்தால் 1903-ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது தான் தாஜ் குரூப் ஹோட்டல்கள். முதல் ஹோட்டல் தாஜ்மஹால் ஹோட்டல் ஆகும்.

- இந்தியாவில் 17 ஹோட்டல்களும், வடக்கு ஏமன், லண்டன், நியுயார்க், கொழும்பு, மாலத்தீவு உட்பட பல வெளிநாடுகளில் 11 ஹோட்டல்களும் செயல்பட்டு வருகின்றன.

- இந்தியாவில் மிக வேகமாக வளர்ந்து வரும் ஹோட்டல் வெல்கம் குரூப் ஹோட்டல்கள் ஆகும்.

- இந்தியாவில் சென்னையில் சோழா ஹோட்டலும், டில்லியில் மவுரியா ஹோட்டலும், ஆக்ராவில் முகல்ஸ் ஹோட்டலும், வெல்கம் குரூப் ஹோட்டல்கள் ஆகும்.

- இவை தவிர கிளார்க்ஸ் குரூப் ஹோட்டல்கள் வாரனாசி, ஆக்ரா, ஜெய்ப்பூர், லக்னோ ஆகிய இடங்களில் நடத்தி வருகிறது.

- டிரவட்டல் குரூப் ஹோட்டல்கள் கோரக்பூர், போர்ட்பிளேர் ஆகிய இடங்களில் உள்ளது.

- ஒவ்வொரு வருடமும் இந்திய சுற்றுலா அமைச்சகம் சிறப்பாக செயல்படும் நட்சத்திர விடுதிகளுக்கு விருதுகள் வழங்கி கவுரவிக்கின்றது.

- விடுதிகளின் செயல்பாடுகள், சேவை, மற்றும் வசதிகள் ஆகியவற்றை மதிப்பிட்டு விருதுகள் வழங்கப்படுகிறது.

- தேசியப் பாரம்பரிய அம்சங்களைக் கொண்ட அரண்மனைகள், மாளிகைகள், கோட்டைகள் போன்றவைகள் விடுதிகளாக மாற்றப்பட்டு அந்தஸ்துகள் வழங்கப்படுகின்றன.

- இந்தியாவில் இவ்வகையிலான விடுதிகள் 1950-ம் ஆண்டுக்கு முன்பு கட்டப்பட்டவைகளாக இருக்க வேண்டும். இவ்வகைக் கட்டிடங்கள் பாரம்பரிய அமைப்புகளைக் கொண்டும் முற்கால வாழ்க்கை முறைகளை வெளிப்படுத்தும் கலை அம்சங்கள் கொண்டவையாக இருக்க வேண்டும்.

- இவை நமது பாரம்பரியத்தின் மைல்கற்களாக விளங்குகின்றன. இந்த வகையான விடுதிகள் தற்போது சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவர்ந்து வருகின்றன.

- இந்தியாவைப் பொருத்தவரையில் மொத்தம் 64 பாராம்பரிய தன்மை கொண்ட விடுதிகள் உள்ளன. அவைகளில் மொத்தம் 1655 அறைகள் காணப்படுகின்றன.

**பொழுதுபோக்கு விடுதிகள் (Resort Hotels) :**

- பொதுவாக சுற்றுலாப் பயணிகள் பொழுதுபோக்கும் இடங்களில் அமைந்திருக்கின்றன. விடுமுறையைக் கழிக்க விரும்புவோர் உடல் நலம் பேணுவதற்கு ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்பவர்கள், சுற்றுலாப் பயணிகள் ஆகியோர் இந்த பொழுதுபோக்கு விடுதிகளை நாடுகின்றனர்.

- பொதுவாக இயற்கையெழில் கொஞ்சும் ஏரி, கடல், மலை, காடு, பூங்கா ஆகிய இடங்களிலேயே இவ்விடுதிகள் அமைக்கப்படுகின்றன.

**இந்த பொழுதுபோக்கு விடுதிகள் பல வகையாகப் பிரிக்கப்படுகின்றன**

1. கோடைகால விடுதிகள்
2. மலைவாழ் விடுதிகள்
3. கடற்கரை வாழ் விடுதிகள்

- இவைகள் அந்தந்த பருவ காலங்களில் (season) அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது.

- சாதாரண காலங்களில் குறைந்த வாடகைக்கு விடுவது, கேளிக்கைகளுக்கு மிகக் குறைந்த கட்டணம் வசூலிப்பது, கண்காட்சி நடத்துவது ஆகியவற்றின் மூலம் இவ்விடுதிகளின் வருமானம் ஓரளவு நிறைவுப்படுத்தப்படுகிறது.

- இந்தியாவில் ஸ்ரீநகர், டார்ஜிலிங், ஊட்டி, சிம்லா, கோவளம் ஆகிய இடங்களில் இத்தகைய விடுதிகள் உள்ளன.

**வணிக விடுதிகள் (Commercial Hotls)**

- வணிகர்களின் வசதிக்காக அமைக்கப்படும் விடுதிகளுக்கு வணிக விடுதிகள் என்று பெயர். பெரும்பாலும் தங்கள் வியாபார னோக்கத்துடன் வரும் வணிகர்களே தங்குவர்கள்.

- தனிப்பயணியரை கவரும் விதத்திலேயே இந்த வணிக விடுதிகள்அமைக்கப்பட்டு செயல்படுகிறது. இவ்விடுதிகள் பெரும்பாலும் வாணிக, தொழிற்துறை நகரங்களிலேயே அமைக்கப்படுகின்றன.

- இந்த விடுதிகளில் உணவகமும், கார் நிறுத்துவதற்கான வசதியும் அமைந்திருக்கும். உணவகப்பணியாளர் வாடிக்கையாளர்களை நன்கு உபசரித்து அனைத்து வசதிகளையும் செய்து தருவர். நம்பிக்கை, நாணயம், பணிவிடை ஆகியவையே இத்தகைய உணவகங்களின் சிறப்பம்சமாகும்.

**தங்கல் விடுதிகள் (Residential Hotels)**

- தங்கல் விடுதிகளை அடுக்கறை விடுதிகள்' (Apartments) என்று அழைக்கலாம். இதில் அடுக்கடுக்காக அறைகள் இருக்கும். தங்குமிடம் மட்டுமே இங்கே அளிக்கப்படும். உணவு வசதி இல்லாது இருக்கும்.

- இங்கே அறைகள் மாத வாடகை மற்றும் வருட வாடகைக்கும் கிடைக்கும். இங்கே வாடகை குறைவாகவே வசூலிக்கப்படுகிறது.

- இந்த தங்கல் விடுதிகள் ஐரோப்பிய பாணியில் அமைக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவில் இந்த வகை ஹோட்டல்கள் அதிகம் தோன்றியுள்ளன.

- ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் இவ்வகை விடுதிகளுக்கு Pensions என்று பெயர்.

**மிதக்கும் விடுதிகள் (Floating Hotels):**

- தண்ணீருக்கு நடுவில் கட்டப்படும் விடுதிகள் மிதக்கும் விடுதிகள் என்று அழைக்கப்படுகிறது. ஏரி, குளம், ஆறு, கடல் ஆகியவற்றின் நடுவில் இவை கட்டப்பட்டுள்ளன.

- இந்த மிதக்கும் விடுதிகள் வெளிநாடுகளில் பயணிகளால் மிகவும் விரும்பப்படுகிறது. சில நாடுகளில் பழுதுபட்ட கப்பல்களை விடுதிகளாக மாற்றியுள்ளனர்.

- இவ்வகை விடுதிகளில் தங்குவது பயணிகளுக்கு புதுமையான முற்றிலும் வித்தியாசமான அனுபவமாக இருக்கும். மேல் நாட்டு சுற்றுலா பயணிகள் இவ்வகை விடுதிகளை மிகவும் விரும்புகின்றனர்.

- காஷ்மீரில் இவ்வகை விடுதிகள்அதிகம் காண்ப்படுகின்றன இவற்றை படகு வீடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

**துணைத் தங்குமிடங்கள் (SUPPLEMENTARY ACCOMMODATION)**

- துணைத்தங்குமிடங்களும் சுற்றுலாவின் ஒரு உறுப்பாகவே கருதப்படுகிறது. இவைகளும், விடுதிகளைப் போன்ற ஒரு அமைப்புதான்.
- இதில் சுற்றுலாப் பயணிகளுக்கு பண ஆதாயம் அதிகமாக இருப்பதாலும் வாடகை குறைவாக இருப்பதாலும் இதனைப் போன்ற அமைப்புகள் அயல்நாடுகளில் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன.
- வசதிகளைப் பொறுத்தவரை விடுதிகளைவிடச் சற்று குறைவாகத்தான் இருக்கும். ஆனால் கட்டுப்பாடுகள் குறைவு, சுதந்திரம் அதிகம்.
- விளையாட்டுகள், கேளிக்கைகள், பொழுதுபோக்குகள், அதிக அளவில் பயணிகளுக்கு இவை வழங்குகின்றன. இதில் தங்குவோர்களிடம் நல்ல பழக்கத்தையும், அறிமுகத்தையும், தோழமை உணர்வையும், நெருக்கத்தையும் ஏற்படுத்துகின்றன.

**துணைத் தங்கும் இடங்களை கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.**

1. யாத்ரி நிவாஸ் (Yatri Nivas)
2. தர்மசாலைகள் (Dharmasalas)

- யாத்திரிகர்கள் அதிகமாகச் செல்லும் சமய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் யாத்ரிநிவாஸ் அமைக்கப்பட்டுள்ளது. நமது நாட்டில் அனேக புனித ஸ்தலங்களில் இந்த வகை விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.
- மிகவும் வசதி படைத்த முதலாளிகள் இரக்க சிந்தனையுடையவர்கள் ஆகியோர் வழங்கும் தர்மத்தை அடிப்படையாகக் கொண்டே இவ்வகை தர்மசாலைகள் அமைக்கப்படுகின்றன.

**மோட்டல்கள் (Motels) (சாலை ஓர உணவகங்கள்)**

- உலகளவில் இந்த வகை மோட்டல்கள் புகழ் பெற்று வருகிறது. நெடுந்தூர சாலைவழிப் பயணம் மேற்கொள்பவர்களுக்கு இந்த மோட்டல்கள் ஒரு பெரும் வரப்பிரசாதம் அமைந்துள்ளது.
- நெடுந்தூரப் பயணம் செய்வோர் பயணத்தின் நடுவே சற்று ஓய்வு எடுக்கவும், உண்ணவும் இந்த மோட்டல்கள் பயன்படுகின்றன.

- மிகப்பெரிய மோட்டல்களில் கார் பழுதுபார்த்தல், உதிரிபாகங்கள் விற்பனை ஆகிய வசதிகளும் உண்டு எண்ணெய் போடும் இடங்க்களுடன் அமைக்கப்பட்டுள்ளன.

- பொதுவாக இரவு நேரங்களிலேயே இந்த மோட்டல்களில் கூட்டம் அதிகமாக இருக்கும். இங்கே சிற்றுண்டி சாலைகளும் மற்ற தேவைகளுக்கேற்ப பொருட்களும் உண்டு. சென்னை - திருச்சி நெடுஞ்சாலையில் பல மோட்டல்களை நாம் காணலாம்.

**இளைஞர் விடுதிகள் (Youth Hostels)**

- தனியாக சுற்றுலா செல்பவர்களுக்கும், முழுச் சுற்றுலா செல்பவர்களுக்கும் இளைஞர் விடுதிகள் மிகச்சிறந்த ஒன்றாகும். இத்தகைய விடுதிகள் அதிகமாக படித்த இளைஞர்களுக்காகவே கட்டப்பட்டுள்ளன.

- புத்தறிவை நாடிச் செல்லும் இளைஞர்களுக்கு சிறந்த இடமாக இருக்கின்றது.

- 1900-ல் முதன் முதலாக ஜெர்மனியில்தான் இளைஞர் விடுதிகள் ஒரு அமைப்பாகவும், ஒரு இயக்கமாகவும் மலர்ந்தன. பின்புதான் உலகின் பல பகுதிகளுக்கும் இவை பரவின.

- இந்தியாவிலுள்ள இளைஞர் விடுதிகளில் ஐந்து ரூபாய் முதல் இருபது ரூபாய் வரைதான் வாடகை வசூலிக்கப்படுகிறது. சுற்றுலா செல்லும் மாணவ மாணவியர், ஆசிரியர் ஆகியோர்களுக்கு தனித்தனியாக தங்க இடவசதிகள் உண்டு.

- உலக அளவில் 3.5 மில்லியன் இளைஞர் விடுதி அங்கத்தினர்கள் உள்ளனர். அவர்களில் இந்தியாவில் மட்டும் 23,700 பேர் உள்ளனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

- இளைஞர்களிடையே சுற்றுலா எண்ணத்தை வளர்ப்பதில் இந்த இளைஞர் விடுதிகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

- இளைஞர் விடுதியானது 1997-ம் ஆண்டு புள்ளிவிவரப்படி இந்த கூட்டமைப்பில் 74 உறுப்பினர் நாடுகள் உள்ளன. உலகம் முழுவதும் 5,600 இளைஞர் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளது.

- இந்தியாவில் இந்திய இளைஞர் விடுதிகள் சங்கம்' (Youth Hostels associations of India) செயல்பட்டு வருகிறது. 1997-ம் ஆண்டு புள்ளிவிவரப்படி இந்தியாவில் 49 இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

- டில்லியில் ஒரு பன்னாட்டு இளைஞர் விடுதி உள்ளது. இந்த இளைஞர் விடுதி அமைப்புகள் விடுதிகள் அமைத்ததுடன் மட்டும் நின்று விடவில்லை.

- இளைஞர்களுக்கு மலையேற்றப்பயிற்சி, கடற்கரை நடைபயணம், முகாம் அமைத்தல், பாறை ஏற்றம், எய்ட்ஸ் விழிப்புணர்வு, கல்வி சுற்றுலா, மற்றும்பல விதமான போட்டிகள் நடத்தி வருகின்றன.

- இவ்வாறு இளைஞர் விடுதிகள் சுற்றுலாவின் முக்கிய அங்கமாக செயல்பட்டு வருகின்றன.

**சுற்றுலா விடுமுறைக் கிராமங்கள் (Tourist Villages)**

- சுற்றுலாவை வளர்ப்பதற்கு கையாளப்படும் புதுமையான செயல் திட்டமே சுற்றுலாக்கிராமங்கள் ஆகும்.

- பெரும்பாலும் கடற்கரைகளிலும் சுற்றுலா முக்கியத்துவம் பெற்றுள்ள இடங்களிலும் அமைந்துள்ளன.

- இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இவ்வகையிலான கிராமங்கள் ஐரோப்பிய நாடுகளில் முக்கியத்துவம் பெற்றன.

- முதலில் பொழுதுபோக்கு நிறுவனங்கள், சமூக சேவை நிறுவனங்கள், சுற்றுலா நிறுவனங்கள் ஆகியவையே இவற்றை நிறுவின.

- இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகளில் நலிந்த பகுதிகளில் இவை அமைக்கப்பட்டு பொருளாதரம் சீர்திருத்தப்பட்டது.

- இங்கே தங்க இடமும் உணவும் அளிக்கப்படுவதுடன் பொழுது போக்கிற்காக விளையாட்டு அரங்குகளும், கேளிக்கை வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.

- கால்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், மேசை டென்னிஸ், குதிரை சவாரி, யோகாசனம் போன்ற பொழுதுபோக்கு அம்சங்களும் உண்டு. தொலைபேசி, வானொலி, செய்தித்தாள், தொலைக்காட்சி போன்றவை கொடுக்கப்பட்டிருக்கும். தாங்களே தங்கள் குடும்பத்திற்கு சமைத்துப் பரிமாரிக்கொள்ளும் வசதியும் உண்டு.

- முதலாவது சுற்றுலாக் கிராமம் 1950-ல் ஸ்பானியத் தீவில் உள்ள மெஜோர்க்கா என்ற இடத்தில் நிறுவப்பட்டது. இதனை நிறுவியது 'மத்திய தரைக்கடல் கழகம்' என்ற நிறுவனம் ஆகும்.

# பாடம் 10

# அரசு மற்றும் தனியார் சுற்றுலா முகாமைகள்

சுற்றுலா வளர்ச்சியில் பயணப்பணி முகாமைகள் (Travel Agency) பெரும்பங்கு கொண்டுள்ளது. தனியார் நிறுவனங்களான இவை சுற்றுலாத்துறையை வணிகமயமாக்குவதுடன் சுற்றுலாத் துறையையும் வளர்க்கின்றன. இந்த நிறுவனங்கள் புதிய சுற்றுலா மையங்களை உருவாக்கி சுற்றுலாப்பயணிகளைக் கவர்திழுக்கின்றன. சுற்றுலா மையங்களின் மேன்மையை பயணிகளுக்கு எடுத்துக் கூறி சுற்றுலாவில் அவர்களை ஈடுபடுத்தி சுற்றுலா செம்மையாக நடைபெறப் பெருந்துணை புரியும் நிறுவனமே பயணப்பணி நிறுவனமாகும். இதுபோன்ற நிறுவனங்களில் பணிபுரியும் பயணமுகவர்கள் சுற்றுலாவிற்கு அரும்பணி புரிகின்றனர். பயண முகவர்கள் சுற்றுலாவில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.

**பயண பணி நிறுவனம்**

**(Travel Agency)**

1. **தாமஸ்குக் பயண பணி நிறுவனம்: (Thomas Cook & Son)**

- முதலாவது பயணப்பணி நிறுவனம் ஆரம்பித்த பெருமை இங்கிலாந்தைச் சேர்ந்த தாமஸ்குக் என்பவரையே சாரும். இவரே முதல் பயண முகவருமாகக் கருதப்படுகிறார்.

- இவர் 1841-ஜூன் மாதம் 9-ம் தேதி லீசெஸ்டர் என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிற்கு பதினைந்து நாட்கள் நடந்தே சென்றார். அபோது அவருக்கு ஒரு ரயிலை வாடகைக்கு அமர்த்தி நண்பர்களையும் கூட்டி வந்திருக்கலாமே என்ற எண்ணம் ஏற்பட்டது.

- இந்த எண்ணத்தைச் செயல்படுத்தும் முயற்சியில் புகைவண்டி அதிகாரிகளி அனுமதி பெற்று சுற்றுலாப் பயணிகளுக்குக் கட்டணச் சலுகை பெற்றார்.

- முதன்முதலாக சில பயணிகளை இங்கிலாந்திலுள்ள லீசெஸ்டரிலிருந்து லாப்போர்க்குக்கு ரயில் மூலம் அழைத்துச் சென்றார்.
- பின்னர் 570 பயணிகள் கொண்ட குழுவை மிட்லேண்ட் நாடுகள் ரயில்வே கம்பனியில்' (Midland countries Railway) சலுகைக் கட்டணம் பெற்று சுற்றுலாப் பயணம் அழைத்துச் சென்றார். இதுவே முதல் சுற்றுலாக்குழுவிற்கு மொத்தமாக ரயில் டிக்கட் வாங்கி பயணம் செய்த நிகழ்சியாகும்.

- 1843-ல் மூவாயிரம் பள்ளிக் குழந்தைகளை லீசெஸ்டரிலிருந்து டெர்பிக்கு உல்லாசப் பயணம் அழைத்துச் சென்றார். இது மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

- இந்த பயண அனுபவத்தை லிவர்பூல் பயணக் கையேடு' என்ற நூலில் வெளியிட்டார்.

- லண்டன் மக்கள் 1851 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகப் பொருட்காட்சியைக் கண்டுகளிக்க, 1,65,000 பயணிகளை அழைத்துச் சென்றார்.

- இதுவே தங்கும் வசதி, பயணம் செய்யும் வாகனங்கள் போன்ற முன்னேற்பாடுகளுடன் பாரிசுக்குப் பயணிகளை அழைத்துச் சென்ற நிகழ்ச்சிதான் உண்மையான திட்டமிட்ட சுற்றுலா என்று அங்கீகரிக்கப்படுகிறது.

- பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக சுற்றுலாவில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. இந்த தாமஸ்குக் நிறுவனம் சுற்றுலா ஒரு வணிகச் சந்தையாக மாறியது.

- இளவரசர்களாலும் பணக்காரர்களாலும் தான் சுற்றுலா செல்ல முடியும் என்ற நிலைமாறி நடுத்தரமக்களும் சுற்றுலா செல்லலாம் என்ற நிலை ஏற்பட்டது. இந்நிறுவனம் குறைந்த கட்டணமே வசூலித்தது.

## 2. அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் நிறுவனம்

**(American Express Company - AMEXO)**

- அமெரிக்காவில் 1841 தேன்றிய இரண்டாவது பெரிய பயண நிறுவனம் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் நிறுவனம் ஆகும். ஹென்றி வால்ஸ் (Henry walls) என்பவர் இக்கம்பனியை ஆரம்பித்தார்.

- ஆரம்பத்தில் கப்பல் மூலமும் பிறகு விமானத்தின் மூலமும் பயணிகளை அழைத்துச் சென்றார். முதலில் இந்த நிறுவனம் வால்ஸ் பர்கோ' (walls Fargo) என்றும் பின்னர் அமெக்சோ ' (AMEXO) என்றும் அழைக்கப்பட்டது.

- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பனி கம்ப்யூட்டர் மூலம் முன்பதிவு செய்யும் முறையினை 1969-ம் ஆண்டு அறிமுகப்படுத்தியது

- இப்படி சுற்றுலாத் துறையானது ஓங்கி வளர்ந்து தனித் தொழிலாக வளர்ச்சியடைய உறுதுணைபுரிவது பயணப்பணி நிறுவனங்களேயாகும். சுற்றுலாப் பயணிகள் நாடு விட்டு நாடு, கண்டம் விட்டு கண்டம் பயணம் செய்வது மிகவும் எளிதாகப் போய்விட்டது.

## இந்தியாவில் சுற்றுலா முகவர்கள் (Travel agents in India)

- சுதந்திரம் அடைந்த பின்னர் இந்தியாவுக்கு அதிகமான சுற்றுலா பயணிகள் வருகை புரிந்தனர். எனவே சுற்றுலாவை மேம்படுத்த இந்திய அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டது

- ஆறு பேர் கொண்ட பயணமுகவர்கள் ஒன்று சேர்ந்து ஜே. காட்கரா என்பவரின் தலைமையில் 1949ஆம் ஆண்டு “இந்தியா பயண முகவர்கள் சங்கம்” (Travel Agent Association of India-TAAI) ஒன்று அமைக்கப்பட்டது.

- சுமார் 300 உறுப்பினர்கள் கொண்ட பயண முகவர்களின் சங்கம் சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி ஆகிய நகரங்களில் செயல்பட்டு வருகிறது.

- 2001-ம் ஆண்டு கணக்கின்படி இந்தியாவில் 388 சுற்றுலா நடத்துனர்களும், (Tour Oporators) 290 பயண முகவர்களும், (Travel Agents) 258 போக்குவரத்து அமைப்பாளர்களும் (Transport Oporators) அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

## பயணமுகவர்களுக்கான நிபந்தனைகள்

- பயண முகவர்கள் 1 ஆண்டு முன் அனுபவம் உடையவர்களாக இருக்கவேண்டும்.

- அங்கீகரிக்கப்பட்ட பயண முகவர்கள் அவ்வப்போது அரசு வெளியிடும் ஆணைகளையும் சட்டங்களையும் மதித்து நடக்க வேண்டும்.

- பயண முகவர்களுக்குத் தனி அலுவலகங்களும், நேரடி பணியாளர்களும் இருக்கவேண்டும்.

- இந்த முழுநேர ஊழியர் நாணயம் மாற்று, நடப்பு செய்திகள் முன்பதிவு செய்தல் போன்ற விபரங்களை அறிந்திருக்க வேண்டும்.

- பயணமுகவர் ஆங்கிலம், இந்தி, ஜெர்மன், பிரெஞ்சு மற்றும் வட்டார மொழிகளை அறிந்திருக்க வேண்டும்.

- பயண முகவர்களுக்கு நாடு முழுவதற்கும் அல்லது ஒரு குறிப்பிட்ட மாநிலத்திற்கு மட்டுமே அங்கீகாரம் வழங்கப்படும்.

- இத்தகைய அங்கீகாரம் பெற்ற பயண முகவர்கள் அரசாங்கத்தால் அங்கீகாரம் பெற்ற சுற்றுலா வழிகாட்டிகளையே பணியில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

- அங்கீகாரம் பெற்ற பயண முகவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆண்டறிக்கை ஒன்றை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அதில் அந்த ஆண்டு சென்ற இடங்கள், அழைத்துச் செல்லப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை, அதற்காக வசூலிக்கப்பட்ட தொகை முதலியன இடம் பெற்றிருக்க வேண்டும்.

- பயணமுகவர்கள் ரிசர்வ் வங்கியின் உரிமமும், பன்னாட்டு விமானப் போக்குவரத்து கழகத்தின் (IATA) அங்கீகாரமும் பெற்றிருக்க வேண்டும் மேலும் வணிகர் சட்டத்தின் படி பதிவு செய்திருக்க வேண்டும்.

- அங்கீகாரம் பெற விரும்பும் முகவர்கள் குறைந்த பட்சமாக ஒரு லட்ச ரூபாய் முதலீடு செய்திருக்க வேண்டும்.

- அங்கீகாரம் பெற விரும்பும் முகவர்கள் அங்கீகாரம் பெற இயக்குநர், சுற்றுலாத்துறை அமைச்சகம், புதுடில்லி என்ற முகவரிக்கு விண்ணப்பித்து உரிய வழியில் பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

இந்தியாவில் மட்டுமல்லாது அண்டை நாட்டு அரசாங்கங்கள் சுற்றுலா முகவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டே செயல்பட்டு வருகிறது. வெளிநாடுகளில் சுற்றுலா முகவர்களின் அலுவலகங்கள் திறப்பதற்கும் உதவி செய்கின்றன. உலகம் முழுவதிலும் உள்ள சுற்றுலா முகவர்களின் நலன்களைப் பாதுகாக்க பயண முகவர் கழகங்களின் உலக கூட்டமைப்பு ஒன்றும் அமைக்கப்பட்டு செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

# பாடம் 11

# இந்திய சுற்றுலா மேம்பாட்டுக் கழகம்

**அறிமுகம்**

இந்தியாவில் பயணிகள் தங்குவதற்கு விஹாரங்களும், தர்மச் சத்திரங்களும் இருந்தன. அவ்விடங்களில் பயணம் செய்பவர்கள், அறிஞர்கள், நாடுகளைக் கண்டுபிடிக்கும் வீரர்கள், வணிகர்கள் போன்றோர் தங்கினர். அவர்கள் அளித்த கட்டணத்தில் அவ்விடுதிகள் நடந்தன.

பண்டைக் காலப் புத்தபிக்குகள் பயணிகள் தங்குவதற்கென முதன்முதலில் பாதுகாப்பான இடங்களைக் கட்டினர். இந்தியாவின் பல பகுதிகளில் உள்ள குடவரைக் கோயில்கள், வழிபடும் இடங்களாகவும், புத்த பிக்குகள் தங்கும் இடமாகவும் இருந்தன. புத்தபிக்குகள் அமைதியான இடங்களில் மடங்கள் கட்டி வாழ்ந்தனர். அவர்கள் இறைவழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் தங்களிடம் வந்து தங்கிய பயணிகளுக்குத் தங்க இடமும், உண்ண உணவும் அளித்தனர். அம்மடங்கள் முக்கியமான சாலைகளில் அமைந்திருந்தன. சில வணிகர்கள் அம்மடங்களின் நிர்வாகச் செலவை ஏற்றுக் கொண்டதாகக் கல்வெட்டுக்களால் அறியமுடிகிறது. அம்மடங்கள் வணிகர்கள் தங்கும் விடுதிகளாகப் பயன்பட்டன. வணிகர்களின் பணத்தைப் பாதுகாக்கும் இல்லங்களாகத் திகழ்ந்தன.

சமயத் தொடர்பான புனித இடங்களில் உணவுச் சாலைகளும் இருந்தன. அவ்வுணவுச் சாலைகளில் சமையற்காரர்கள் இருந்தனர். செர்சாசூரி என்னும் ஆப்கானியப் பேரரசர் நெடுஞ்சாலைகளை அமைத்தார். அச்சாலையில் குறிப்பிட்ட இடைவெளிக்குப் பின் உணவுச் சாலைகளை அமைத்து வணிகத்தையும், பயணத்தையும் பாதுகாத்தார். அதேபோல் முகம்மதியர்களும் தங்கள் நாடு முழுவதும் அவ்வகை உணவு விடுதிகளைக் கட்டினர். பிற்காலத்தில் அரசர்களும், நவாபுகளும், பெரும் வணிகர்களும், கொடையாளர்களும் உணவு விடுதிகளைக் கட்டிப் பயணத்தை எளிதாக்கினர். வாணிகம் பெருகிய காரணத்தால் பாதுகாப்பான தங்கும் இடங்களும், உணவு விடுதிகளும் பெருகின. அவ்வுணவுச் சாலைகள் பயணிகளுக்கு உணவும் பாதுகாப்பும் அளித்துடன், அவர்களது குதிரைகளுக்குத் தீவனமும் அளித்தன.

**விடுதிகளின் தோற்றம்**

சத்திரங்கள் பயணிகளின் தேவைக்கேற்பவும், பயணிகளைத் திருப்திபடுத்தும் நோக்குடனும் தற்கால விடுதிகளாக மாறின. அது மக்களின் வாழ்க்கைத் தரம், வாழ்க்கை முறை போன்றவற்றிற்கு ஏற்ப நடைபெற்றன. கி.பி.1744-ல் லண்டனில் டேவிட் லோ என்பவர் முதல் "குடும்ப விடுதியை" லார்டு

ஆச்சரின் முன்னாள் வீடான "கோவன்ட் கார்டனில்" தொடங்கினார். அதன்பின் லண்டன், பிரைட்டன், பாஸ்டன் என்னும் இடங்களில் புதிய விடுதிகள் தோன்றலாயின. கி.பி.1820-ல் சுவிச்சர்லாந்தில் முதல் சுற்றுலா விடுதி கட்டப்பட்டது. புகைவண்டிப் பயணம் பெருகியதற்கு ஏற்பத் தங்கும் விடுதிகளும் பெருகலாயின. நகர்ப்புறங்களில் வேலைவாய்ப்புப் பெருகப் பெருக தங்கும் விடுதிகளும் பெருகின. நகரங்களில் நடைபெற்ற களியாட்டங்களைக் காண செல்லும் மக்களுக்கும் தங்கும் இடங்கள் தேவைப்பட்டன. எனவே பணக்காரர்கள் பலவகை விடுதிகளைக் கட்டினர்.

## விடுதிகளின் வெளிப்பாடு

அமெரிக்க அருந்தகத்திலிருந்து விடுதிகள் தோன்றின. பிரான்சில் பணக்காரர்களும், புகழ்பெற்றவர்களும் தங்கும் இடமாக விடுதிகள் விளங்கின. நகர் மன்றங்களும், அருந்தக சாலைகளும் விடுதிகள் என்று வழங்கப்பட்டன. கி.பி.1800-ல் அருந்தகம், ஓட்டல்கள், விடுதிகள் காபிகவுசஸ் போன்ற சொற்கள் ஒரே பொருளில் பயன்படுத்தப்பட்டன. கி.பி.1820-ல் ஓட்டல் என்றும் சொல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மக்கள் அவ்விடங்களில் உணவும், இரவில் உறையுளும் பெற்றனர். அமெரிக்க விடுதிகள் வணிகர்கள் ஒன்று கூடும் இடங்களாகத் திகழ்ந்தன. அக்காலத்தில் ஓட்டல்களை தரம் பிரிக்கவில்லை . 19-ம் நூற்றாண்டில் விடுதிகள் கூட்டங்களும், மாநாடுகளும் நடத்தும் இடங்களாக விளங்கின. கி.பி.1830-ல் ஹென்றி கிலோ என்பவர் பால்டிமோர் விடுதியின் தலைவராக நியமிக்கப்பட்டார். அவ்விடுதியில் 200 தனி அறைகள் இருந்தன. இன்று அமெரிக்க விடுதிகளின் மொத்த வருமானத்தில் 1/3 பாகம் கூட்டங்கள், மாநாடுகள் போன்றவை நடத்தப்படுவதால் கிடைக்கின்றன.

சுற்றுலாத் துறை வளர்ச்சியில் விடுதிகள் மிகுந்த பங்கு வகிக்கின்றன. விடுதிகள் இல்லாமல் சுற்றுலா மையத்தை மேம்படுத்துவது மிகவும் கடினம். இந்தியாவில் முக்கியமான சுற்றுலா மையங்களின் மத்திய அரசும், மாநில அரசும் மற்றும் தனியார் துறைகளும் விதவிதமான விடுதிகளை அமைத்து சுற்றுலாப் பயணிகளின் இன்பப் பொழுதை இதமாக கழிப்பதற்கு உதவுகின்றது.

இந்தியாவில் சுற்றுலா 1960-ம் ஆண்டுக்குப்பிறகு வேகமாக வளர்ச்சியடைந்தது. எனவே சுற்றுலா மேம்பாட்டுக்கான ஆலோசனை கூறும்படி ஜா என்பவர் தலைமையில் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. இந்த 'ஜாக்' கமிட்டி 1963-ல் தனது பரிந்துரைகளைத் சமர்பித்தது. மத்திய அரசு சுற்றுலாத் துறையில் மிகுதியான கவனம் செலுத்த வேண்டும். இந்திய விடுதிக்கழகம், இந்திய சுற்றுலாத்துறைக் கழகம், இந்திய சுற்றுலாத்துறை போக்குவரத்துக் கழகம் என்ற மூன்று கழகங்களை உருவாக்க வேண்டும் என்று ஜா கமிட்டி பரிந்துரைத்தது. அதன்படி மேற்கண்ட மூன்று கழகங்களை 1965-ல் இந்திய அரசு 1953-ம் வருடக் கம்பெனிச்சட்டத்தின் கீழ் அமைத்தது. சுற்றுலா விடுதிகளைக் கட்டி நிர்வாகிப்பது. சுற்றுலாப் பயணிகளுக்குப் போக்குவரத்துச் சாதனங்களைக் கொடுத்து உதவுவது போன்ற முக்கியப் பணிகளை இந்த மூன்று கழகங்களும் செய்தன.

ஆனால் பின்னர் இந்திய அரசு பொருளாதாரச் சிக்கனம், திறமையாகச் செயல்படல், ஒவ்வொன்றும் ஒருங்கிணைந்து செயல்படல், முறையாகத் திட்டங்கள் தீட்டல் போன்ற காரணங்களுக்காக இந்த மூன்று கழகங்களையும் இணைக்க முடிவு செய்தது. அதன்படி 1966 அக்டோபர் 1-ம் தேதி இந்த மூன்று நிறுவனங்களும் இனணக்கப்பட்டு டெல்லியில் இந்திய சுற்றுலா வளர்ச்சிக்கழகம் என்ற பெயருடன் சுற்றுலாத்துறையின் ஆதரவுடன் செயல்பட ஆரம்பித்தது. நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின்படி, அசோகா ஓட்டல்கள், ஜன்பத் ஓட்டல்கள், லோடி ஓட்டல்கள், ரஞ்சித் ஓட்டல்கள் ஆகியவை இந்தியா சுற்றுலாக் கழகத்துடன் 1970 மார்ச் 28-ல் இணைக்கப்பட்டு செயல்படத் தொடங்கின. இந்தியா சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஒரு அரசு பொதுத்துறை நிறுவனம் ஆகும்.

**இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நோக்கங்கள்**

இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நோக்கங்களையும், பணிகளையும் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தலாம்.

- சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஓட்டல்கள், மோட்டல்கள், சிற்றுண்டியகங்கள், விருந்தினர் மாளிகைகள், பயணியர் மாளிகைகள், கடற்கரை பொழுதுபோக்கு மையங்கள் ஆகியவற்றைப் பல்வேறு இடங்களில் நிறுவிப் பராமரித்தல்.
- சுற்றுலாப் பயணிகளுக்கு வேண்டிய அனைத்துரக போக்குவரத்து வசதிகளை அளித்தல்.
- சுற்றுலாப் பயணிகளின் இன்பப் பொழுது போக்கிற்காக இன்னிசை நிகழ்ச்சிகள், ஒலி ஒளி காட்சிகள், நாட்டிய நாடகங்கள் முதலானவற்றை நடத்துதல்.
- அயல் நாடுகளில் உள்ள பயணிகளைக் கவர்ந்திழுப்பதற்காக நாட்டில் உள்ள பாரம்பரியம் மற்றும் கலாச்சார முக்கியத்துவத்தை விளம்பரம் மூலம் தெரியப்படுத்துதல்.
- சுற்றுலா பயணிகளுக்குத் தேவையான எல்லாப் பொருட்களும் கிடைக்கக்கூடிய பல்பொருள் அங்காடிகளை ஏற்படுத்துதல்.
- இந்தியாவிலும் வெளிநாட்டிலும் சுற்றுலா சம்பந்தப்பட்ட மேலாண்மை சேவை செய்து கொடுத்தல் ஆகியவையாகும்.

**இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பணிகள்**

இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகமானது சிறப்பான பல பணிகளைச் செய்து வருகிறது. விடுதிகள், சிற்றுண்டி சாலைகள் மற்றும் சுற்றுலாவின் பிற துறைகளில் தேவைப்படும் மனித சக்தியை உருவாக்கும் நடவடிக்கைகளைச் செய்து வருகிறது. இதற்காக இந்த கழகம் நாட்டில் 21 விடுதி நிர்வாகம் மற்றும் விருந்துபசரிக்கும் தொழில் நுட்ப நிறுவனங்களையும் 15 சமையல்கலை பயிற்றுவிக்கும் நிறுவனங்களையும் அமைத்துள்ளது. இந்த நிறுவனங்கள் விடுதி நிர்வாகத்திலும், சமையல்கலையிலும் பட்டய வகுப்புகளை நடத்தி வருகின்றன.

இந்த படிப்புகள் ஆறுமாதம் முதல் ஒருவருடம் வரையிலான கால அளவு கொண்டவை. இந்த வகுப்புகள் மூலம் சுற்றுலாத் துறைக்குத் தேவைப்படும் மனித சக்தி கிடைக்கிறது.

மேலும் இந்த கழகம் சாகசசுற்றுலாவை மேம்படுத்தவும் சில நிறுவனங்களை நடத்தி வருகிறது. கோவாவில் தேசிய நீர் விளையாட்டு நிறுவனமும் குல்மார்க்கில் இந்திய மலையேறுதல் மற்றும் வான்பறக்கும் பயிற்சி நிறுவனமும் செயல்பட்டு வருகின்றன. மேலும் இது சம்பந்தமாக ஆலி, பாட்னிடாப், குல்மார்க், குலு ஆகிய இடங்களில் வகுப்புகளையும் நடத்தி வருகிறது. இந்திய சுற்றுலா வளர்ச்சிக்கழகம்.

மேலும் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நாட்டிலுள்ள நட்சத்திர விடுதிகளை தரவாரியாக (ஒன்று முதல் ஐந்து நட்சத்திரம்) வகைப்படுத்துகிறது. ஒவ்வொரு மூன்று வருடத்திற்கு ஒரு முறை இவ்வாறு வகைப்படுத்துகிறது. இதற்காகவே விடுதிகள் மற்றும் சிற்றுண்டிச்சாலை ஒப்புதல் மற்றும் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் மத்திய சுற்றுலாத்துறை, மாநில அரசுகள், விடுதி மற்றும் சுற்றுலாத்துறை சங்கங்களின் பிரதிநிதிகள் இதில் உறுப்பினர்களாக உள்ளனர்.

2000-ம் வருட மார்ச் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 1164 விடுதிகள் உள்ளன. அவைகளில் 72,156 அறைகள் உள்ளன. இந்த விடுதிகள் அனைத்தும் சுற்றுலாத்துறையால் அங்கீகரிக்கப்பட்டவை ஆகும். தற்சமயம் 157 ஒரு நட்சத்திர விடுதிகள், 377 இரண்டு விடுதிகள், 356 மூன்று நட்சத்திர விடுதிகள், 94 நான்கு நட்சத்திர விடுதிகள், 62 ஐந்து நட்சத்திர விடுதிகள், 54 ஐந்து நட்சத்திர டீலக்ஸ் விடுதிகள், 64 பாரம்பரியத் தன்மை கொண்ட விடுதிகள் இந்தியாவில் உள்ளன. இந்த விடுதிகள் சுற்றுலா வளர்ச்சிக்கு பெரும் சேவை செய்து வருகின்றன.

மேலே கூறப்பட்ட நோக்கங்களையும், பணிகளையும் நிறைவேற்றும் வகையில், இந்திய சுற்றுலா வளர்ச்சிக்கழகம், மைய அரசின் 'சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் ஒத்துழைப்புடன் சுற்றுலாவை முன்னேற்றி வருகிறது. 1969-ம் ஆண்டு 129 அறைகளையும் ஐம்பது பேரூந்துகளை மட்டுமே கொண்டிருந்த இக்கழகம் இன்று மூவாயிரத்துக்கும் மேற்பட்ட விடுதி அறைகளையும், முந்நூறுக்கும் மேற்பட்ட பேருந்துகளையும் கொண்டு திறமையாகச் செயல்பட்டுவருகிறது. எனவே புதுத்தெம்புடன் வளர்ந்துவருகிறது. இந்தியாவில் சுற்றுலா ஒரு தனித்துறையாக அங்கீகரிக்கப்பட்ட பிறகு இந்த கழகத்தின் செயல்பாடு பன்மடங்கு அதிகரித்துள்ளது.

இந்திய சுற்றுலா வளர்ச்சி கழகம் புது டெல்லியில் உள்ள தனது தலைமைக் கழகத்தில் விற்பனைப் பிரிவு ஒன்றையும் துவங்கி சுற்றுலாப் பயணிகளுக்கு சேவை செய்து வருகிறது. சுற்றுலாவை வணிகமயமாக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்த இந்திய சுற்றுலா வளர்ச்சிக்

கழகத்தில் உள்ள பல்வேறு நிபுணர் குழுக்களும், ஆலோசனைக் குழுக்களும் நல்ல முறையில் செயல்பட்டு சுற்றுலாத்துறை வளர்வதற்குப் பாடுபட்டு வருகின்றன.

# பாடம் 12

# தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகம்

இந்திய சுற்றுலாத்துறையில் தமிழ்நாடு மூன்றாவது இடம் வகிக்கின்றது. இங்கே சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் அம்சங்கள் அனைத்தும் காணப்படுகிறது. மலைவாசஸ்தலங்கள், நீர்வீழ்ச்சிகள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பழங்கால கோவில்கள், சிற்பங்கக் குகைகோவில்கள் போன்ற பல சுற்றுலா இடங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. எனவே தமிழ்நாட்டில் சுற்றுலா ஒரு சிறப்பிடம் பெற்றுள்ளது. தமிழக அரசும் சுற்றுலாவை மேம்படுத்த இந்த துறைக்கு தொழில் மதிப்பை வழங்கி உள்ளது. அதாவது தொழிற்துறைக்குக் கொடுக்கப்படும் அனைத்துச் சலுகைளும் சுற்றுலாத்துறைக்கும் வழங்கி உள்ளது. இதன்விளைவாக 1998ஆம் ஆண்டில் மட்டும் தமிழகத்திற்கு உள்நாட்டு சுற்றுலாப்பயணிகள் இரண்டு கோடி பேரும் 197 லட்சம் வெளிநாட்டுப் பயணிகளும் வந்துள்ளார்கள். 2000-ம் ஆண்டில் 2,29,81,882 உள்நாட்டு சுற்றுலா பயணியரும், 7,86,165 வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் வந்துள்ளார்கள்.

### தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

சுற்றுலாத்துறையின் மூலம் கிடைக்கும் வருவாயினைக் கருத்தில் கொண்டு அந்த துறையை மேம்படுத்த தமிழக அரசு சிறப்புக் கவனம் செலுத்தியது. இதன் விளைவாக அமைக்கப்பட்டதுதான் தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் (Tamil Nadu Tourism Development Corporation) ஆகும்.

### அமைப்பு:

- தமிழக அரசால் 1971ஆம் ஆண்டு ஜூலை 1-ம் தேதி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் அமைக்கப்பட்டது.
- இதன் நோக்கமாக தமிழக சுற்றுலா மையங்களை மேம்படுத்துதல், குறைந்த வருமானம் பெறுவோர் தங்குவதற்குரிய ஓய்வு விடுதிகளை நிர்மானித்து நிர்வாகம் செய்தல், சுற்றுலா பற்றிய விளம்பரம் செய்தல், தொடர் பயண சுற்றுலாக்களை நடத்துதல் போன்ற அடிப்படை நோக்கங்களைக் கொண்டுள்ளது.
- தமிழக சுற்றுலாத்துறை ஐம்பது லட்சம் மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சின்னம் குடை ஆகும்.

- இச்சுற்றுலா கழகத்தின் தலைமை இடம் சுற்றுலாத்துறை வளாகம், சென்னையில் செயல்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தங்கும் விடுதிகள், படகு இல்லங்கள், பேருந்துகள் போன்றவை இயக்கப்பட்டு வருகின்றன.

**தமிழகத்தில் இவை ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.**

**சென்னை மண்டலம்**

- மாமல்லபுரம், முட்டக்காடு, காஞ்சிபுரம், வண்டலூர் போன்ற பகுதிகளை உள்ளடக்கியது.

**மதுரை மண்டலம்**

- கொடைக்கானல், பழனி, ராமேஸ்வரம் போன்ற பகுதிகளும், திருச்சி மண்டலத்தில் தஞ்சை, நாகப்பட்டிணம், சிதம்பரம் உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கியது.

**திருநெல்வேலி மண்டலம்**

- கன்னியாகுமரி, குற்றாலம் திருச்செந்தூர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது,

**கோவை மண்டலம்**

- உதகை, முதுமலை, ஏற்காடு, ஒகேனக்கல் போன்ற பகுதிகளும் இடம் பெற்றுள்ளன.
- கோவை மண்டலத்திலிருந்தே கழகத்திற்கு அதிக வருவாய் கிடைத்து வருகிறது.
- 1998-ம் வருடம் மட்டும் 533 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டது. 2000-ம் ஆண்டில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மூலம் தமிழ்நாட்டில் 666.95 கோடி ரூபாய் அந்நிய செலவாணி கிடைத்துள்ளது.

**சிறப்புப் பணிகள்**

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் 115 தகவல் நிலையங்கள், 42 பயணியர் அலுவலகங்கள், 50 செய்தி நிறுவனங்கள் ஆகியவற்றைக் கொண்டு செயல்படுகின்றது.

- புதுடில்லி, சென்னை, ராமேஸ்வரம் ஆகியன நகரங்களில் இதன் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

- சுற்றுலாப் பயணிகள் தமிழகத்தைப் பற்றிய முழுமையான தகவல்களைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு சென்னையில் இரண்டு கோடி ரூபாய் செலவில் சுற்றுலா தகவல் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு உணவு விடுதி என்ற பெயரில் புகழ்பெற்ற சுற்றுலா மையங்களில் உண்ணும் விடுதிகளையும் தங்கும் விடுதிகளையும் கட்டி சேவை செய்து வருகிறது.

  இக்கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் சுமார் 36 தங்கும் விடுதிகள் உள்ளன. இவற்றுள் நட்சத்திர தகுதிபெற்ற ஓட்டல்கள் ஐந்து உள்ளன. இவை முறையே மதுரை, கோயம்புத்தூர், ஒகேனக்கல், ஏற்காடு ஆகிய இடங்களில் உள்ளன.

- இக்கழகம் சென்னை, சிதம்பரம், கோயம்புத்தூர், குன்னூர், குற்றாலம், ஒகனேக்கல், ஓசூர், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, கும்பகோணம், கொடைக்கானல், மதுரை, மாமல்லபுரம், மேல் மருவத்தூர், முதுமலை, நாகப்பட்டினம், பழனி, பிச்சாவரம், ராமேஸ்வரம், ராணிபேட்டை, சேலம், சாத்தூர், தஞ்சாவூர், திருச்சி, திருச்செந்தூர், திருநெல்வேலி, திருத்தணி, உழுந்தூர் பேட்டை, உதகமண்டலம், ஏர்க்காடு ஆகிய இடங்களில் விடுதிகளை அமைத்து நிர்வகித்து வருகிறது.

- இதில் கடற்கரை விடுதியையும் நடத்தி வருகிறது இதுதவிர தமிழ்நாடு முழுவதிலும் மொத்தம் பத்து இளைஞர் விடுதிகளையும் ஏற்படுத்தி உள்ளது.

- கோவை, மதுரை, திருச்சி முதலிய நகரங்களிலிருந்து அவற்றைச் சுற்றியுள்ள சுற்றுலா மையங்களைச் சுற்றிப்பார்க்க தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தகவல் மையம் சென்னை அண்ணாசாலையில் உள்ள தேவநேயப் பாவாணர் மைய நூலகத்தில் செயல்பட்டு வருகிறது.

- வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பயணிகளின் நலன்களைக் கருத்தில் கொண்டு இந்த மையம் தொடங்கப்பட்டது.

- சுற்றுலாப் பயணிகளுக்கான தகவல்கள் இங்கு கிடைக்கும். சுற்றுலா கையேடுகள் பிரதிகள், வரைபடங்களும் கிடைக்கும். சுற்றுலாவுக்கான பயணச்சீட்டுகள் முன்பதிவு வசதியும் இங்கு உண்டு.

- இவ்வாறு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அரிய முயற்சியாலும், தமிழக அரசின் ஆதரவாலும் சுற்றுலாத்துறை தமிழகத்தில் சிறப்பான வளர்ச்சியடைந்துள்ளது.

- மேலும் தமிழக சுற்றுலாத்துறை அயல்நாட்டு மக்களால் ஈர்க்கப்படுவதால் இந்திய அரசு அதிக அளவில் அன்னிய செலாவணியை ஈட்டி வருவதுடன் தேசியப் பொருளாதாரத்தையும் உயர்த்தி வருகிறது.

- 1995 - 96-ம் வருட மதிப்பீட்டின் படி சுற்றுலா மூலம் தமிழகத்தில் 9,76,680பேர் நேரடி வேலை வாய்ப்பும், 12,22,587 பேர் மறைமுக வேலைவாய்ப்பும் பெற்றனர்.

- இவ்வாறு பல திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்படுவதன் மூலம் தமிழக சுற்றுலாத்துறை பெருமளவில் லாபம் சம்பாதித்து வருகிறது. இது பிற மாநிலங்களில் இல்லை குறிபிடத்தக்கதாகும்.

- சுற்றுலாப்பயணிகள் கம்ப்யூட்டர் திரையைத் தொட்டவுடன் தமிழ்நாடு சுற்றுலா பற்றிய அனைத்து விபரங்களையும் அறிந்து கொள்ளும் வகையில் தொடுதிரைக் கம்ப்யூட்டர் உருவாக்கப்பட்டுள்ளது. இன்னும் பல்வேறு தொழில்நுட்பமும் திட்டங்களும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அரிய முயற்சியாலும், தமிழக அரசின் ஆதரவாலும் சுற்றுலாத்துறை தமிழகத்தில் சிறப்பான வளர்ச்சியடைந்துள்ளது. மேலும் தமிழக சுற்றுலாத்துறை அயல்நாட்டு மக்களால் ஈர்க்கப்படுவதால் இந்திய அரசு அதிக அளவில் அன்னிய செலவாணியை ஈட்டி வருவதுடன் தேசியப் பொருளாதாரத்தையும் உயர்த்தி வருகிறது. சுற்றுலா மூலம் தமிழகத்தில் மக்கள் நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பு பெறுகின்றனர்.